குண்டூசி
டிசம்பர் 52....8 அணு
யுவா பிக்சர்ஸ்
சியாமளா
ஆஷாலதா நடித்த

மணக்கில் சிறந்தது
மறதியை போக்குவது
மகிழ்ச்சி அளிப்பது
மதியை வளர்ப்பது
மக்கள் விரும்புவது

M.S

No.1

பட்டணம் பொடி

ஒன்றே!

மோகன்
கம்பெனி

B.A. Raju.

தந்தி. EMMES. த. பெ. எ. மதராஸ் 1.

பிராஞ்சு :—எம். எஸ். பொடி டிப்போ. கடலூர் என். டி.

லிப்டன்ஸ்
ஹிமாலயன் கோல்டன்
டஸ்ட் டீ
LIPTON'S GOLDEN DUST TEA
LIPTON'S
HIMALAYAN BRAND
FINEST GOLDEN DUST TEA
MADRAS
'சிறந்த தங்க நிற பானம்'
Nimmi
LGDX (B) 47 TM

இந்திய நாட்டு உபசரிப்பு வழக்கத்தின் முதற் பண்பு
தாம்பூல விசாரணை
தாம்பூலத்தின் தனிச்சிறப்பு
கீதா வாசனை பாக்குத்தூள்
GEETHA
தயாரிப்பவர்கள்
R. Natarajan
வேல்ஸ் இண்டஸ்ட்ரியல்ஸ், மதராஸ்-21.
VEL'S INDUSTRIALS, MADRAS-21.

134138



" நான்
எப்பொழுதும்
லக்ஸ் டாய்லட் சோப்
உபயோகிக்கிறேன் "
என்று கூறுகிறார் *பத்மினி*

இனிய மணத்துடன்கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான
சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 330-50 TM

மணிமார்க்

அலுமினியம்

குக்கர்



சுலபமாகவும் துரிதமாகவும் சமையல் தயாரிப்பதற்கு சிறந்த பாத்திரம். பதார்த்தங்களின் **(Vitamins)** சத்து விணுகாமல், தயாரிக்கப்படுகிறது. சாதம் நன்ருக வெந்து மல்லிகைப் பூ மாதிரி இருக்கும்.

பட்டணம் படி அளவு

$\frac{1}{8}$ படி	$\frac{1}{4}$ படி	$\frac{1}{2}$ படி
விலைகள்		
ரூ. 12-8-0	17-8-0	22-8-0

F. O. R MADRAS

அழகப்பா இண்டஸ்ட்ரியல்ஸ்

அலுமினியம் பாத்திரத் தொழிற்சாலை

வண்ணுரப்பேட்டை, மதருஸ்-21.

குண்டூசி

டிஸம்பர் 1952

இந்த ஊசியில்

போதும், சமூகப் படம்!	தலையங்கம்	5
பரஸ்பரம்	...	6
லதா மங்கேஷ்கர் ...	பேட்டி	7
இது செய்தி ...	படச் செய்திகள்	10
எஸ். டி. சுப்புலக்ஷ்மி	—வாழ்க்கை வர்ணனை	12
எஸ். டி. சுப்புலக்ஷ்மி ...	ஆர்ட் படம்	17
கிருஷ்ண குமாரி ...	மூவர்ணப் படம்	18
நுனிப்புல் ...	"வெட்டுக்கிளி"	20
மேடையும் திரையும்	— டாக்டர் வி. ராமமூர்த்தி	26
பூங்கோதை ...	படக் காட்சிகள்	27
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	32
பட உலக 'பப்பாஜி'	"குதூகலன்"	42
"யுகிவாரீரு" ...	பட விமர்சனம்	48
பொதுஜனம் பேசுகிருர்	...	51
புஸ்தகப் பொழுது	...	57
"மனிதன்" ...	ஆர்ட் படம்	59
கிரிஜா ...	ஆர்ட் படம்	60
சந்திரிகாவின் காதலன் ...	"சாவி"	61
பிரம்மலோகம் ...	ஸ்டுடியோச் செய்திகள்	73
நடனம் ஆடினர் ...	"நந்தி"	76

வருஷ சந்தா :

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6

வெளி நாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி :

இந்தியா 8 அணு, வெளிநாடு 12 அணு, இலங்கை 50 சதம்.

குறிப்பு :—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

குண்டூசி

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நிகரற்ற விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

டிஸம்பர், 1952

பட்டை—6	ஊசி—3	பிரதி—63

போதும் சமூகப் படம்!

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முந்திய சினிமாப் பத்திரிகைகளை நீங்கள் புரட்டினீர்களானால், "புராணப் படங்கள் போதும், சமூகப் படங்கள் வேண்டும்" என்ற ஓலம் பக்கத்திற்குப் பக்கம் காணப்படும். நான்கூட கைவலியெடுக்கும் வரையில் இதுமாதிரிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறேன். இது மட்டுமல்ல, 'நடனத்தைப் படங்களில் அதிகம் புகுத்த வேண்டும்' என்றும் நிறைய எழுதியிருக்கிறேன். அதே கையால், இன்று, "நடனம் படங்களில் புகுத்தப்படுவது குறைய வேண்டும்" என்றும் "சமூகப் படங்கள் போதும்" என்றும் எழுதவேண்டிய துர்பாக்கிய நிலைக்கு வந்திருக்கிறது நம் படத் தொழில்.

கரும்பு ருசியானது என்பதற்காக வேருடன் கெல்லி வருகின்றனர் நம் படத் தயாரிப்பாளர்கள். 'சென்ற சில வருஷப் படங்களில் நடனம் புகுத்தப் படாத படமேயில்லை' என்று சொல்லி விடலாம். இனிப்பென்றாலும் எவ்வளவுதான் தின்ன முடியும்! இப்பொழுது படங்களில் நடனத்தைக் கண்டு எரிந்து விழும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

புராணப் படங்களிலேயே மூழ்கிக் கிடந்த நம் தயாரிப்பாளர்கள் அவைகளை வெறுக்கத் தொடங்கியதும் பக்திமான்கள் பற்றிய படங்களில் முனைந்தனர். ஒரே பக்தருக்கு பல சான்ஸ்களும் அளித்தார்கள். பக்தர்களை ஒரு வழியாக ஒழித்த பின் கிராமியக் கதைகளில் இறங்கினர். இந்த ஸ்டாக் சீக்கிரமாய் தீர்ந்துவிடவே தாங்களே சில கிராமியக் கதைகளையும் சிருஷ்டித்தார்கள் படத் தயாரிப்பாளர்கள்.

இதெல்லாம் ஆனபின், அவர்கள் ஈடுபட்டிருக்க வேண்டியது சரித்திரக் கதைகளில். ஆனால், அதுமாதிரியான படங்களைத் தயாரிப்பதற்கு அவசியமான பொறுமையும், திறமையும் அவர்களுக்கு இல்லாததால், சரித்திரக் கதைகள் போன்று ராஜா மந்திரிக் கதைகளை சிருஷ்டித்துப் படம் தயாரித்தனர். கடைசியாக உள்ளது சமூகக் கதைகள் தாம். வேறு வழியில்லாததால் நம் படத் தயாரிப்பாளர்கள் சமீப காலமாய் சமூகப் படங்கள் தயாரிப்பதில் முனைந்திருக்கிறார்கள். இரண்டே வருஷ காலத்திற்குள்ளாக "போதும், சமூகப் படம்!" என்று ஜனங்கள் அலறும்படி செய்துவிட்டார்கள்.

இனி என்ன செய்வதென்று படத் தயாரிப்பாளர்களுக்குப் புரியவில்லை? சமூகப் படங்களுக்கு வசூல் குறையாமல் இருப்பதற்காக சில பட முதலாளிகள் வக்ரமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏதேதோ ஜகஜ் ஜாலங்கள் செய்து பார்க்கிறார்கள். ஆஸ்திகத்திற்குப் பதில் நாஸ்திகத்தையும் தேச விசுவாசத்திற்குப் பதில் அராஜகத்தையும், பணக்காரனை இழிவுபடுத்தி கம்யூனிஸத்தையும், ஒழுக்க மிக்க மண வாழ்க்கைக்குப் பதில் விபசாரத்தையும், மற்றும் எதை எதையோ படங்களில் உன்னதப் படுத்தி, அதன் மூலமாவது பண வசூலா

கிறதா என்று பார்க்கிருர்கள். பெரும்பாலான சமூகப் படங்கள் ஒன்றன் பின்னென்ருய் மண்ணைக் கவ்வுவதுதான் கண்ட பலன்.

இப்படுதோல்விகள் எதனல் ஏற்படுகின்றன? ஜனங்களுக்கு சமூகப் படங்கள் பிடிக்கவில்லையா? எனின், அடுத்தபடியாக என்ன மாதிரியான படங்களைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிருர்கள்? சுலபமாய் கேட்டுவிட்ட இந்தக் கேள்விகள்தான் பட உலகில் புரியாத மாபெரும் கேள்விகளாக இருக்கின்றன.

பரஸ்பரம்

“குண்டூசி” அன்பர்கள் “தீபாவளி மலரைப்” பெற்று அபாரமான திருப்தியும் சந்தோஷமும், அடைந்திருக்கிருர்கள் என்பது அவர்களிட மிருந்து எமக்கு வந்துள்ள முன்னூறுக்கு மேற்பட்ட கடிதங்களி லிருந்து தெரிகிறது. அவைகளை “ஏன் வெளியிட வில்லை?” என்று கேட்டிருக்கிருர்கள் பல வாசகர்கள். அவற்றையெல்லாம் தொடர் கதை போல் வெளியிட்டு வருவதில் எனக்கு இஷ்டமில்லை; சாத்தியமும் இல்லை.

ஆனல், அதற்குப் பதில், உங்களுக்கு உண்மையிலேயே ஒரு அருமையான தொடர் கதையை அளிக்கப் போகிறேன். “ஆனந்த விகடன்” பத்திரிகையில் “காஞ்சனையின் கனவு”, “பெண் மனம்” போன்ற பிரபல நாவல்களை நீங்கள் படித்திருப்பீர்கள். “காஞ்சன” படத்தையும் பார்த்திருப்பீர்கள். “லக்ஷ்மி”யின் நாவல்களைப் பற்றி நான் அதிகம் எழுத வேண்டியதில்லை. தமிழ் வாசகர்களிடையே பிரமாதமான புகழ் பெற்றுள்ள இந்த நாவல்களின் ஆசிரியை “லக்ஷ்மி” குண்டூசிக்கும் ஒரு தொடர் கதையை எழுதிக் கொடுத்திருக்கிருர்—என்பதை, சந்தோஷத்தோடு அறிவிக்கிறேன். இருநூறு வருஷங்களுக்கு முற்பட்டதான இக்கதை மிக சுவாரஸ்யம் பொருந்தியதாய் இருக்கிறது. “விரதத்தேவன் கோட்டை”க்குள் நீங்கள் ஜனவரி மாதம் 1ந் தேதியன்று பிரவேசிக்கலாம்.

மற்றும் இன்னெரு சந்தோஷச் செய்தி. சில மாதங்களுக்கு முன், காகிதக் கஷ்டம் காரணமாக, மற்ற பத்திரிகைகள் பக்கங்களைக் குறைக்கவும், விலையைக் கூட்டவும் செய்த போது, நாம் எட்டணு விலைக்கே, எட்டு பக்கங்கள் அதிகமாக அளிக்கத் தொடங்கினேம். இப்பொழுது ஜனவரி மாதம் முதல் மேலும் 8 பக்கங்கள் அதிகரிக்கப் போகிறேம்.

ஜனவரி மாத “குண்டூசி” முற்றிலும் புத்தப் புது மாறுதல்களுடன் கண்ணைக் கவரும் முறையில் இருக்கும்.

தொடர் கதையை நீங்கள் இடைவிடாமல் படிக்க விரும்புவீர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகலால், உங்கள் ஊர் “குண்டூசி” ஏஜண்டிடம் பிரதிகள் தவருமல் கிடைப்பதற்கு இப்பொழுதே ஏற்பாடு செய்து விடுங்கள். ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில், “குண்டூசி” ஏஜன்ஸியைப் பெறும்படி ஏஜண்டுகளைத் தூண்டுங்கள். இவை சாத்திய மில்லையானல், எங்கள் காரியாலயத்துக்கே நேராக ஒரு வருஷ சந்தாவை (இந்தியா—இலங்கை ரூ. 6; இதர நாடுகள் ரூ. 9) அனுப்பி வையுங்கள்.

“வருஷம் முடிந்து வருகிறதே; உங்கள் கேலண்டர் பற்றிய விஷயம் என்ன?” என்று நீங்கள் கேட்பதற்கு முன்பாக நானே சொல்லி விடுகிறேன். 1953ம் வருஷத்திய “குண்டூசி” கேலண்டர்கள் லாவண்யம் மிக்க முறையில் அச்சாகி வருகின்றன. **இந்த வருஷக் காலண்டர் ஆறு தாளில் அழகு மிக்க ஆறு வர்ணப் படங்களுடன் வெளிவரும்.** ஒவ்வொரு தாளிலும் இரண்டு மாத தேதிகள் இருக்கும்.

இந்த வருஷக் கேலண்டரை பனிரண்டணு விலைக்கே வெளியிட வேண்டுமென்று அநேக நேயர்களும், ஏஜண்டுகளும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கிணங்க, நாம் வழக்கம் போலவே “குண்டூசி” காலண்டரை பனிரண்டணு விலைக்கே வெளியிடப்போகிறேம்.

திரைக் கோகிலம் லதா மங்கேஷ்கர்

நமது நிருபர் பேட்டி

[காலையில் எழுந்திருந்து ரேடியோவைத் திருப்பினால் **லதா மங்கேஷ்கரின்** பாட்டுகள்தான். நடுப்பகலிலும், பிற்பகலிலும்கூட அவரது பாட்டுகளை நிறையக் கேட்கிறோம். இரவு வானொலி நிகழ்ச்சிகள் முடிவடையும் போதோ, லதாவின் குரலிசை இல்லாமல் ரேடியோப் பெட்டி ஓசையை நிறுத்தாது. சினிமாவிலோ வென்றால், லதாவின் பாடடுகள் இல்லாத படங்கள் மிகக் குறைவு. இப்படியாக இந்தியா பூராவிலுமுள்ள ரஸிகர்களின் மனதை தம் சங்கீதத்தின் மூலம் ஒரேயடியாகக் கவர்ந்திருக்கும் இந்த திரைக் கோகிலத்தை நமது விசேஷ நிருபர் "**ரதா**" பேட்டி கண்டு இங்கு எழுதியிருக்கிறார்.—**ஆசிரியர்**.]

சமீபத்தில் ஏவி. எம். "லட்கி" (ஹிந்தி "பெண்") பட சம்பந்தமாக லதா மங்கேஷ்கர் சென்னைக்கு வந்திருந்தார். அவரது பாட்டை நேரிடை கேட்கும் அதிருஷ்டமும், அவரைக் கண்டு பேசும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தன. டைரெக்டர் எம். வி. ராமனுக்கு இந்த விஷயத்தில் நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். மூச்சுவிடக்கூட நேரமில்லாது, தாம் வந்த காரியத்தில் மும்முரமாக மூழ்கி இருந்த லதாவை, நான் சந்தித்து பேட்டி காண்பதற்கான சௌகரியங்களைச் செய்து கொடுத்தவர் அவர் தான்.

'சராசரியாக நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய்கள் சம்பாதிக்கும் ஒரு பிரபல பாடகியாயிற்றே, எவ்வளவு டம்பமாக இருக்கிறாரோ' என்ற எண்ணத்துடன் அவரைக் காண, அவர் தங்கியிருக்க 'கனிமரா' ஹோட்டலுக்குப் போனேன். ஆனால் அவரைப் பார்த்ததும் அப்படியே ஸ்தம்பித்துப் போனேன். மிகவும் எளிய உடை; ஆடம்பரமான ஆபரணங்கள் எதுவும் கிடையாது; குழந்தைபோன்ற கபடமில்லாத, சதா சிரித்த முகம். இப்படியாகக் காட்சியளித்த லதாவைக் கண்டு யார்தான் ஆச்சரியப்பட மாட்டார்கள்! பேட்டியைப் பற்றிக் கூறுமுன், லதாவின் வாழ்க்கை வர்ணனையை சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். அவர் மராத்திய பிராம்மண குலத்தைச் சேர்ந்தவர். தீனநாத் மங்கேஷ்கர் என்பவரின் முதல் புத்திரியாக, 1929ம் வருஷம் செப்டம்பர் மாதம் 28ம் தேதி, மத்திய பாரத்திலுள்ள இந்தூரில், மங்கேஷ் என்ற கிராமத்தில் பிறந்தவர். அவரது தந்தை நாடக மேடைப் பாடகர்; தமது சொந்தத்திலேயே 'பலவந்த சங்கீத மண்டலி' என்ற நாடகக் கம்பெனியையும் நடத்தி வந்தார்.

லதாவின் ஐந்தாவது வயதிலேயே, அவரது தந்தை இவரை சங்கீதக் கலையில் பயிற்றுவித்தார். எட்டாவது வயது முதல் பல பொது நிகழ்ச்சிகளில் பாடிப் பெயரும் புகழும் பெற ஆரம்பித்தார் லதா. அது தவிர தந்தையின் நாடக மண்டலி நாடகங்களில் பால பாத்திரங்களில் நடிக்கவும் செய்தார்.

1936ம் வருஷம், லதாவின் தந்தை தாம் நடத்தி வந்த நாடக மண்டலியை மூடவேண்டியதாகிவிட்டது. பலவந்த் பிக்சர்ஸ் கார்ப்பரேஷன் என்ற படக் கம்பெனியை ஆரம்பித்து படங்கள் தயாரித்தார். அவைகளிலும் லதா சிறு பாகங்களில் நடித்திருக்கிறார். 1941ம் வருஷம் லதாவின் தந்தையார் மரணமடைந்தார். குடும்பம் கஷ்ட நிலையில் இருந்தது. மாஸ்டர் விநாயக் என்ற வடநாட்டு டைரெக்டரின் பல படங்களில் அவர் நடித்திருக்கிறார். 1947ம் வருஷம், அவர் சினிமாவில் நடிப்பதை அடியோடு நிறுத்தி, குரல் இரவல் கொடுப்பதில் கவனம் செலுத்தலானார்,

டைரெக்டர் எம். வி. ராமன் பரஸ்பரம் அறிமுகம் செய்துவைத்த பின் பேட்டி ஆரம்பமாயிற்று:

ரதா:—நீங்கள் முதலில் பாடியது எப்பொழுது, எந்தப் படத்தில்?

1

வும் பிரியம். படே குலாம் அலி, ரோஷனுரா பிகம் போன்ற பாடகர்களிடம் எனக்குத் தனியானதொரு மதிப்பும் மரியாதையும் எப்பொழுதும் உண்டு.

ராதா :—தமிழ் நாட்டு சாஸ்திரீய சங்கீதம் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன ?

லதா :—நான் அதிகமாக யாருடைய சங்கீதத்தையும் கேட்டதில்லை. எம். எஸ். சுப்புலக்ஷ்மியின், பாட்டுகளையும், சௌடய்யா


2

லதா :—1942ம் வருஷத்தில் "பஹிலே மங்கள கௌரி" என்ற படத்தில். அதில் நான் நடித்துக்கூட இருக்கிறேன்.

ராதா :—நம் படங்களில் மேனுட்டு சங்கீதம் புகுத்தப் படுவது குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன ?

லதா :—நான் அதை விரும்பவில்லை. நம் சங்கீதத்தையே அது குட்டிச் சுவராக்கிவிடும்.

ராதா :—ஆகவே, அந்நிய சங்கீதமே கூடாது என்கிறீர்களா ?

லதா :—அப்படியில்லை. பார்ஸி, அராபிக் சங்கீதம் வரவேற்கத் தக்கவை. நமக்கு மேனுட்டு சங்கீதம் தேவையில்லை. ஏனெனில் நமது சங்கீதத்திலேயே எவ்வளவோ நல்ல விஷயங்கள் கையாளப்படாமல் இருக்கின்றன.

ராதா :—நீங்கள் பாடிய பாட்டுகளுக்குள் உங்களுக்கு மிகவும் திருப்திகரமாகப் பட்டது எது.

லதா :—"மஹல்" என்ற படத்தில் நான் பாடியுள்ள 'அயேக் அன்வலெ' என்ற பாட்டு.

ராதா :—நம் நாட்டு சாஸ்திரீய சங்கீதம் பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன ?

லதா :—எனக்கு அவைகளில் மிக

3

வின் பிடில் வாசிப்பையும் நான் கேட்டிருக்கிறேன். அவைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன.

ராதா :—எங்கள் சினிமா சங்கீதம்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

லதா :—சங்கீத டைரெக்டர்களுக்குள் காலஞ்சென்ற சுப்பராமனின் வழி எனக்குப் பிடிக்கும். பானுமதியின் பாட்டுகளை நான் விரும்பிக் கேட்கிறேன்.

4

5

6

1. "லட்கி" படத்திற்குப் பாட வந்துள்ள லதாவும், கீதாராயும்.
2. "குண்டூசி" மானேஜர் ராதாகிருஷ்ணன், எம். வி. ராமன், லதா.
3. லதா "குண்டூசி"யை ஆவலுடன் புரட்டுகிருர்.
4. லதா "குண்டூசி"க்காக எடுத்து அளித்த பிரத்தியேக போட்டோ.
5. பேட்டி ஆரம்பம்.
6. லதாவின் சகோதரி உஷா, எம். வி. ராமன், லதா, ராதாகிருஷ்ணன்.

போட்டோ : கிரீன் லீ பேர்ல்

ராதா :—சென்னையிலுள்ள ஸ்டுடியோக்கள்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

லதா :—பம்பாய் ஸ்டுடியோக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்குள்ள ஸ்டுடியோக்கள் பிரமாதமாக இருக்கின்றன. இங்கு வேலை நடக்கும் முறைகளை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

ராதா :—எங்கள் படங்களை நீங்கள் பார்ப்பது உண்டா?

லதா :—நான் "பாதாள பைரவி" தெலுங்குப் படம் ஒன்றே ஒன்றைத்தான் பார்த்திருக்கிறேன். அந்த மாதிரிப் படங்கள் எனக்குப் பிடிக்காது. அது குழந்தைகளுக்கான படம்.

ராதா :—நீங்கள் ஏன் தமிழ் கற்றுக்கொண்டு, நிரந்தரமாக சென்னையிலேயே தங்கிவிடக்கூடாது?

லதா :—தமிழ் கற்றுக்கொள்ள நான் பெரிதும் விரும்புகிறேன். ஆனால் நான் இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிடுவதை விரும்பவில்லை.

ராதா :—வாழ்க்கையில் உங்கள் லட்சியம் என்ன?

லதா:—சங்கீதக் கலையின் உச்ச நிலையை நான் அடைய விரும்புகிறேன். நான் சங்கீதத்தில் கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. காலஞ்சென்ற என் தந்தையின் விருப்பம் அதுதான்; அதைப் பூர்த்தி செய்வதே என் வாழ்வின் லட்சியம்.

ராதா :— உங்கள் சொந்தப் பட விஷயமாகச் சொல்லுங்கள்.

லதா :—'மியூஸிக் மேக்கர்ஸ்' என்ற கம்பெனியை சில பாகஸ்தர்களுடன் சேர்ந்து ஆரம்பித்திருக்கிறேண். "சுரேலி" என்ற ஹிந்திப் படத்தையும், "வதல்" (புயல்) என்ற மராத்திப் படத்தையும் தயாரிக்கப் போகிறேன்.

ராதா :—வடநாட்டு நக்ஷத்திரங்களில் உங்களுடைய அபிமான நக்ஷத்திரங்கள் யார்?

லதா :—நடிகர்களில் அசோக் குமாரும் நடிகைகளில் கீதா பலியும் எனது அபிமான நக்ஷத்திரங்கள்.

ராதா :— உங்கள் அபிமானத்திற்குப் பாத்திரமான பாடகி யார்?

லதா :— நூர்ஜஹான்தான். அவர் என் பிராண சிநேகிதி—சகோதரி—குரு எல்லாம். அவருடைய பாட்டுகள் என்றால் எனக்கு உயிர். அவரை நான் என்றுமே —

[தொடர்ச்சி 72-ம் பக்கத்தில்]

தமாஷா வரி குறைவு

சென்னை ராஜ்யத்தில், இவ் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல், ஸெப்டம்பர் மாதத்தோடு முடிந்த அரை வருஷத்தில் தமாஷா வரிமூலம் 56 லக்ஷம் ரூபாய்கள் கிடைத்திருக்கின்றன. சென்ற வருஷம் இந்த மாதங்களில் 62 லக்ஷத்திற்கும் அதிகமாகவே வசூலாகி யிருக்கிறது. 'இந்த வருஷத்தில் ஒன்றேகால் கோடிக்கும் அதிகமாகவே வசூல் ஆகும்' என்று சென்னை சர்க்கார் பட்ஜெட் போட்டிருக்கிறார்கள்.

புதுப் படங்கள்

ஜுபிடரின் இரு பாகஸ்தகர்களும் சென்ற மாதம் 26-ம் தேதி இரண்டு படங்களை (தலைமை வகித்து) ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். கோவை, லக்ஷ்மி நாராயணன் பிக்சர்ஸார், அன்றைய தினம் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் தங்களது "ஜெயகுமாரி" என்ற படத்திற்கான ஆரம்ப பூஜையை நடத்தினார்கள். எஸ். கே. மொய்தீன் தலைமை வகித்து காமிராவை முடுக்கி விட்டார். இப்படம், காலஞ் சென்ற ஜி. கே. கோவிந்தஸ்வாமி நாயுடுவின் ஞாபகார்த்தமாகத் தயாரிக்கப்படுகிறதாம்.

அதே தினம், சென்னை நெப்டியூன் ஸ்டுடியோஸில், மொஹிதீன் புரொடக்ஷன்ஸார் தங்களது "ரகஸ்யம்" என்ற படத்தின் ஆரம்ப பூஜா விழாவை நடத்தினார்கள். எம். சோமசுந்தரம் (சோமு) காமிராவை ஓடச் செய்தார்.

ஷியாம் ஷங்கர் பிக்சர்ஸ் என்ற புது படக் கம்பெனியார், "பதிவ்ரதா" என்ற கதையை தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் படங்களாகத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். பி. எஸ். சரோஜா, சிவராவ், ராமசந்திர காஷ்யப், ஜயலக்ஷ்மி ஆகியோர் நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கிறார்களாம். இப்படங்களை சிவராவ் டைரெக்ட் செய்வாரென்று தெரிகிறது.

செய்தி

ராணி பிக்சர்ஸ்

இம் மாதம் முதல் தேதி, திருச்சியில் ராணி பிக்சர்ஸ் என்ற கம்பெனி ஆரம்பமாயிற்று. இவர்கள் பல படங்களை விநியோகம் செய்வார்களெனத் தெரிகிறது.

கிரஹப்பிரவேசம்

விளம்பர நிபுணரான ஜி. எச். ராவ், கோடம்பாக்கத்தில் தாம் புதிதாகக் கட்டியுள்ள பங்களாவின் கிரஹப் பிரவேசத்தை, சென்ற மாதம் 23-ம் தேதி சிறப்பாக நடத்தினர். பிற்பகலில் ஒரு அருமையான விருந்தளித்தார். பட உலகப் பிரமுகர்களும், பத்திரிகாசிரியர்களும் ஏராளமாக வந்திருந்தார்கள்.

நவாபுக்கு ஐயப்பன் அருள்!

நவாப் ராஜமாணிக்கம் அவர்களின் நாடகக் கம்பெனி தற்போது பட்டுக்கோட்டையில் முகாமிட்டு நாடகங்களை நடத்தி வருகிறது. பிறந்தது முதல் பதிமூன்று ஆண்டுகளாகவே ஊமையாக இருந்தான் ஒரு சிறுவன். ராஜமாணிக்கம் ஐயப்பனுக்கு பூஜை செய்து விட்டு, அந்தப் பையனுக்கு விபூதிப் பிரசாதம் கொடுக்கவே அந்தப் பையன் பேச ஆரம்பித்துவிட்டானும்!

சினிமா ரஸிகர்கள் சங்கம்

சென்ற மாதம் 20ம் தேதி, சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர், "உலக வாலிபரின் சந்திப்பு" என்ற குட்டிப் படம் ஒன்றைத் திரையிட்டுக் காட்டினார்கள். அமெரிக்க செய்தி இலாகாவின் சினிமாக் கூடத்தில் நடைபெற்ற இக் காட்சிக்கு கைத்தொழில் மந்திரி டாக்டர் யூ. கிருஷ்ண ராவ் தலைமை வகித்தார். நகரிலுள்ள பல கல்லூரிகளிலிருந்தும் சங்கத்தின் அழைப்புக்கிணங்க பிரதிநிதிகள் வந்து படம் பார்த்தனர்.

ராஜாஜி ஹாலை அடுத்துள்ள கில்ட் ஆப் சர்விஸ் கட்டடத்தில் சென்ற மாதம் 22ம் தேதி இச்சங்கத்தின் கூட்டமொன்று ஸ்ரீ. வி. ஸி. கோபாலரத்னம் தலைமையில் நடைபெற்றது. டைரெக்டர் கே. சுப்ரமண்யம் தமது அமெரிக்க விஜயம் பற்றியும், அமெரிக்க சினிமாத் தொழில் பற்றியும், எஸ். கிருஷ்ணஸ்வாமி தமது சீன யாத்திரை பற்றியும் பேசினார்கள்.

நாடகத்துக்குத் தடை

"நண்பன்" என்ற நாடகத்தை மாகாணத்தில் எங்கும் நடத்தக் கூடாதென சென்னை சர்க்கார் சென்ற மாதம் 12ம் தேதி தடை விதித்திருக்கின்றனர். இந்த நாடகத்தை எம். ஆர். ராதா கோஷ்டியினர் நடித்து வந்தனர். நாடகம் அவதூறான வகையில் இருப்பதாக அவர்கள் காரணம் காட்டியிருக்கின்றனர்.

நாடகங்கள்

சென்ற மாதம் 16-ம் தேதி, "ராணி மனோரமா" என்ற நாடகம், சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் நடைபெற்றது. இது ஒரு சரித்திரக் கற்பனை நாடகம். புதுமைக் கலா நிலயத்தின் அங்கத்தினர்கள் நடித்த இரண்டாவது நாடகம் இது. அவர்களது நூல் நிலைய நிதிக்காக நடைபெற்றது இந்த நாடகம்.

மயிலை, ரஸிக ரஞ்சனி ஸபா ஹாலில், சென்ற மாதம் 18-ம்தேதி, "சரோஜா" என்ற நாடகம் நடந்தது. இந்த சமூக நாடகத்தை, ராஜா நாடகக் குழுவினர் நடித்தார்கள். ஏழைக் குழந்தைகளின் இரவுப் பாடசாலை நிதிக்காக இந்த நாடகம் நடந்தது.

சென்ற மாதம் 22-ம் தேதி, டி. ஆர். ராமநாதன் என்பவரால் எழுதப்பட்ட "நாடோடி" என்ற சமூக நாடகத்தை, மணிமுத்தாறு பொழுது போக்கு சங்கத்தினர் தம் சங்க நிதிக்காக அவர்களது நகரில் நடித்தார்கள்,

சென்ற மாதம் 22, 23, இரு தேதிகளில் ரஸிக ரஞ்சனி ஸபாவின் ஆதரவில் "உயிரோவியம்" நாடகம் நடைபெற்றது. "ஜீவா" எழுதிய இந்த நாடகத்தை டி. கே. எஸ். சகோதரர்கள் திறம்பட நடித்தார்கள்.

தியாகராயநகர், வாணி விலாஸ சபாவின் ஆதரவில் "பெண் தெய்வம்" என்ற சமூக நாடகம், ஸபா அங்கத்தினர்களால் நடிக்கப்பட்டது. இந்த நாடகத்தை எழுதியவர் எஸ். வி. சௌந்தரராஜன் என்பவர்,

[மற்ற செய்திகள் 76-ம் பக்கத்தில்]

வாழ்க்கை வரணனை

பி. ஏ., எம். ஏ. படித்துவிட்டுப் பட்டம் பெற்று, பாரிஸ்டராயிருக்கும் அநேகரை நாம் பார்த்திருக்கிறோம்; கேள்விப்பட்டுமிருக்கிறோம். ஆனால், ஐந்தே வகுப்புகள் படித்துவிட்டு, பாரிஸ்டர் பட்டம் பெற்றவரைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டதுண்டா? கண்டிப்பாய் கேள்விப்பட்டிருக்க முடியாது. ஏனென்றால், இது நடைமுறையில் சாத்தியமே அல்லாத விஷயம். அப்படி யாராவது படிக்காமல் பாரிஸ்டர் என்று தம்மைக் கூறிக்கொண்டிருந்தால், போலீஸார் அவரை ஒன்று பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள்ளோ, அல்லது ஜெயிலுக்குள்ளோ அடைத்திருப்பார்கள்.

சில வருஷங்களுக்கு முன் இப்படியெல்லாம் நடக்கவில்லை! ஒரு ஸ்த்ரீ 'பாரிஸ்டர்' பட்டத்துடன் பட்டவர்த்

அம்மாஞ்சி

தனமாகவே மிகப் பிரசித்தமாய் விளங்கினார். அவரை "பாரிஸ்டர்" என்று செல்லமாக அழைப்பதில் பொதுஜனங்கள் மிகப் பிரியம் கொண்டதோடு, பல நோட்டீஸ்களில் அவரது பெயரை கொட்டை எழுத்துக்களில் போட்டு, 'அவர் பாரிஸ்டர் தான்' என்று ஊர்ஜிதப்படுத்தினர். பட்டப் பகலிலும், பால்போலப் பிரகாசித்த மின்சார விளக்குகள் எதிரிலும், போலீஸார் கண்கள் முன்னரே இவை யெல்லாம் நடந்ததென்றாலும், அவர்கள் மூச்சே விடவில்லை! அவர்கள்கூட இதற்கெல்லாம் உடந்தையாக இருந்துவிட்டார்கள்! ஆனால், அவர்களுக்குத் தெரியாதா என்ன – இந்த "பாரிஸ்டர் ஸ்ரீனிவாச நார்ட்டன்" மீது வழக்குத் தொடர வேண்டுமானால்

எஸ். டி. சுப்புலக்ஷ்மி

இன்று

அவ்வழக்கை ஆங்கிலமே அறியாத-ஜட்ஜாக விளங்கிய – எம். வி. மணியின் 'கோர்ட்டில்' தான் தாக்கல் செய்யவேண்டும் என்று! நீங்களே சொல்லுங்கள் ; அரிச்சுவடி படித்துவிட்டு எம். வி. மணி ஒரு ஜட்ஜாக விளங்கியபோது, ஐந்தாவது வரையில் படித்துள்ள எஸ். டி. சுப்புலக்ஷ்மி ஒரு பாரிஸ்டராக விளங்கியது தவரு

மான ஸம்ரக்ஷணம்

தியாக பூமி

என்ன :மேலும், ''ஸ்ரீவை நார்ட்டன்'' என்ற பட்டத்தை எஸ். டி. எஸ். தா மா க வே சூட்டிக் கொள்ள வில்லையே. அந்தக் காலத்தில் மிகப் பிரசித்தமாக விளங்கிய பாரிஸ்டர் நார்ட்டன் துரையைப் போலப் பேசி, நாடக மேடையில் சக நடிகர்கள் வாயடைத்துப் போகும்படி பிளந்து கட்டிவிடும் திறமையைப் பெற்றிருந்த

அனந்த சயனம்

தால், இந்தப் பட்டத்தை பொது ஜனங்களே அவருக்கு அன்போடு சூட்டி வைத்தார்கள்! எஸ். டி. எஸ்.ஸின் சொந்த ஊர் ஸ்ரீவைகுண்டம் ஆதலால், "ஸ்ரீவை'' என்ற எழுத்துக்களையும் பட்டத்தில் சேர்த்துக் கொண்டனர்.

எஸ். டி. எஸ். குழந்தைப் பருவம் முதலே வெடுக் வெடுக்கென்று பேசும் சுபாவத்தைப் பெற்றிருந்தார். அதனால் மேடையில் நடித்தபோது, அவர் மிகச் சாதுரியமாகவும், சமயோசித மாகவும் பேசி, சக நடிகர்களை வாதத்தில் தோல்வியுறும் படிச் செய்து விடுவார். திரைக்கு முன் நடக்கும் வாதம் திரைக்குப் பின் சண்டையாகவும், மனஸ்தாபமாகவும் பல தடவைகளில் மாறி விடுவதுமுண்டு. அவருடன் சேர்ந்து நடிப்பதற்குக்கூட சில நடிகர்கள் பயந்தனராம்! ஆனால் இதையெல்லாம் எஸ். டி. எஸ். கொஞ்சமும் லக்ஷியம் செய்யவேயில்லை.

'எஸ். டி. எஸ். பிரமாதமாக நடிக்கும் திறமையை பூர்வீகமாகவே பெற்றார்' என்று சொன்னால் மிகையாகாது. அவரது தகப்பனாரான துரைசாமி பிள்ளையே ஒரு நாடக நடிகர் ஆவார். தாயார் ஜானகி அம்மாளோ பரத

[தொடர்ச்சி 66ம் பக்கத்தில்]



எஸ். டி. சுப்புலக்ஷ்மி

ஜுபிடர்-லாவண்யா தயாரிப்பு
மனிதன்
மாதுரிதேவி . பண்டரிபாய்
கிருஷ்ணகுமாரி

"Theatre chairs with Dunlopillo cushions and arm rests provide the maximum of seating comfort, and at the same time the highest acoustic absorption yet reached

● *Latex foam cinema seating*

in theatre seats"—Ideal Kinema. Dunlopillo cinema seating is most economical. It has no springs or separate pieces and therefore needs no repairs. Being self-ventilating with millions of cells, it is COOL. It repels bugs. What could be more suitable for a climate such as ours?



DUNLOPILLO

NOW MADE IN INDIA

BY

DUNLOP

FOUNDERS OF THE LATEX FOAM INDUSTRY

நுனிப்புல்

வெட்டுக்கிளி

கடந்த மே மாத "குண்டூசி" இதழில், 'நமது படத் தயாரிப்பாளர்களுக்கு ஓயாது தலைவலி கொடுத்துவரும் பிரச்னைகளில் முக்கியமான அங்கம் வகிப்பவர்கள் நம் நக்ஷத்திரங்களில் சிலர்' என்று எழுதியிருந்தேன். ஆனால், அவர்களில் குறிப்பிட்ட சில படத் தயாரிப்பாளர்களுக்கு ஏற்படும் இன்னொரு பிரச்னை அதைவிட மிகக் கடுமையானதாக இருக்கிறது. வைட்டமின் "ப" பற்றிய பிரச்னைதான் அது. சினிமா உலக வட்டாரங்களில் 'பைனான்ஸ்' என்று அடிக்கடி அடிபடுகிறதே, அந்தப் 'ப'ணத்தையேதான் சொல்லுகிறேன். அதுமட்டும் வேண்டிய அளவு இருந்துவிட்டால், மசியாத நக்ஷத்திரங்களைக்கூட, 'மகுடி கேட்ட நாகம் போல்' வழிக்குக் கொண்டு வந்து விடலாமே! எப்பொழுதுமே அவர்களுக்கு இந்தப் பணப் பிரச்னை உண்டு. அதிலும் இப்பொழுது மார்க்கெட் உள்ள நிலவரத்தில் அவர்களின் நிலையைப்பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. நான் பல சமயம் இப்படிப்பட்ட படத் தயாரிப்பாளர்களைத் தேடிப் போயிருக்கிறேன். அநேகமாக அவர்கள் இருப்பதே கிடையாது. அவர்கள், 'பைனான்ஸ்'ைஸத் தேடிப் போயிருப்பதாக நான் அறிந்து கொள்வேன்.

• • •

அடேயப்பா! ஒரு சில வருஷங்களுக்குள், நம் படத்துறையில்தான், எத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. பல படங்கள் தங்க விழாக் கொண்டாடியதும், வெள்ளி விழாக் கொண்டாடியதும், "இது நிஜமா!" என்று கேட்கும் அளவுக்குப் பழங் கதைகளாகி விட்டன. சமீப காலமாக, தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாகவே, நக்ஷத்திரங்கள் பலர் நடித்த படம் உள்பட, பல படங்கள் மண்ணைக் கவ்வியதைக் கண்கூடாகப் பார்த்தோம்; பார்க்கிறோம்; பார்த்துக் கொண்டே இருப்போமோ, என்னவோ! மாதக் கணக்காக படங்கள் ஓடினது கதையாகி, வாரக் கணக்கில் வந்து நின்று, அதுவும் போய், நாட்கள் கணக்கில் படம் ஓடும் அழகில் வந்து நிற்கிறது நிலைமை. அடுத்த படி, 'படம் இரண்டு ஆட்டங்கள் ஓடிற்று', 'படம் ஒரே ஆட்டத்துடன் நிறுத்தப்பட்டது' என்பதுதான். அந்த நிலை வரவே கூடாது. இந்த பயங்கர நிலைக்குப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம். முக்கியமாக, பிரபல நக்ஷத்திரம் பானுமதி கூறிய

அஞ்சலி பிக்சர்ஸின் "பூங்கோதை" ஷூட்டிங்கின் போது பிரபல டைரெக்டர் பிரஸாத் அஞ்சலி தேவியிடம் நடிப்பு பற்றி ஏதோ கூறுகிறார்.

துபோல் "மார்க்கெட் டைட் னை" என்பதையே பிரதான காரணமாகக் கூறலாம். ஆனால் இந்த 'டைட்' நிலை ஏற்படப் பொறுப்பாளிகளாக இருந்தவர்கள் ஓரளவுக்கு படத் தயாரிப்பாளர்களேதான் என்பதை அடுத்து விவரிக்கிறேன்.

• • •

இந்தச் சந்தர்ப்பத்தில், எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நம் படத் தொழில் இருந்த செழிப்பான சூழ்நிலையை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடிய வில்லை. ஒருவர் படம் தயாரிக்கப் போவதாக விளம்பரம் மூலம் அறிவித்தால் போதும். அந்தப் படத்தை வாங்கவோ, விநியோகிக்கவோ, 'நான் முந்தி, நீ முந்தி' என்று போட்டி போட்டுக் கொண்டு, 'செக்'காகக்கூட இல்லாமல், ரொக்கப் பணத்தை மூட்டை கட்டிக் கொண்டு வந்து படத் தயாரிப்பாளரை வட்டமிடுவார்கள். படத் தயாரிப்பாளரும் விறைப்பாக பேரம் பேசுவார். ஆனால், இப்பொழுதோ நிலை நேர்மாறாகி விட்டது. "எருமை மாட்டைத் தண்ணீரில்போட்டபடி பேசும் வேலை நமக்கு வேண்டாம்" என்று விநியோகஸ்தர்கள் நிர்த் தாட்சண்யமாகக் கூறி விடுகின்றனர். படம் பூராவாகத் தயாராகி, அதுவும் நன்றாக வசூலாகும் என்பதை நிச்சயம் செய்து கொண்டபின், பிரதிகள் கைகளில் கிடைத்தால் தான் பணப் பையை அவிழ்க்கிறேன் என்கிறார்கள். இதே மாதிரிதான், விநியோகஸ்தர்-தியேட்டர்காரர்களிடையேயும் ஏற்பட்டிருக்கிறது. தியேட்டர்காரர்கள் பட விநியோகஸ்தர்களிடம் போய், படங்களுக்காகத் தொங்கியது அந்தக் காலம்; பட விநியோகஸ்தர்களே தியேட்டர்காரர்களைத் தேடிப் போய், "என்ன நிபந்தனையானாலும் ஒப்புக் கொள்கிறேன். என் படத்தை உங்கள் தியேட்டரில் ஓட்டுங்கள், ஐயா" என்று கொஞ்சிக் கெஞ்ச வேண்டிய கதி வந்து விட்டது இந்தக் காலத்தில்!

"பராசக்தி" கணேசன் போன்ற ஒசிப் பழத் தின்னிகள் நிறையத் தோன்றிவிட்டால், அங்கமுத்து போன்ற பழக்காரிகள் இனிமேல் தெருக்களில் நடமாடுவதை அறவே நிறுத்தி விடுவார்கள்.

'இந்த பயங்கர சூழ்நிலைக்குக் காரணம் படத் தயாரிப்பாளர்களே' என்று நான் முன்னால் குறிப்பிட்டேனே, அதையே இங்கு விவரிக்கப் போகிறேன். படத் தயாரிப்பாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து விட்டது. நினைத்தவர்கள் எல்லாம் படம் தயாரிக்கத் தொடங்கிவிட்டனர். நிறையவும் சீக்கிரமும் பணம் சம்பாதிக்க படம் தயாரிப்பதைக் ஒரு குறுக்கு வழியென்று எண்ணிப் பலர் படத் துறையில் இறங்கி விட்டிருக்கின்றனர். அது எத்தகைய கரடு

முரடான முள் நிறைந்த பாதை என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்க மறந்து விட்டனர். அவர்களது எண்ணிக்கை பெருகி விடவே, ஒருவரும் உருப்படியாக ஒன்றும் செய்ய இயலாதபடி, படத் தொழிலில் முடக்கப்பட்டுள்ள மூலதனம் கொஞ்சம் கொஞ்சமாய் பல இடங்களில் சிதறிப் போயிருக்கிறது. அத்துடன், வெளியிடப்படும் படங்களும் வரிசையாக படுதோல்வி அடைந்து, இத்துறையிலேயே ஒரு குழப்பத்தையும், பீதியையும் ஒருங்கே ஏற்படுத்தி விட்டன. ஆகவே, பணம் படைத்தவர்கள் படத் தொழிலில் மூலதனம் போடும் முன், ஒரு முறைக்குப் பலமுறை யோசிக்க ஆரம்பித்து விட்டனர். போதும், போதாதற்கு படத் தயாரிப்பாளர்களுக்குக் கடன் உதவி செய்து வந்த ; பாங்குகள் ஒன்றிரண்டும் இப்பொழுது கையை விரித்து விட்டன.

“பைத்தியம் தெளிந்தால்தான் கல்யாணம்; கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும்” என்ற பழமொழிப்படி ஆகிவிட்டது பல படங்களின் கதி. படம் முடிந்து திரையிடத் தயாரானாலொழிய அதைப் பணம் கொடுத்து வாங்க யாரும் முன் வருவதில்லை. ஆனால், யாராவது விலைக்கு வாங்க முன் வந்து, பணம் கொடுத்து உதவினாலன்றி பாதிப் படமாக உள்ளதை முடிக்க வேறு வழியில்லை. இதே காரணத்தால் இன்று பல படங்கள் அரையும் குறையுமாகத் தயாராகி முடிவடையாமல் நின்றிருக்கின்றன. ஒரு உதாரணத்துக்காக சொல்லுகிறேன்: யாராவது ஒரு கோடீஸ்வரர், துணிந்து, திரிசங்கு சொர்க்கத்தில் நிற்கும் இப்படிப்பட்ட படங்களை முடிக்க பண உதவி செய்வதாக முன் வந்தால், 1953-ம் வருஷத்தில் நூற்று ஐம்பது படங்களுக்குக் குறையாமல் திரையிடப் படலாம்! ஒரு படத்தை முதலில் தயாரிக்க ஆரம்பிப்பது ஒரு கம்பெனியாக இருக்கும். ஆனால் மேற்படி படம் தயாராகி முடிவடைந்து வெளி வருவதற்குள் அது பல கம்பெனிகளின் பெயரில் கைமாறி யிருக்கும். இந்த நிலைக்குக் காரணமும் பணப் பிரச்னை தான். பல கம்பெனிகள் சேர்ந்து ஆளுக்குக் கொஞ்சமாகப் படத்தைப்பிடித்து வெளியே அனுப்பிவிடும்.

• •

பிரபல நக்ஷத்திரமும்—படத் தயாரிப்பாளருமான ஒருவரின் கம்பெனியைச் சேர்ந்த ஒரு நபரை சமீபத்தில் நான் சந்தித்துப் பேசிக்

லிபர்டி பிக்சர்ஸார் தயாரித்து வரும் “மதனமோகினி”யில் தோன்றுகிறார் இந்தப் புது முகம் பொன்னாச்சி கமலா.



ஆந்திர ஹாஸ்ய நடிகர் ரேலங்கியும், எஸ். வரலக்ஷ்மியும் "மாமியார்" தமிழ்ப் படத்தில் நடிக்கும் ஒரு காட்சி இது.

கொண்டிருந்தேன். மேற்படி நக்ஷத்திரம் கடைசியாக சொந்தத்தில் தயாரித்த ஒரு படம் மகா மட்டமாக முடிந்தது. "என்ன, ஸார், படம் இப்படி ஆகி விட்டதே" என்று கேட்டேன். அதற்கு அந்த நபர், "எங்களுக்கென்ன, ஸார்! நாங்கள் படத்தை நல்ல விலைக்கு விற்று விட்டோமே" என்று பெருமையாக, கர்வமாக பதிலளித்தார். அந்தப் படத்தை வாங்கி நஷ்டமடைந்த விநியோகஸ்தரையும் பார்த்தேன். தங்கமான மனிதர் அவர். பாவம், இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறார். "படத்தை வாங்கின விலையில் நாலில் ஒரு பாகம் கூடத் திரும்பாது போலிருக்கிறதே" என்றார் வருத்தத்துடன். அந்த நக்ஷத்திரப் — பட முதலாளி, மட்டமான படத்தை எடுத்து அந்த விநியோகஸ்தர் தலையில் கட்டிவிட்டதற்காக இப்பொழுது கவலைப்படாமல் இருக்கலாம்; சந்தோஷம் கூடப் படலாம். ஆனால், அவர் வேதனையும் விசாரமும் அடைய வேண்டிய காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதைச் சொல்லி வைக்கிறேன். இனி உண்மையிலேயே அவர் நல்ல படங்களை எடுத்தால்கூட, அவைகளை வாங்க யாருமே இலகுவில் முன் வரமாட்டார்கள்.

முன்னால் போனவர் இடறி விழுந்தால் பின்னால் வருகிறவராவது விழித்துக் கொள்ள மாட்டாரா?

• • •

கவனித்துப் பார்த்தால், ஒரு விசேஷத்தைக் காண முடியும். இன்று படத் தயாரிப்பாளர்களாக மாறி யிருக்கும் பெரும்பாலான நக்ஷத்திரங்கள், தங்கள் கைப் பணத்தை முதலாகப் போட்டும் படம் தயாரிப்பதாகத் தெரியவில்லை. கம்பெனியை மட்டும் சொந்தத்தில் ஆரம்பித்து விடுகிறார்களே தவிர, தங்கள் சொந்தப் பணத்தைக் கொண்டு வந்து அங்கே முடக்கிவிடுவதில்லை. படத்தை அறிவித்துவிட்டு, பணம் போட, சாமர்த்தியமாக யாரையாவது பிடித்துவிடுகிறார்கள். படம் தயாராகி லாபம் வந்தால் இங்கு பெற்றுக் கொள்ளலாம்; அப்படியில்லாமல் நஷ்டம் ஏற்பட்டுவிட்டாலோ தாங்களும் சேர்ந்து அனுதாபப்படலாம் அல்லவா! இந்த நக்ஷத்திரங்களிடம் பணமா இல்லை! அவர்கள் ஏன் 'பைனான்

ஏவி. எம் "செல்லப்பிள்ளை" தமிழ்ப் படத்தில் கண்ணாம்பா சுதாகருக்கு அபயமளிக்க விடில என்ன ஆகியிருக்குமோ!

ஸுக்கு வேறு யாரையாவது தேடிப் போக வேண்டும். இதற்குக் காரணம், அவர்கள் யாருக்குமே தங்கள் பணத்தைப் போட்டு விஷப் பரீட்சை செய்ய மனமில்லாததுதான். அவர்கள் நிச்சயமாக புத்திசாலிகள் தாம்; பாராட்டுகிறேன். ஆனால், அதே சமயம், இவர்களை நம்பிப் பணம் போடுகிறவர்களை நினைத்துப் பரிதாபப்படாமலும் இருக்க முடியவில்லை!

• •

இது ஒரு புறமிருக்க, பலர் எப்படிப் படத் துறையில் இழுக்கப் படுகின்றனர் என்பது, தெரிந்து கொள்ளத்தக்க, ஒரு ரஸமான விஷயம். பண லேவாதேவி செய்யும் ஒருவரிடம் படத் தயாரிப்பாளர் போவார். நல்ல வட்டி கொடுப்பதாகக் கூறி, சில ஆயிரம் ரூபாய்களைக் கடனாக வாங்குவார். ஒரு குறிப்பிட்ட தேதியில் தொகையைத் திருப்பிக் கொடுத்து விடுவதாக ஒரு கோட்டும் எழுதிக் கொடுப்பார். பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய தேதியும் வந்து விடும். ஆனால், படத் தயாரிப்பாளர் அதே நிலையில்தான் இருப்பார். பணம் கடன் கொடுத்த பிரமுகரிடம், தமது படத்தை ஈடுகாட்டி மேலும் கொஞ்சம் தொகையைக் கடன் வாங்குவார் படத் தயாரிப்பாளர். மூன்றாவது படியாக, மேலும் கொஞ்சம் பணம் பெற்றுக் கொண்டு, படத்தின் சில ஜில்லா உரிமைகளை வாங்கிக்கொள்ளும் நிலைக்கு, கடன் கொடுத்தவரை இழுத்து விடுவார்கள். கடன் கொடுத்தவரும் வேறு வழியின்றி அதற்கு ஒத்துக் கொள்வார். அப்படியும் படம் முடியா விட்டால், தாமே மேலும் பணம் செலவு செய்து படத்தை முடிப்பார் அந்தக் கடன் கொடுத்த பேர் வழி! வேறு வழி!

• • •

இப்படியாக, மெள்ள மெள்ள, படிப்படியாக பண லேவாதேவிக்காரர் படத் தயாரிப்பாளராக மாறி விடுகிறார்! இதற்குள் அவருக்கும் அந்தத் துறையில் சபலம் ஏற்பட்டு விடுமானால் அவர் அதிலேயே லயித்து விடுவார். தாங்கள் போட்ட பணத்தைப் பெற்றுக் கொண்டு மரியாதையாக விலகி விடுகிறவர்களும் உண்டு.

ஆனால் அப்படிப் பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பம். இந்த மாதிரி லேவாதேவிக்காரர்களைப் பற்றிக் கூறும் போது எனக்குக் குதிரைப் பந்தயத்திற்குப் போய் வருகிறவர்களின் ஞாபகம் தான் வருகிறது. அவர்கள் முதல் நாள் போய் தோற்ற பணத்தைத் திரும்பப் பெற இரண்டாம் நாள் போவார்கள்; முதல் நாள், இரண்டாம் நாள் நஷ்டமானதை சேர்த்து அடைய மூன்றாம் நாள் போவார்கள். இப்படி, விட்டதைப் பிடிக்கப் போய்க் கொண்டேயிருப்பார்கள்! அப்படிப் போகிறவர்களில், நஷ்டத்தைத் திரும்பப் பெறும் ஒரு சிலரும் உண்டு; பெரும்பாலோர், பூராவையுமே இழப்பவர்கள் தாம்.

• • •

பணத்தை வைத்துக் கொண்டு அதை ஒரு தொழிலில் போட விரும்பும் சிலர் படத் தொழில் என்றாலே, திருவாழ்த்தான் வளர்த்த பூனை பாலைக் கண்டு நடுங்கியது போல நடுங்குகின்றனர். காரணம், அப்படிப்பட்ட ஒரு சிலருக்கு ஏற்பட்ட துயரமான அனுபவங்கள் தாம். பணம் நிறைய இருந்து, படத் தொழிலில் அதைப் போட விரும்பும் பலரும், சரியான நபர்களிடம் சிக்குவதில்லை. இதற்கெனவே சுற்றித் திரியும் சிற்சில சுயநலப் பேர்வழிகளிடம் சிக்கி, அவர்களால் தவறான பாதையில் இழுக்கப்பட்டு, பணத்தைப் பறி கொடுக்க வேண்டி வருகிறது. இம்மாதிரி அனுபவத்தை மனதில் கொண்டு, 'படத் தொழிலே அப்படிப் பட்டது தான்' என்று தவறாக முடிவு கட்டி விடுகின்றனர் மற்றுமுள்ள செல்வந்தர்கள். இதற்கு ஒரே ஒரு உதாரணம் மட்டும் காட்ட விரும்புகிறேன். சென்ற ஆண்டு ஆலப்புழையைச் சேர்ந்த ஒரு பிரபல வியாபாரி—கௌரவமான மனிதர்—சென்னைக்கு வந்து ஒரு சமூகப் படத்தை தயாரித்தார். இத் தொழில்ஒரு நல்ல தொழில்; லாபகரமான தொழில் என்ற அபிப்பிராயம் அவருக்கு ஏற்படச் செய்திருந்தால் அவர் லக்ஷக் கணக்கான ரூபாய்களை இத் தொழிலில் போட்டிருக்கக் கூடியவர். ஆனால், கூடச் சேர்ந்தவர்கள் அந்தப் படத்தைக் குட்டிச் சுவராக்கி, அவருக்கு வெறுப்புத் தோன்றும் படிச் செய்து விட்டனர். அந்த ஒரே படத்துடன் "நமக்கு வேண்டாம் இந்தத் தொல்லை" என்று அந்த தனிகர் மரியாதையாக விலகிக் கொண்டு விட்டார்.

மேடையும் திரையும்

டாக்டர் வி.ராமமூர்த்தி

நாடகக் கலையின் சிறப்பு, நாளுக்கு நாள் அதிகரித்து புகழடைந்து கொண்டிருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். வெள்ளித் திரையின் மகத்துவம் மாபெரும் புகழ்ச்சியை அடைந்திருந்த போதிலும், இன்று சிலர் கருதும் வண்ணம் நாடகக்கலைக்கு போட்டியாக அமையவில்லை என்பது என் அபிப்பிராயம். அயல்நாடுகளிலிருந்து வரும் செய்திகளைக் கவனித்தால், நாடக மேடையில் நன்றாய் நடித்து, எல்லோருடைய மனதையும் கவர்ந்த நடிகர் பலர், அதே நாடகங்கள் படமாக மாறியபோது, மிகவும் மேம்படவும், பன்மடங்கு அதிகமாகவே பெயரையும் புகழையும் அடைந்ததாகத் தெரிய வருகிறது. அம்மாதிரியே வட இந்தியாவிலும்கூட சில நாடக நடிகர்கள் இன்று உன்னத நிலையில் இருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். இதனால்தான் இன்று நம் நாட்டிலும் பட முதலாளிகள் புது முகங்களைத் தேடும் சமயங்களில் நாடக நடிகர்களின் பட்டியலை ஆராய்கிறார்கள். பெரும்பாலும் நம் படங்களில் நடிக்கும் நடிகர்கள் நாடக மேடை நடிகர்களே ஆவர்.

என் நண்பர்களில் அநேகர், நாடக மேடையில் உள்ள 'ஸங்கோஜமில்லாத நடிப்பு கேமிராவின் முன் வருவது சிரமம் என்ற கொள்கையை உடையவர்கள். நாடகம் சில மணி நேரத்தில் நடித்துக் காட்டப்படும் சம்பவங்கள் நிறைந்த கலையென்றும், படம் சில வருஷங்களில் நடிக்கப்படும் பல சம்பவங்கள் நிறைந்த கலையென்றும் சொல்லுகிறார்கள். இதனால் ஒரு நடிகன், படத்தில் முதலில் ஆரம்பமாகும் பொழுது கொண்டுள்ள இயற்கை அமைப்பு வனப்பையும், படம் முடியும்போது கொண்டுள்ள அமைப்பு வனப்பையும் கவனித்துப் பார்த்தால் தெரிய வரும் என்றும் வாதாடுகிறார்கள். இம்மாதிரி நேரும் சம்பவங்கள் ஒரு சில படங்களுக்கே யாகும். படங்களில் அநேகம் ஒரு சில மாதங்களில் முடிகின்றன. அவைகளில் இவ்விதமான கோளாறு இல்லை. ஆயினும், ஒரு நடிகனுடைய லக்ஷணங்களை நாம் கவனித்தால். நடிகன், சூழ்நிலைக்கும், சந்தர்ப்பங்களுக்கும், உடைகளுக்கும், செயற்கை அழகிற்கும், முக்கிய ஸ்தானத்தைக் கொடுப்பவன் அல்ல என்பது விளங்கும். ஒரு நடிகன். பேசும் வசனங்களுக்கும், அதற்கேற்ப முகத்தில் காட்டும் பாவங்களுக்குமே முதலிடம் கொடுக்கவேண்டும். இதனால் ஒரு சம்பவத்தை நடித்துக் காட்டக்கூடிய திறமை கொண்டவன்" இடத்தைக் கவனியாமல், அது நாடக மேடையாயினும், ஸ்டுடியோவாயினும், எவ்விதமான சந்தர்ப்பத்திலும், தன் வல்லமையைக் காட்டக் கூடியவனே ஆவான். இவ்விதமான நடிப்பு, ஒருவர் சொல்லிக் கொடுப்பதால் மட்டும் வந்துவிடாது.

நாடக நடிகன் ஒருவனுக்கே இவ்விதமான நடிப்புத் திறமை உண்டென்பதை நான் தைரியமாய் சொல்லக்கூடும். உதாரணமாக, ராமாயணத்தை நாடகமாக்கி, அதில் ஸீதை சோகரஸம் ததும்ப வருந்தும் கட்டத்தை எடுத்துக்கொள்வோம். ஸீதை வருந்தும் கட்டம் நாடக ரூபத்தில் ஒரு மணி நேரத்திற்குள் முடிந்து விடலாம். இதையே படமாக்க வேண்டிய சந்தர்ப்பம் வாய்த்து விட்டால், இதே சம்பவத்தை ஒரு வாரம் வரையில் படடைரெக்டர் வளர்த்தவேண்டி வரும். இதனால் சோக ரஸத்தை சரிவர நடித்துக் காட்ட ஸீதை பாகத்தை எடுத்துக் கொள்ளும் நடிகனோ, நடியோ, தான் ஸ்டுடியோவிற்கு வரும் நேரத்திற்குள்

[தொடர்ச்சி 31-ம் பக்கத்தில்]

அஞ்சலி பிக்சர்ஸ்
பூங்கோதை
நேஷனல் பிக்சர்ஸ் வெளியீ
ANJALI
பிரஸாத்

அஞ்சலி பிக்சர் ின் "பூங்கோ
தை" தமிழ்ப் படம் பிரபல பிர
ஸாத்தின் டைரெ ்ஷனில் துரித
மாய் தயாராகிவரு கிறது. இப் படத்
தின் வசனங்கள் சக்தி கிருஷ்ண
சாமியால் எழுதப் பட்டவையாகும்.

"பூங்கோதை" பட விநியோகத்தை நேஷனல் பிக்சர்ஸார் பெற்றுள்ளனர். இப் படத்தில் அஞ்சலி தேவி, நாகேஸ்வரராவ், கணேசன், பண்டரிபாய், வஸந்தா முதலிய பிரபல நக்ஷத்திரங்கள் பிரதம பாத்திரங்களில் தோன்றி நடித்துள்ளனர்.

தம் வீட்டிலேயே சோக ரஸத்தை அனுபவித்து, அதே மனப்பான்மையுடன் வர வேண்டும் என்ற நியாயமே கிடையாது. சோக ரஸத்தை நடிக்கக் கூடிய திறமை கொண்ட நல்ல நடிகன், ஒரு நிமிஷ நேரத்தில் அதைக் காண்பித்து நடிக்க முடியும். அம்மாதிரி செய்யக்கூடிய வல்லமையை புதிதாக, நடிப்பைப்பற்றியே ஒன்றும் அறியாதவனுய், நல்ல முக வெட்டும், தேகக்கட்டும் மட்டும் கொண்டுள்ள ஒரு நபரிடம் எதிர்பார்க்க முடியாது. நாடக மேடையில் அனுபவமுள்ள நல்ல நடிகர்களிடமே இதை எதிர்பார்க்கலாம். இதனுல்தான் நாடக மேடையின் வளர்ச்சிக்கு வெள்ளித்திரையின் வளர்ச்சியினுல் யாதொரு பங்கமும் ஏற்படாது என்பது என் அபிப்பிராயம்.

சில நாட்களுக்கு முன்பு ஒரு பட முதலாளி நடிகனைத் தேர்ந்தெடுக்கும் பரிபோகத்தைப்பற்றிச் சொன்னுர்: கேவலம் ரூபமும் தேக அமைப்பும், முக வசீகரமும் முக்கியமாக நாங்கள் கருதவில்லை யென்று. அம்மாதிரியான மனப்பான்மை எவ்வளவு பேர்களுக்கு இருக்கிறது! நடிப்புத் திறமையைக் கடைசியாகக் கருதும் சில பட முதலாளிகளின் மனப்பான்மை அவர்கள் வெளியிடும் படங்களிலிருந்தே நன்கு தெரிகிறது. பாஷையை சரியாகப் பேசத் தெரியாதவரும், ரூபத்தில் வயதில் முதிர்ந்தவராயினும், பெயரில் மட்டும் குமாரிகளாகவே விளங்கும் கதாநாயகிகளும் படங்களில் தோன்றும் விநோதங்கள், நடிப்பைப்பற்றி ஒன்றுமே அறியாதவர்களின் சிருஷ்டி. இந்நாட்களில் பொது மக்களின் அறிவும் ஆராயும் திறமையும் பன்மடங்கு அதிகமாகி யிருப்பதால் இம்மாதிரியான படங்களோ, நாடகங்களோ பெயரெடுக்க முடியாமல், தோல்வியடைகின்றன. நாடகங்களிலும் சரி படங்களிலும் சரி, ஒரு சிறிய கோளாறையும் பொது மக்கள் கண்டு பிடிக்கக் கூடிய காலம் இது. இதையும் நாடகக் கலையின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

நடிகன் என்பவன் இந்நாட்களில் கருதுகிறபடி, ஒரு விதமான நாடகங்களில் மட்டும் நடிக்கக் கூடிய திறமை கொண்டவனல்ல. எவ்விதமான பாத்திரத்தையும் எடுத்து நடிப்பதே ஒரு நடிகனின் திறமையாகும். கவனிக்க வேண்டிய அம்சங்கள் என்னவெனில் பாத்திரத்திற்கேற்ற ரூபமும், முகவெட்டும் பேச்சுத் திறமையும் அந்தந்த நடிகனுக்குள்ளனவா யென ஆராய்வதே யாகும். அம்மாதிரி பரிசீலனை செய்த பிறகே நடிகர்களுக்கு நடிக டைரக்டர்கள் பாத்திரங்களைக் கொடுக்க வேண்டும். இருபத்தெட்டு அங்குல அகலம் உள்ள மார்பையுடைய ஒருவனை விசாலமான மார்பையுடைய கோதண்டராமனுக மாற்ற முடியாது. இம்மாதிரியான குறைகளை நாடகத்தில் மட்டுமன்றி, படங்களிலும் பார்க்கிறேம். எவ்வளவுதான் அதிகமான ஜாக்கிரதையுடன் ஒரு நாடகத்தை நடத்த வேண்டும் என்ற கொள்கையுடன் ஆரம்பித்தாலும், அநேக நாடக கோஷ்டியினர் இவ்விதத் தவறுகளை இழைப்பது வழக்கம். ஒவ்வொரு நடிகனும் நாடகமென்பது அதிக சிரத்தையுடனும், பயபக்தியுடனும் எடுத்துக் கொண்டு நடத்தவேண்டிய அரும் பெரும் கலையென்னும் நோக்கத்துடன், எல்லாக் கலைகளிலும் சிறந்தது நாடகக் கலையென்பதையும் மனதில் கொண்டு நடிக்க வேண்டும்.

"மாமியார்" தமிழ்ப் படத்தில் ரேவங்கெரு எஸ். வரலக்ஷ்மி அளிக்கும் இந்தத் தூக்கு தண்டனையைக் கண்டு நாம் வருந்துவதற்குப் பதில் மிக சந்தோஷமே அடைவோம்.

குண்டூசியைக் கேளுங்கள்

கலை சம்பந்தமாக உங்களுக்கு என்ன சந்தேகம் இருந்தாலும் 'குண்டூசி' யிடம் கேளுங்கள். இலவசமாகவே பதில் பெறலாம். யாருடைய மனமும் புண்படாதபடி தமாஷாகவே பதிலளித்து, தமிழ் சினிமா, நாடக, சங்கீத, நடன உலகை சீர்திருத்துவதே இப்பகுதியின் நோக்கமாகும். —ஆசிரியர்.

ஜி. சுப்ரமணியம் (கோலாலம்பூர்)

பி. பானுமதி இப்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

பானுமதி தற்போது தம் சொந்தப் படமான "சண்டிராணி"யில் நடித்து வருகிறார். விலாஸம்: நெ. 9, மலோனி ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

எஸ். சுந்தரேசன் (பெரம்பூர்)

எம். ஜி. ராமச்சந்திரனின் விலாஸத்தை தயவு செய்து தெரிவிக்கவும்.

c/o, மேகலா பிக்சர்ஸ், லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14 என்ற விலாஸத்திற்கு நீர் எழுதும். நேரில் மட்டும் போனீரோ ஏமாற வேண்டியிருக்கலாம். அவர் வெளியுலகை அடியோடு மறந்து சதா 'டிஸ்கஷனி'ல் மெய்ம் மறந்து இருக்கும் 'ஸீஸன்' இது. ஆனால், நீர் சீட்டு விளையாடுவதில் நிபுணராயிருந்தால் உமக்கு ஒருவேளை சுலபமாகப் பேட்டி கிடைத்து விடக் கூடும்!

வேலு (செங்கற்பட்டு)

சினிமாவுக்கு கதை அனுப்புவதானால் எப்படி அனுப்ப வேண்டும்? யாருக்கு அனுப்ப வேண்டும்?

நிரந்தரமாக நடந்துவரும் படக் கம்பெனிகளுக்கோ, ஸ்டுடியோக்களுக்கோ கதைகளை அனுப்பி வைக்கலாம். சில படத் தயாரிப்பாளர்கள் தமக்கு வரும் கதைகளின் கருத்துகளையும், அமைப்பையும் திருடிக்கொண்டு கதைகளைத் திருப்பி அனுப்பி விடுவதாகப் பல புகார்கள் நமக்கு வந்துள்ளன. ஆதலால், கதையை இரு பிரதிகள் தயாரித்து, ஒன்றை நீங்கள் வைத்துக் கொண்டு, மற்றதை (திருப்பியனுப்புவதற்குப் போதிய ஸ்டாம்புகளுடன்) ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பிவையும். மற்றும், உம் கதையைப் படக் கம்பெனிகளுக்கு அனுப்புவதற்கு முன் சில கௌரவமிக்க நண்பர்களிடம் கொடுத்து படிக்கும்படி செய்து, அதற்கு அத்தாட்சியாக (தேதியுடன்) கையெழுத்தை வாங்கி வைத்துக் கொள்ளுவது நல்லது.

சி. பெ. சண்முர்த்தி (வத்துகாமம், இலங்கை)

கே. தவமணி தேவி தற்போது என்ன செய்கிறார்? ஏன் படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டார்?

ஏதோ தமிழ்ப் பட ரஸிகர்கள் செய்த தவப்பயன் காரணமாகத்தான்! தம் நடிப்புக் கொலை மூலம் தமிழ்ப் பட உலகை சாகடிக்க முடியாதென்பதை நிச்சயமாகத் தெரிந்துகொண்டு விட்டதால் அவர் இப்போது நாடக உலகில் பிரவேசித்திருப்பதாகத் தெரிகிறது!

கே. ராமன் (பாமை எஸ்டேட், இலங்கை)

என். டி. ராமராவ் தமிழ்ப் படங்களில் நடிக்கிறாரே? அவருக்குத் தமிழ் பேசவும் பாடவும் தெரியுமா?

பாடத் தெரியாது; பேச மட்டும் ஓரளவு தெரியும். "உள்ளதைச் சொல்லவா; உண்மையை இல்லை யென்று சொல்லவா?" என்ற பதங்களை நசுக்கிப் பேசியிருப்பவர் அவரேதான்.

பெண் நிறைந்த இந்தக் (கண்) 'காட்சியை அவர் இந்தியா பிலிம்'லார் சீக்கிரமே வெளியிடவிருக்கும் "என் வீடு" தமிழ்ப் படத்தில் காணலாமாம்.

சிம்ப்ளக்ஸ் மூர்த்தி (சென்னை)

திருச்சூர் பிரேமாவதியின் விலாஸம் என்ன?

நெ. 4, ஹண்டர்ஸ் ரோடு, வேப்பேரி, சென்னை-7 என்பது அவருடைய விலாஸம்.

எம். வி. மாயாண்டி பிள்ளை (கான்சாபுரம்)

எம். வி. ராஜம்மா "உத்தம புத்திரனு"க்குப் பிறகு எந்தப் படத்திலாவது சொந்தக் குரலில் பாடியிருக்கிறாரா?

இல்லை. அவர் சொந்தக் குரலில் பாடுவதை விட்டபின்தான் படமுதலாளிகள் அவருக்கு தைரியமாய் மதிப்பு அளிக்க முற்பட்டார்கள் என்பதைக் கவனியும்!

வி. நடேசன் (திருச்செங்கோடு)

பம்பாய் டாக்கீஸாரின் "மா" ஹிந்திப் படக்கதையும் ஜெமினி "மூன்று பிள்ளைகள்" கதையும் ஒன்றே என்று ஒரு விமர்சகர் எழுதியிருக்கிறார். இதற்குக் காரணம் என்ன?

'இவ்விரு கம்பெனிகளும் ஒரே ஆங்கிலக் கதையில் கை வைத்திருக்கிறார்கள்' என்பதையும் அந்த விமர்சகர் எழுதியிருக்க வேண்டும்!

கிரீன்லாம்ப் (தென்காசி)

ஒரு படத் தயாரிப்பில் "மோல்டிங்" இலாக்காவின் வேலை என்ன?

படத்திற்காக அமைக்கப்படும் காட்சி அமைப்புகளில் காணப்படும் (போலி) சிற்ப வேலைகள், சிலைகள், இதர சித்திர அலங்காரங்கள் இவைகளை அச்சு எடுத்துத் தயாரித்துக் கொடுப்பது.

ஓ. சௌந்திரராஜன் (சேலம்)

எம். எல். வஸந்தகுமாரி முதன் முதலில் எந்தப் படத்தில் பின்னணி சங்கீதம் பாடச் சென்றார்?

ராயல் டாக்கீஸார் வெளியிட்ட "சுதர்ஸன்" படத்தில் அவர் பின்னணியில் மட்டுமன்றி நேரிலேயே பாடவும் நடிக்கவும் சென்றார். ஓரளவு படமும் தயாரான பின், ஏதோ மனக் கசப்பினால் அவரது ஒப்பந்தம் ரத்து செய்

ஜெமினி? ... "மாமியார்" — caption below:

கஜானன புரடக்ஷன்ஸ் "மாமியார்" தமிழ்ப் படத்தில் பி. ஆர். பந்துலு தாமோதரனாகவும் பி. எஸ். சிவபாக்கியம் காமாக்ஷியாகவும் திறம்பட நடித்து வருகின்றனர்.

யப்பட்டது. அதோடு அவர் நடிக்கும் யோசனைக்கு முழுக்குப் போட்டுவிட்டுப் பின்னணி பாட மட்டும் வந்தார். "ராஜமுக்தி" படத்தில் தான் முதல் முதலில் ரஸிகர்கள் அவரது பாட்டுகளைக் கேட்டனர்.

எஸ். ரஹீந் அஹமது (தென்காசி)

பிராஸஸிங் என்றால் என்ன ?

ஷூட்டிங் ஆனபின், அது சம்பந்தமான ஒலி, ஒளி நெகடிவ், பாஸிடிவ் பிலிம் சுருள்களை ரஸாயன முறையில் கழுவிக் காய வைப்பதற்கு 'பிராஸஸிங்' என்ற பொதுப் பெயர் வழங்கப்படுகிறது.

ஏ. எஸ். வாஸன் பிள்ளை (சேலம்)

"பாதாள பைரவி", "நிரபராதி" ஆகிய படங்கள் தமிழில் 'டப்' செய்யப்பட்ட படங்களா ? அல்லது இரு பாஷைகளில் ஏக காலத்தில் தனித் தனியே தயாரிக்கப்பட்ட படங்களா ?

இவை யிரண்டும் தனித்தனியே தமிழில் தயாரிக்கப்பட்ட படங்கள் தாம்.

ஆர். எம். எஸ். சுந்தரம் (புதுக்கோட்டை)

குண்டுசியாரே ! நீங்கள் ஒரு அழகுப் போட்டி வைப்பதாகவும், அதில் பி. கே. சரஸ்வதி, பத்மினி, புஷ்பவல்லி, வைஜயந்திமாலா, அஞ்சலி, ராஜகுமாரி ஆகியோர் கலந்து கொள்வதாகவும் வைத்துக் கொண்டால் நீங்கள் முதல்வராய் யாரைத் தேர்ந்தெடுப்பீர் ?

மிகவும் சிரமமான வேலையைக் கொடுக்கிறீர். இருந்த போதிலும் சொல்கிறேன்—பத்மினியைத்தான்.

எஸ். வி. ராமன் (வண்டிப் பெரியார்)

சினிமா நடிகர், நடிகைகள் "நக்ஷத்திரங்கள்" என்று ஏன் அழைக்கப்படுகிறார்கள் ?

முன்பு ஒரு காலத்தில் மேனாட்டுப் பத்திரிகைகள் சினிமா நடிகர், நடிகைகளின் பெயர்களை—அவர்கள் பொது ஜனங்களிடையே பெற்றுள்ள புகழுக்குத் தக்கபடி—ஒன்று இரண்டு என்று நக்ஷத்திரக் குறிகளைச் சேர்த்து அச்சிட்டிருந்தனவாம். பிறகு, நக்ஷத்திரக் குறிகள் பெற்றவர்கள் நக்ஷத்திரங்களாகவே ஆகிவிட்டனர். மேனாட்டைப் பின்பற்றிப் படம் தயாரிக்க முற்பட்ட இந்தியா இந்தப் பதத்தையும் ஸ்வீகரித்துக் கொண்டது. ஆனால் ஒரு வித்தியாசம் ; இந்தியாவில் எக்ஸ்ட்ரா நடிகை முதல், பிரதம நடிகை வரை, தடி தூக்குபவன் முதல், கதாநாயகன் வரை எல்லோருமே 'நக்ஷத்திரங்கள்' தாம் !

எஸ். என். ஸ்வாமி (திருச்செந்தூர்)

தென்னிந்தியப் படத் தொழிலினருக்கு கற்பனை சூன்யமாகி விட்டது ; அவர்கள் கண்மூடித் தனமாய் காப்பியடிக்கத் தொடங்கியதாலேயே இத் தொழில் சீரழிந்து வருகிறது என்று நான் கூறுகிறேன். நீங்கள் இதை ஆமோதிக்கிறீர்களா ?

நம்மவர்களுக்கு சரியானபடி காப்பியடிக்கக் கூடத் தெரியாது என்று நான் கூறுகிறேன். அது தெரிந்திருந்தால் தான் நம் படங்கள் ஹாலிவுட் படங்களுக்கு நிகரானவையாய் இருக்குமே! இவர்களுக்கு இங்கும் அங்கு

யுவா பிக்சர்ஸார் சமீபத்தில் தமிழ்நாடெங்கும் வெளியிட்டிருக்கும் "சியாமளா" தமிழ்ப் படத்தில் இந்தப் புது முகம் அஷலதா நடித்திருக்கிறார்.



பாவாடை—ஜிஜார் பருவத்திலுள்ள இந்த எதிர்கால இந்தியப் பிரஜைகளை வைத்துக் கொண்டு அவர்களிடம் தமாஷாக வேலை வாங்குகிறார் பிரபல நடிகர்-டைரெக்டர் மஹாலிங்கம். நெப்டியூனில் ''உலகத்தின் நாம்'' ஷூட்டிங்கின்போது எடுத்த படம் இது.

மாய் சில சுலபமான விஷயங்களை மட்டுமே காப்பி யடிக்கத் தெரியும்.

கே. பி. ராஜன் (சென்னை)

''பராசக்தி''யில் நடிக்கும் கே.ஆர். வெங்கடராமனும், திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில் 'மனிதனும்—மிருகமும்' நாடகத்தில் பாரிஸ்டராக நடித்தவரும் ஒருவர்தானா ?

ஆம்; ஒருவரேதான்.

க. தம்பையா (கொழும்பு)

லலிதா, பத்மினி, இவர்களுடைய முழுப் பெயரென்ன ?

இதுவே அவர்களுடைய முழுப் பெயர் என்பது முழு உண்மை.

டி. ரவிந்திரநாதன் (கொழும்பு-2)

தமிழ்ப் பட உலகில் முதன் முதலில் கார்ட்டூன் படம் தயாரித்தவர் யார் ?

முதலில் முயற்சி செய்தவர்கள் மாடர்ன் தியேட்டர்ஸார். ஆனால் உருப்படியான ஒரு துண்டுப் படமாக வெளியிட்டது ஜெமினிதான்.

எம். நியாஸ் (கொழும்பு)

எம். ஜி. ராமச்சந்திரனுக்கு கல்யாணம் ஆகிவிட்டதா ?

விவாஹத்தின் விளைவாக் வெறுப்புற்ற ராமச்சந்திரன் கணவனிடம் கசப்புற்ற ஒரு நடிகையைச் சந்தித்ததும், விவாஹத்தில் மீண்டும் விருப்புற்றாராம்! ஆனால் இந்தப் பேச்சுகள் இப்பொழுது அமுங்கி விட்டன !

டி. கே. முனியாண்டி கங்காணி (தங்கமலை எஸ்டேட்)

பரணியின் ''காதல்'' தமிழ்ப் படத்தில், பானுமதி காதல் கட்டங்களில் இன்னொருவருடன் நடிக்கும் போது. அப் படத்தை டைரெக்ட் செய்த அவரது கணவரான டைரெக்டர்

ராமகிருஷ்ணுவுக்கு மனக் கஷ்டம் ஏற்பட்டிருக்குமல்லவா?

வெறும் நடிப்பிற்காக அவர் ஏன் வருந்த வேண்டும்! 'தொடாமல் நடிக்க வேண்டும்' என்று அந்தக் காலத்தில் சில நடிகைகள் பிடிவாதம் பிடித்து வந்தனர். ஆனல் இந்தக் காலத்திலோ, ''அதிக ஆபாசமாயில்லாமல் நடித்தாலே போதும்'' என்று நாம் வேண்டிக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு முன்னேறியிருக்கிறது சினிமா உலகம்!

சினிமாக் காதலன் (புதுப்பேட்டை)

சுகுமார் புரொடக்ஷன்ஸ் டி. ஆர். மஹாலிங்கம் ''சின்னதுரை''க்குப் பிறகு என்ன படம் தயாரிக்கிறர்? அவருடைய வீட்டு விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

மஹாலிங்கம் தற்போது ''உலகத்தில் நாம்'' என்ற படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறர். விலாஸம்: 129, ராயப்பேட்டை ஹைரோடு, மயிலாப்பூர், சென்னை-4.

எஸ். ஆறுமுகம் (நேகமம்)

மஹாலிங்கம் நடித்த முதல் படம் எது?

''நந்தகுமார்.''

ஆர். கமலம் (கொழும்பு-1)

''மிஸ் மாலினி''யுடன் காட்டப்படும் கார்ட்டூன் படம் யாரால் தயாரிக்கப்பட்டது?

''ஆனந்த விகடனி''ல் முன்பு சித்திரக்காரராயிருந்த ''தாணு''வைக் கொண்டு ஜெமினி தயாரித்த படம் அது.

பி. ஷண்முக ஆசாரி (கொட்டாரம்)

பிரபல அஞ்சலிதேவி, ராஜம்மா, இவ்விருவருள் அழகில் சிறந்தவர் யார்? புகழில் பெருத்தவர் யார்?

அழகு, புகழ் இரண்டிலுமே அஞ்சலிதேவி தான் சிறந்தவர்.

தமிழ் மணி (மூனர்)

திருவாங்கூர் சகோதரிகளான லலிதா, பத்மினி, ராகினி இவர்களுக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

இவர்கள் விவாஹ விஷயத்திற்காக நீர் படும் சிரமத்தைப் பார்த்தால் எனக்கு மிக சிரமமாய் இருக்கிறது! அவர்களுக்கு கெட்டிக்காரியான ஒரு தாயார் இருப்பதால் கல்யாண விஷயத்தைப் பற்றி அவர்களே கவலைப்பட வில்லையே! நீர் ஏன் அவஸ்தைப் படுகிறீர்?

மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பது!

காரம், மணத்தில் நிகரற்றது!

எங்கும் கிடைக்கும்

'சிவ-பார்வதி நடனத்தைப் பார்த்து ரொம்ப நாளாயிற்றே' என்று ரஸிகர்கள் ஏங்கவேண்டியதில்லை. இதை யுவா பிக்சர்ஸ் ''சியாமளா'' தமிழ்ப் படத்தில் காணலாம்.

எஸ். உக்ரபாண்டியன் (காரைக்குடி)

எனக்கு நன்றாக நடிக்கத் தெரியும். எந்தக் கம்பெனியில் 'சான்ஸ்' இருக்கிறது?

நீர் ஒரு சிறந்த நடிகனாக இருப்பீர் என்பதை நான் நம்புகிறேன்! ஏனென்றால், நீர் பள்ளியில் படிப்பதாக 'நடித்து'க் கொண்டே பட உலகில் பிரவேசிக்க முயலுகிறீர் அல்லவா! படிப்பை முதலில் கவனியும்; பட உலகம் ஒன்றும் மறைந்து விடாது.

கே. சோமசுந்தரம் (கோஸ்காகந்தை, இலங்கை)

சினிமா நடிகைகள் எல்லோரும் பெண்ணினத்தைக் கெடுக்க வந்த பேய்கள் தானே?

பெண்ணினத்தையா! 'ஆண் இனத்தையும் கூட' என்று சொல்லும்! ஆனால் ஒன்று; பேய்களெல்லாம் சினிமா நக்ஷத்திரங்களைப் போல மேக்கப் செய்து கொண்டு, ஆடிப் பாடி நடித்து ஆனந்தமளிக்க முற்பட்டால், மஹா பயங்கொள்ளிகள் கூட அவைகளை (காசு கொடுத்து)ப் பார்க்கத் தொடங்கி விடுவார்கள் அல்லவா!

நளினி (உடுவில்)

பி. கே. சரஸ்வதி, ஸ்ரீ ராம், இவர்களது பிறந்த நாள் எவை? உங்களது பிறந்த நாள் எது?

1932ம் வருஷம் ஜனவரி 27ல் பிறந்தவர் பி.கே. சரஸ்வதி. 1922ம் வருஷம் ஏப்ரல் 17ந் தேதி பிறந்தவர் ஸ்ரீராம். நான் 1913ம் வருஷம் அக்டோபர் 4ந் தேதி பிறந்தவன்.

எஸ். எம். எஸ். திக் (பண்டாரவிளை, இலங்கை)

நான் சினிமாவில் சேர விரும்புகிறேன். என்னை ஸ்டுடியோக்களில் அழைப்பார்களா?

அழைப்பார்களா! நல்ல கனவு காண்கிறீர், ஐயா, நீர்! ''குண்டூசி'' தீபாவளி மலரில் வெளிவந்த பாலய்யாவின் கட்டுரையை நீர் படிக்கவில்லை போலிருக்கிறது?

தி. அ. பழனிசாமி (?)

ஜெயந்தி புரொடக்ஷன்ஸாரின் ''பொய்மான்கரடு'' (''பொன் வயல்'')க்கு 'கல்கி'யே வசனம் எழுதுகிறாரா?

இல்லை; கதை மட்டும் தான் அவருடையது.

பொ. வரதராஜு (பினாங்கு)

ஏவி. எம். ஸ்டுடியோவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

ஏவி. எம். ஸ்டுடியோ, கோடம்பாக்கம், சென்னை-24.

எம். கே. சுதாமன் (மதுரை)

பலரும் போற்றும்படி நடித்து விட்டு மறைந்த சின்னப்பாவிற்கு உருவச் சிலை நாட்டாதது ஏன்?

ஒரு வேளை, செலவு அதிகமாகுமே என்ற கவலையாயிருக்கலாம்!

என். ராமச்சந்திரன் (கொளும்பு)

என். டி. ராமராவ், எம். ஜி. ராமச்சந்திரன் இவ்விருவரில் முக அழகில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

என். டி. ராமராவிற்கு.

ஜி. வி. சுப்ரமண்யம் (மலாயா)

நான் கே. மாலதிக்கு ஒரு கடிதம் எழுதலாம் என்று நினைக்கிறேன். அதற்கு அவர் பதில் எழுதுவாரா?

மாலதி கடவுளிடமும், ஜோஸியத்திலும் அபாரமான பிரியம் உடையவர். இவைகளைப் பற்றி ஏதாவது நீர் கடிதம் எழுதினால், ஒரு சமயம் அவர் பதில் அளித்து விடவும் கூடும்!

என். ஸ்ரீநிவாஸன் (ஜோஹோர் பாரு)

ஏவி. எம். தயாரிக்கும் "பெண்" படத்தில் யார் யார் நடிக்கின்றனர்?

வி. நாகய்யா, எஸ். பாலசந்தர், கணேசன், ஸஹஸ்ரநாமம், வைஜயந்திமாலா, அஞ்சலிதேவி, கே. என். கமலம் முதலியோர் நடித்து வருகின்றனர்.

ஆர். என். பாலகிருஷ்ணன் (விருத்தாசலம்)

மஹாலிங்கத்தின் சொந்த ஊர் எது? அவருக்கு மணமாகி விட்டதா? குழந்தைகள் உண்டா? அவரது மனைவியின் பெயர் என்ன? அவருக்குச் சொந்தமாக ஸ்டுடியோ இருக்கிறதா?

மஹாலிங்கத்தின் சொந்த ஊர் தென்கரை. அவர் கோமதியை மணந்து கொண்டு, ஒரு பிள்ளை, ஒரு பெண் ஆகிய இருவரின் தகப்பனாராய் விளங்குகிறார். இப்பொழுது. அவர் தம் படங்களை வாடகை ஸ்டுடியோக்களில் தான் தயாரித்து வருகிறார்.

மின்னுவதெல்லாம் பொன்னாகாது!

கவர்ச்சிகரமான தோற்றமும், பெயர்களும் சில சமயம் ஏமாற்றத்தை அளிக்கக்கூடும். பட்டு நெசவு பிரத்தியேகமான தொழில் நுணுக்கம் உடையது. கிரேப்-டி-சைன் என்பது ஒரு விசேஷ அமைப்புடைய மினுமினுப்பான கிரேப் ஆகும். எல்லா "கிரேப்" களுமே கிரேப்-டி-சைன் ஆகிவிடாது.

மைசூர் கவர்ன்மென்ட் கிரேப் புடவைகள்—மைசூர் கவர்ன்மென்ட் பாக்டரியில் சுத்தமான பட்டிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. அசல் கிரேப்-டி-சைன் ரகத்தைச் சேர்ந்தவையாதலால், விசேஷமான மினுமினுப்பையும், துல்யத்தையும், மதிப்பையும் கொண்டுள்ளன. புதுமாதிரியான பார்டர்களுடன் கிடைக்கும் இப் புடவைகள்தாம் நிகரற்றவை. நீங்கள் கடைகளில், "மைசூர் ஸில்க்" என்றோ, "மைசூர் கிரேப் புடவைகள்" என்றோ கேட்பது போதாது.

மைசூர் கவர்ன்மென்ட் கிரேப் புடவைகள்

என்று நீங்கள் கேட்க வேண்டும்.

நூற்றுக்கு நூறு சுத்தமான மைசூர் ஸில்க் புடவைகள் நாகரீகத்தின் சின்னமாகும்.

மைசூர் கவர்ன்மென்ட் ஸில்க் வீவிங் பாக்டரி

மைசூர்.

வி. எம். வீரப்பா (புத்தளம், இலங்கை)

எம். சரோஜாவின் விலாஸத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெ. 2 லக்ஷ்மீகாந்தன் தெரு, தியாகராய நகர், சென்னை–17.

ஏ. எம். எஸ். ஏ. ராஜு (பம்பாய்)

"டி. ஆர். ராஜகுமாரி நிறத்தில் கறுப்பு" என்று வாதிக்கிறார் என் நண்பர். நான் இல்லை என்று சொன்னேன். இருவரில் யார் கூறுவது சரி?

நீர் விவாதத்திலிருந்து வாபஸ் வாங்கிக் கொள்ளுவதுதான் சரி.

எஸ். எஸ். கப்பார் (தைப்பிங்கு, மலாயா)

மாதுரிதேவிக்கு தற்போது என்ன வயதாகிறது? விவாகம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?

தற்போது 25 வயது நிரம்பப் பெற்றவரான மாதுரிதேவி விவாஹம் ஆனவர்தான். ஆனால், குழந்தை ஒன்றும் பெறவில்லை.

வாசு (மேட்டுப் பாளையம்)

காதல் தெய்வீக சக்தி வாய்ந்தது என்கிறார் என் நண்பர். நான் அதை பெரும் புயல் என்கிறேன். எது சரி?

காதல் தெய்வீக சக்தி வாய்ந்தது என்ற உண்மை தெரியாமல்தான் அநேக நரர்கள் பெரும் புயலில் மாட்டிக் கொள்கிறார்கள்?

பி. கே. செல்லையா (தெமோதர, இலங்கை)

என் நண்பர் ஒருவர் ஒரு சினிமா நடிகையை மணக்க விரும்புகிறார். இதற்கு என்னால் பதில் சொல்லவே முடியவில்லை. தங்கள் அபிப்பிராயம் என்னவோ?

என்னால்கூட இதற்கு சரியான பதில் சொல்ல முடியாது. "இப்பொழுது பாதிக் கல்யாணம் முடிந்தமாதிரித்தான்! யாராவது ஒரு நடிகை சம்மதித்து விட்டாலோ பூரண வெற்றி" என்று உம் நண்பரிடம் சொல்லி வையும்.

வி. கோபால் (நாவலபிட்டிய, இலங்கை)

எம். கே. டி. பாகவதர் ஜெமினி படத்தில் நடிக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். இது உண்மை தானா?

இது மாதிரி ஒரு செய்தி சினிமா உலகில் வெகு காலமாய் நடமாடிக் கொண்டிருந்தது. ஆனால் அதற்கு கால் கடுப்பெடுத்து, இப்பொழுது நடமாடுவதை நிறுத்திக் கொண்டு விட்டது!

எஸ். செல்லையா (சங்கரன்கோவில்)

தமிழ் சினிமா உலகில் நடிப்பதற்காக அதிக சம்பளம் வாங்கிய நடிகர் யார்? என்பதைக் கூறவும்.

எம். கே. டி. பாகவதர்தான். ஆனால், நடிப்பின் மூலம் அதிகப் பணம் சேர்த்தவர் பி. யு. சின்னப்பாதான் என்று தெரிகிறது.

ஆஸ்தான கவிஞர் ஸ்ரீ. வே. ராமலிங்கம் பிள்ளை அவர்களின் இளைய குமாரரும், பக்ஷிராஜா ஸ்டுடியோவில் உதவி டைரெக்டராய் இருப்பவருமான பாலசுப்ரமண்யத்திற்கும், செல்வி சுகுணாவுக்கும் சென்ற மாதம் 7ந் தேதி திருமணம் நடந்தேறியது. அன்றைய தினம் மாலையில் எம். எல். வசந்தகுமாரியின் இன்னிசை விருந்து நடந்தது.

ரோஹிணி பிக்சர்ஸார் தயாரித்து வரும் ''வஞ்சம்'' தமிழ்–தெலுங்கு படங்களில் காமெடியன் கே. சாரங்கபாணி மிருதங்கம் வாசிக்கும் இந்தக் காட்சியைக் காணலாம்.

பட உலக 'பப்பாஜி'

எச். எம். ரெட்டி

"குதூகலன்"

சொந்தமாக ஒரு குழந்தை கூட கிடையாது; ஆனால், அந்த மனிதரை நூற்றுக் கணக்கான பேர்கள், "பப்பாஜி" என்று அழைக்கிறார்கள் என்றால் அது வியப்பாக இருக்கிறதல்லவா? அப்படிப்பட்ட விசித்திர மனிதர்தான் எச். எம். ரெட்டி. நமது படத்தொழிலில் பணியாற்றி வரும் கூலிகள் முதல் படே படே படத் தயாரிப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் அவரை இன்றும் "பப்பாஜி" என்றே வாய் நிறைய அழைக்கிறார்கள். தந்தைக்குரிய ஒரு மரியாதையுடனும், அன்புடனும் அவரிடம் பழகுகிறார்கள். அவரும், தந்தை தநயனிடம் பழகும் ஒரு தன்மையுடன் அவர்கள் ஒவ்வொருவரிடமும் பழகுகிறார். அது மட்டுமன்றி, அவரது சினிமா வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவரை "பப்பாஜி" என்று மற்றவர்கள் அழைப்பது சாலவும் பொருந்தும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இத் துறையிலுள்ளவர்களில், இருபத்தி ஐந்து வருஷ அனுபவம் பெற்று வெள்ளிவிழாக் கொண்டாடத் தகுதியானவர் யாராவது ஒருவர் உண்டா என்று ஆராய்ந்தோமானால், பலன் கிடைப்பது கஷ்டம் தான். ஆனால், வெள்ளி விழாவையும் தாண்டி விட்ட, கிட்டத்தட்ட முப்பதாவது வருஷ அனுபவத்தைப் பெற்றுவரும் நபர் எச். எம். ரெட்டி ஒருவர்தான். இந்தத் தொழிலில் அவர் ஒரு 'பழம் பெருச்சாளி.' இன்று வடநாட்டிலே பிரபலமாக இருந்துவரும் டைரெக்டர் மெஹ்பூப் இவரது படங்களில் ஒரு 'எக்ஸ்ட்ரா'வாக நடித்தவர். நடிகர் பிருத்விராஜ், யாகூப், காலஞ் சென்ற நடிகர் மஸார்கான் இவர்களெல்லாம் அவரது படங்களில் சிறு பாத்திரங்களை ஏற்று நடித்தவர்கள். அவ்வளவு தூரம் போவானேன். பிரபல தெலுங்குப் பட டைரெக்டர்களான கே. வி. ரெட்டி, பி. என். ரெட்டி, நாகபூஷணம், எஸ். வி. எஸ். ராமராவ், எல் வி. பிரஸாத் ஆகியோர் இவரின்கீழ் தயாரானவர்கள்தாம். இவர்களில் சிலர் இவரது படங்களில் சிறு பாகங்களில் நடித்துமிருக்கிறார்கள்.



"ஆன்" பட டைரெக்டர் மெஹ்பூப் சென்னைக்கு வந்தபோது எச். எம். ரெட்டியைச் சந்தித்துப் பேசினார். படத்தில் டி. எல். ராமச்சந்தர் வீற்றிருப்பதையும் நாம் காணலாம்.



எச். எம். ரெட்டி

ஹனுமப்ப முனியப்ப ரெட்டி என்ற முழுப் பெயரைக்கொண்ட எச். எம். ரெட்டி தேவனஹல்லி என்ற இடத்தில் 1892ம் வருஷம் ஜூன் மாதம் 12ம் தேதி பிறந்தவர். பரம்பரையான செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். இவர், தம் தந்தைக்கு ஒரே மகன்தான். தமது 22வது வயதுவரை மைசூர் ராஜ குடும்பத்தினருடனேயே வளர்ந்து வந்தார். லட்சாதிபதிகளின் மகன்களே படிக்கத் தகுதியான, புனாவிலுள்ள ஒரு காலேஜில் கல்வி கற்றார் அவர். லார்ட் டென்னிஸன் என்ற பிரபல ஆங்கிலக் கவியின் மகன் தான் அந்தக் கல்லூரியில் ஆங்கில பேராசிரியராக இருந்தார்.

படிப்பில் போலவே, டென்னிஸ், புட்பால், போலோ ஆகிய ஆட்டங்களில் இவர் முன்னணியில் இருந்திருக்கிறார். 1917ம் வருஷம் டென்னிஸ் சாம்பியனாகவும் இருந்திருக்கிறார். குதிரை சவாரி என்பது இவருக்கு அந்த நாளில் சர்வ சாதாரணம். கலை ஆர்வம் சிறுவயது முதலே இவரிடம் இருந்திருக்கிறது. சுற்று வட்டாரங்களில் முப்பது நாற்பது மைல்களுக்கு அப்பாலும், நாடகம், கதா காலக்ஷேபம், இப்படி ஏதாவது நடந்தாலும் கூட அவர் குதிரைமீது ஏறி அங்கு கிளம்பிப் போய்விடுவார். காலேஜில் படித்த காலத்தில் அவரே பல நாடகங்களை நடத்தி, அவைகளில் நடித்தும் இருக்கிறார்.

அவரது கல்லூரிப் படிப்பு 1923ம் வருஷம் முடிந்தது. அவர் உடனேயே மைசூர் திவானாக உத்தியோகம் ஏற்றிருக்க வேண்டியவர். ஆனால் நீண்ட நாட்களாக நெருங்கிப் பழகிய ராஜ குடும்பத்தாருடன் ஏற்பட்ட சிறு மனஸ்தாபம் காரணமாக அது நடைபெறவில்லை.

1924ம் வருஷம் பம்பாய் வந்து, அங்கு முதன் முதலில் கோஹினூர் பிலிம் கம்பெனியில் சேர்ந்தார். அப்பொழுதெல்லாம் 'மதராஸி' என்றால் வட நாட்டினர் துச்சமாகக் கருதி நடத்தி வந்தனர். ரெட்டி அதையெல்லாம் பொருட்படுத்தாது, அங்கு ஒரு உதவி டைரெக்டராகப்போய் வேலைக்கு அமர்ந்தார். ஆனால், அந்த உத்தியோகம் பன்னிரண்டே நாட்களுக்குத்தான் நிலைத்தது. அந்தப் பன்னிரண்டு நாட்களுக்குள் அவர் நான்கு டைரெக்டர்களுடன் சண்டை போட்டு விலகிக் கொண்டார்.

பதிமூன்றாவது நாள் வந்தது. சாரதா பிலிம் கம்பெனியார், 'எச். எம். ரெட்டி படித்தவர், விஷயம் தெரிந்தவர்' என்பதை அறிந்து அவரைத் தங்களது படத்தின் டைரெக்டராக அமர்த்திக் கொண்டார்கள். அவர்களுக்காக அந்தக் காலத்தில் பிரபலமாயிருந்த விட்டல் என்ற நடிகரைக் கொண்டு ஒரு படம் தயாரித்துக் கொடுத்தார் ரெட்டி. தம் சொந்தத்தில் ஒரு ஸ்டுடியோவை ஆரம்பித்து நடத்த வேண்டுமென்ற ஆசை அந்த சமயத்திலேயே அவருக்கு ஏற்பட்டு விட்டது. அவர் அதையே தமது வாழ்க்கையின் லட்சியமாகக் கருதினார்.

அதன்பின் ஆறு வருஷங்களில் (1924–29) பல மௌனப் படங்களை அவர் தயாரித்திருக்கிறார். அவைகளில்தான் மேற்குறிப்பிட்டதுபோல வடநாட்டு நக்ஷத்திரங்களில் பலர் நடித்தனர். இந்தக்

யுவா பிக்சர்ஸ்ஸார் வெளியிட்டிருக்கும் "சியாமளா" தமிழ்ப் படத்தில் எம். கே. டி. பாகவதரும், எஸ். வரலக்ஷ்மியும் இவ்விதம் காட்சியளிக்கின்றனர்.

காலத்தில் அவர் படத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு விதமான வேலைகளையும் கற்றுக்கொண்டார். அவைகளைக் கற்றுக் கொள்வதற்காக அவர் கூலிகளுடன் கூலியாகக்கூட பழகியிருக்கிறார்!

மௌனப் படங்களின் காலம் 1930ம் ஆண்டுடன் முடிந்து, பேசும் பட சகாப்தம் ஆரம்பமாயிற்று. 'முதல் முதல் பேசும் பட டைரெக்டர்' என்ற பெருமை தமிழ் நாட்டைப் பொருத்த மட்டில் எச். எம். ரெட்டிக்கே உரியது. இம்பீரியல் பில்ம் கம்பெனியின் "ஆலம் ஆரா" என்ற ஹிந்தி பேசும் படத்தை டைரெக்ட் செய்த நான்கு பேர்களில் இவரும் ஒருவர். 1931ம் வருஷம் முதல் தெலுங்குப் படமான "பக்த பிரஹ்லதா"வையும், 1932ம் வருஷம், முதல் தமிழ்ப் படமான "பக்த காளிதாஸை"யும் டைரெக்ட் செய்தவர் எச். எம். ரெட்டிதான்.

அதன் பின்னர், மூன்று வருஷங்களில் பல ஹிந்தி பேசும் படங்களை அவர் டைரெக்ட் செய்திருக்கிறார். அவைகளில் "சீதா சுயம்வரம்", "லங்கா தகனம்" இரண்டும் குறிப்பிடத் தக்கவை. அதற்குப் பிறகு அவர் கோலாப்பூருக்கு வந்தார். அங்கு சமஸ்தானத்தின் முதலுடனும், ஆதரவுடனும் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு ஸ்டுடியோக்களையும் அவர் பொறுப்பேற்று நடத்தி வந்தார். இது 1935–36 இரண்டு வருஷங்களிலாகும். இங்குதான் "திரௌபதி வஸ்திராபஹரணம்" தெலுங்குப் படத்தை அவர் டைரெக்ட் செய்து தயாரித்தது.

இந்தத் தெலுங்குப் படத்தில் நடித்த நக்ஷத்திரங்கள், முக்கியமாக கண்ணாம்பா, அவரை சென்னைக்கு வந்து ஒரு படம் ஆரம்பிக்கும்படி பலவந்தப்படுத்தினார்கள். அதன்படியே 1937–ம் வருஷம் சென்னைக்கு வந்து ரோஹிணி பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியை ஒரு பிரைவேட் லிமிடெட் ஸ்தாபனமாக ஆரம்பித்தார். பி. என். ரெட்டி, நாகி ரெட்டி, மூல்லா நாராயணஸ்வாமி, கண்ணாம்பா ஆகி

யோர் மேற்படி கம்பெனியின் பங்குதாரர்களில் சிலர். இந்தக் கம்பெனியின் படம் தான் "கிருஹலக்ஷ்மி."

தெலுங்கிலே தயாரிக்கப்பட்ட முதல் சமூகப் படம் "கிருஹலக்ஷ்மி" தான். இப்படத்தின் மூலம்தான் வி. நாகய்யா பட உலகில் அறிமுகம் செய்யப்பட்டார். காஞ்சனமாலாவுக்கு பெயரும் புகழும் ஏற்படக் காரணமாக இருந்ததும் இப்படம்தான். அந்தக் காலத்தில் இப்படத்திற்குப் பிரமாதமான வசூல் கிடைத்தது.

அபிப்பிராய பேதம் காரணமாக 1938-ம் வருஷம் மற்ற பாகஸ்தர்கள் விலகிவிட்டனர். அவர்களில் சிலர் சேர்ந்து தான் அப்பொழுது வாஹினி பிக்சர்ஸை ஆரம்பித்தனர். அதுமுதல் எச். எம். ரெட்டியே ரோஹிணி பிக்சர்ஸின் முழு முதலாளியானுர். அதே வருஷம்தான் "மாத்ருபூமி" படத்தை அவர் டைரெக்ட் செய்தது. அதைத் தொடர்ந்து 1940-ம் வருஷம் "தெனுலி ராமகிருஷ்ண", 1941-ம் வருஷம் "சத்தியமே ஜயம்" ஆகிய இரு தெலுங்குப் படங்களையும் தயாரித்து வெளியிட்டார். "சத்யமே ஜயம்" படத்திற்கு இன்றும் ஆந்திராவில் அமோகமான ஆதரவு கிடைத்து வருகிறதாம்.

சென்னையில் நடைபெற்று வந்த பிரக்ஜோதி ஸ்டுடியோவை தாமே நடத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் விலைக்கு வாங்கினுர். ஆனல், பிறகு அதை மைசூரில் ஒருவருக்கு விற்று விட்டார். அதன் பிறகு 1942-முதல் 1949-வரை எச். எம். ரெட்டி தமது தேக நிலை காரணமாக இத்தொழிலிலிருந்து விலகி ஓய்வெடுத்துக் கொண்டார். ஆனல் 1946-ம் வருஷத்திலிருந்து இரண்டு மூன்று வருஷங்கள், வேறு படத் தயாரிப்பாளர்களுக்குஅவர் பணம் உதவி வந்தார்.

1949-ம் வருஷம், தமது நெருங்கிய நண்பர் ஒருவர், "நீங்கள் சினிமாத் தொழிலுக்கு வந்தால்தான் உங்கள் உடம்பு சரியாகும்" என்று வலுக் கட்டாயம் செய்ததின் பேரில் மீண்டும் படத் தொழிலுக்குத் திரும்பினுர். 1950-ம் வருஷம் "நிர்தோஷி", (தெலுங்கு) "நிரபராதி" (தமிழ்)யும் ஆகிய இரு படங்களையும் அவர் தயாரித்து வெளியிட்டார்.

ரேடியோவில் 'டப்பா' சங்கீதத்தை ஒழித்துவிட்டு, சாஸ்திரிய சங்கீதத்திற்கு அதிக இடம் அளிக்க முயன்று வருகிருர் இந்திய சர்க்கார் செய்தி ஒலிபரப்பு இலாகா மந்திரி ஸ்ரீ. கேஸ்கர். அதன் விளைவு 'ரேடியோ டப்பா'வுக்கே ஆபத்தாக முடியலாம்!

சமீபத்தில் தம் ஜாகையை சென்னைக்கு மாற்றிக் கொண்டிருக்கும் யூ. ஆர். ஜீவரத்தினம் தற்போது சங்கீதக் கச்சேரி செய்வதில் முனைந்திருக்கிறார்,

---

1951-ம் வருஷம் அக்டோபர் மாதம் கோடம்பாக்கத்தில் சொந்தத்தில் ரோஹிணி ஸ்டுடியோவை ஆரம்பித்தார். ஸ்டுடியோக்களிலேயே அதிக விஸ்தீரணமுள்ளது ரோஹிணி ஸ்டுடிதான். ஸ்டுடியோவின் விஸ்தீரணம் முப்பது ஏக்ரா. அதில் ஒன்பது ஏக்ராக்களில் நெல் பயிர் செய்து வருகிறார். அவரது பெரிய குடும்பத்துக்குப் போதுமான அரிசி அங்கு கிடைத்துவிடுகிறது. அன்றாடம் வேண்டிய கறிகாய்களுக்காக நல்ல தோட்டமும் போட்டிருக்கிறார். ஒன்பது அருமையான பசுக்களை வளர்த்து வருகிறார். அந்த ஸ்டுடியோவுக்குப் போனால் மட்டும் ஏதோ ஒரு கிராமத்திற்குள் போகிற மாதிரித்தான் இருக்கிறது. ஆச்ரமத்தின் அமைதி அங்கே நிலவியிருக்கிறது.

படம் பிடிக்க இரண்டு கொட்டகைகள் உள்ளன. படம் பார்க்க சிறு தியேட்டரும், நல்ல வசதிகளுடன் கூடிய லாபரட்டரியும் இருக்கின்றன. ஒலி, ஒளிப்பதிவு! சாதனங்கள் இரண்டிரண்டு இருக்கின்றன. மொத்தத்தில் அசௌகரியமில்லாது ஒரே சமயத்தில் இரண்டு படங்கள் அங்கே தயாரிக்க முடியும்.

அவரது ஸ்டுடியோவில் வேலை பார்க்கிறவர்களில் முக்கால் பகுதிக்கு மேல் அவரது உறவினர்கள்தான். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒற்றுமையாகவும் ஒழுங்காகவும் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் காண மகிழ்ச்சியாக இருக்கிறது. எச். எம். ரெட்டி ஒவ்வொரு விஷயத்தையும் தமது மேற்பார்வையில், பொறுப்புள்ளவர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்.

அறுபது வயதைத் தாண்டி விட்டவர் எச். எம். ரெட்டி ; ஆனால் அவர் சுறுசுறுப்பையும், ஓடியாடி வேலை செய்வதையும் காணும் இந்தக் கால இளைஞர்கள் நாணித் தலைகுனியத்தான் வேண்டும். சிறுபிள்ளை மாதிரி ஓடியாடித் திரிகிறார். காலை ஐந்து மணிக்கு எழுந்து விடுகிறார். இரவு பதினோரு மணி வரை ஓய்ச்சல் ஒழிவில்லாது பல வேலைகளையும் கவனிக்கிறார். யாரையுமே தட்டிக் கொடுத்து சரியானபடி வேலை வாங்குவதில் சமர்த்தர் இவர்.

காலஞ் சென்ற, முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னா 'நேரம் தவறாமை'க்குப் பெயர் போனவர் என்று சொல்லுவார்கள். அந்த விஷயத்தில் ஜின்னாவையும் மிஞ்சி விடக் கூடியவர் எச். எம். ரெட்டி. அதே மாதிரி அனைவரும் அந்த 'நேரம் தவறாமை'யை அனுஷ்டிக்க வேண்டுமென்ற கொள்கை உடையவர்.

"வாழ்க்கையில் ஒருவன் ஒரு லட்சியத்தை அடைய விரும்பினால், அதற்காக, அதை அடைவதற்குள் அவன் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கும் சோதனைகளுக்கும் ஆளாகவேண்டியிருக்கும். அதில் கலங்காமல் முயற்சி செய்கிறவனே வெற்றி பெறுவான். இதுதானே கர்மயோகம்" என்ற அபிப்பிராயம் கொண்டவர் எச். எம். ரெட்டி. அவர் அபிப்பிராயப்படி பார்க்கும்போது அவரை ஒரு கர்மவீரர் என்றுதான் சொல்லவேண்டும். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், படத் தொழிலில் தாம் ஒரு தனிப் புகழை அடைய வேண்டும் என்ற இலட்சியம் அவருக்கு ஏற்பட்டது. தமது லட்சியத்தை அவர் அடைந்து விட்டார் அல்லவா ?

ஜனவரி
கண்டுசியில்
லக்ஷ்மியின்
வீரத்தேவன்
கோட்டை
புதிய தொடர் கதை
ஆரம்பமாகிறது!

ஜப்பானிய பரிசுப் படம்

"யுகிவாரிகூ"

எந்தக் காலத்திலுமே ஜப்பான்சாமான் என்றால் அதற்குத் தனியானதொரு மதிப்பு உண்டு! மலிவாகவும், அதே சமயத்தில் நன்றாகவும் இருக்கும் அவர்களின் தயாரிப்பு. 'தாங்கள் சினிமாத் தொழிலிலும் அந்தப் பெருமையை விட்டுக் கொடுப்பவர்களல்ல' என்பதுபோலதான் "யூகிவாரிகூ" படத்தைத் தயாரித்து அனுப்பி யிருக்கிறார்கள் அவர்கள்.

இந்த வருஷ ஆரம்பத்தில், சென்னையில் சர்வதேச பிலிம் விழா நடைபெற்ற சமயம், பலநாட்டுச் சிறந்த படங்கள் அதில் திரையிடப்பட்டன. அவைகளில், ஜப்பானியப் படமான "யுகிவாரிகூ" ஒன்று. இப்படத்தைப் பார்த்தவர்கள் பிரமாதமாகப் புகழ்ந்தார்கள். பார்க்காதவர்களோ 'அடடா பார்க்காமல் போனோமே' என்று வருந்தினார்கள். இப்படிப்பட்டவர்களைத் திருப்தி செய்ய பம்பாய் கபூர் கர்த்தார் லிமிடெட் கம்பெனியார் முயற்சி எடுத்துக்கொண்டார்கள். அந்தப் படத்தை இந்தியாவில் தமிழ், ஹிந்தி, ஆங்கில பாஷை விளக்க உரைகளுடன் திரையிடும் உரிமையை அவர்கள் பெற்றார்கள். ஆங்கில விளக்க உரையுடன் இந்தப் படம் ஜெமினி வெளியீடாக, சென்னை ஓடியன் தியேட்டரில் சென்ற மாதம் 21ம் தேதி திரையிடப்பட்டு, நடைபெற்று வருகிறது. தமிழ் விளக்க உரையுடன், இப்படம் சீக்கிரமே தமிழ்நாடெங்கும் திரையிடப்படுமெனத் தெரிகிறது.

இந்தப் படத்தின் பத்திரிகைக் காட்சி சென்ற மாதம் 18ம் தேதி, ஜெமினி ஸ்டுடியோவின் தியேட்டரில் நடைபெற்றது. சென்ற மாதம் 22ம் தேதி காலை, குழந்தைகளுக்கென ஒரு இலவச பிரத்தியேகக் காட்சி ஒன்று ஓடியன் தியேட்டரில் நடைபெற்றது. மிஸஸ் எம். என். கிளப்வாலா இதற்குத் தலைமை வகித்தார். எழுநூறு குழந்தைகளுக்கும் அதிகமாகவே அன்று வந்து படம் பார்த்தனர். ஜெமினி விளம்பர இலாகா அதிகாரி வி. கே. என். சாரி, ஜப்பான் தேசத்தைப் பற்றியும், "யுகிவாரிகூ" படத்தையும், அதில் நடித்துள்ள சிறுவனைப்பற்றியும், படத்திலிருந்து குழந்தைகள் தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினை பற்றியும் தமாஷாக—சிறுவர்களுக்குப் புரியும்படி — எடுத்துக் கூறினார். குழந்தைகள் படத்தை வெகுவாக ரஸித்தார்கள். பல இடங்களில் அவர்கள் கைகொட்டி ஏகமாக ஆர்ப்பரித்தார்கள். இடைவேளையில் ஓவல்டின் குடித்துவிட்டு போகும்போது ஒரு பெப்பர்மின்ட் பொட்டலத்துடன் படத்தைப் பற்றி பேசிக்கொண்டே குழந்தை

கள் போனார்கள். "யுகிவாரிகு" படத்தில் வரும் புத்திசாலியைப் போன்ற பையன்கள் நம் நாட்டிலும் நிறைய இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறுவர்களைக் கண்டு பிடிக்க வென ஜெமினி பிக்சர்ஸார் ஒரு யூகப் பரீட்சை ஒன்றை இந்த மாதம் இரண்டாவது வாரத்தில் நடத்தப் போகிறார்கள். இந்தப் போட்டியில் நான்கு அல்லது ஐந்து வயதுக் குழந்தைகள் கலந்து கொள்ளலாம். மற்றெல்லா விபரங்களையும் ஓடியன் தியேட்டர் மானேஜரிடம் தெரிந்து கொள்ளலாம்.

[illegible] ஜெமினி [illegible] அதிகாரி [illegible] படத்தில் [illegible] ஓடியன் [illegible]

மிகக் குறைவான கதாபாத்திரங்களை வைத்துக்கொண்டு ஒரு அருமையான படத்தைத் தயாரிக்க முடியும் என்பதற்கு "யுகிவாரிகு" ஒரு உதாரணம். அதில் நடிப்பவர்கள், ஒரு தந்தை, அவன் முதல் மனைவி, இரண்டாவது மனைவி, முதல் மனைவியின் பையன், ஆகிய நான்கே பேர்கள்தான்.

முதல் மனைவி தன் குழந்தையைத் தந்தையிடம் ஒரு கடிதத்துடன் அனுப்புகிறாள். குழந்தை வந்ததும்தான், இரண்டாவது மனைவிக்கு 'ஏற்கெனவே தன் கணவனுக்கு ஒரு மனைவி' இருக்கும் விஷயம் தெரிகிறது. கணவனுக்கும் இரண்டாம் மனைவிக்கும் அதிலிருந்து கசப்பு ஏற்படுகிறது. நம்மால் ஏன் அவர்களுக்குள் கஷ்டம் என சிறுவன் வீட்டை விட்டு ஓடுகிறான். தந்தையும், மாற்றுந் தாயும் அவனைத் தேடி, ஓடி, ஆபத்தான சமயத்தில் துணிந்து பையனைக் காப்பாற்றுகிறார்கள். கதை சுபமாக முடிகிறது. சர்வ சாதாரணமான ஒரு நிகழ்ச்சியை சிறப்பான டைரெக்ஷன் மூலமும், திறமையான ஒலிப்பதிவு மூலமும் பிரமிக்கத்தக்க முறையில் படமாக்கியிருக்கிறார்கள். அதில் வெகு சுட்டியான பையனாக வரும் நான்கே வயதான சிறுவனின் நடிப்பும், முகமும் படம் பார்க்கிறவர்களின் மனக் கண்ணிலிருந்து அகலவே அகலாது. இரண்டாவது மனைவியாக நடிக்கும் நடிகையின் நடிப்பு அதியற்புதமாக இருக்கிறது.

மனிதனின் பலவீனத்தையும், உயர்ந்த பண்புகளையும் சித்தரிக்கும் கதையைக் கொண்ட "யுகிவாரிகு"—பெற்றோர்கள் ஒவ்வொருவரும், தங்கள் குழந்தைகளுடன் சென்று பார்த்து விட்டு வர வேண்டிய சிறந்த படம். —"ஜாம்பவான்"

"என்னய்யா, உம் நண்பர், அவர்தான் அந்த நடிகர், என்னென்னவோ பொய் சொல்லி பத்து ரூபாய் கடன் வாங்கிண்டு போனர். இன்னமும் திருப்பித் தாவேயில்லே, ஐயா."

"யாரைச் சொல்லுகிறீர் ? இன்று ராயல் தியேட்டரில் ஹரிச்சந்திரனய் நடிக்கிறரே,.....நம்ம சத்தியகீர்த்தியைத்தானே ?......!!!

* உண்மை இருக்கிறது

விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரித்து வெளியிட்ட "கல்யாணம் பண்ணிப் பார்" என்ற படத்தைப் பார்த்ததும், நமது சேனாதிபதி கரியப்பா அவர்கள் 'பள்ளிச் சிறுவர்களும், சிறுமிகளும் தற்கால சினிமாப் படங்களைப் பார்க்கக் கூடாது' என்று கூறி யிருப்பதுதான் என் நினைவுக்கு வந்தது. ஆராய்ந்து பார்த்தால் அவர் கூறுவதிலும் உண்மை இருக்கத் தான் செய்கிறது. பொதுவாக இந்தப் படத்தில் சிறந்த கருத்துக்கள் இருந்தாலும், சிறு பிள்ளைகளின் மனதில் தப்பான எண்ணங்களை உண்டாக்கக் கூடிய நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. உதாரணமாக, ஹோட்டல் வைத்திருக்கும் பாட்டியம்மாள் வீட்டில் பதினொரு வயதுச் சிறுவனும், எட்டு வயதுச் சிறுமியும் காதல் கொள்வதும், பிறகு கல்யாணம் செய்து கொள்வதும், சிறிது நேரத்தில் சிறுவன் பிரிந்து போனதும், அந்தச் சிறுவனின் குல்லாயை வைத்துக் கொண்டு சிறுமி ஏங்குவதும், நமக்குப் பார்க்க ஹாஸ்யமாக இருந்தாலும், இந்த வயதை யொத்த சிறு பிள்ளைகளின் மனதில் அசம்பாவிதமான உணர்ச்சிகளை உண்டாக்கும் நிகழ்ச்சிகளாகும். தற்கால பள்ளிப் பிள்ளைகளில் சினிமா பார்க்காதவர்களே இருக்க மாட்டார்களென்பது நிச்சயம். சிறு பிள்ளைகள் ஒரு பொருளையோ, அல்லது ஒரு சம்பவத்தையோ பார்த்தால் அதை மனதில் பதித்து, அதை ஆராய்ச்சி செய்யும் இயல்புடைய பருவத்தினர் ஆவர். ஆகையால் மேற்கூறிய நிகழ்ச்சிகளைப் பார்ப்பதால் வரும் கெடுதிகள் பல. ஆகவே, படத் தயாரிப்பாளர்கள் இது மாதிரி அசம்பாவிதமான நிகழ்ச்சிகளை படத்தில் புகுத்தாமல் கல்ல அறிவைப் புகட்டக் கூடியதும், அதே சமயத்தில் ஹாஸ்யத்தைக் கொடுக்கக் கூடியதுமான நிகழ்ச்சிகளைப் படத்தில் புகுத்தித் தயாரிக்க வேண்டும். எதிர்கால இளஞ் சிங்கங்களாகிய நமது சிறுவர், சிறுமிகளுக்கு இப் புனிதமான பணியை நமது படத் தயாரிப்பாளர்கள் செய்து அவர்களது அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பார்களென நம்புகிறேன்.

கே. அலமேலு அம்மாள்,
பறங்கிப்பேட்டை.

ராஜாஜியும் சினிமாவும்

நம் தலைவர் ராஜாஜி மாணவர்களையும் மற்றவர்களையும் சினிமாப் பார்க்கக் கூடாது என்று புத்திமதி சொல்லி வருவதைக் கண்டு பட முதலாளிகள் உள்ளம் கொதிக்கிறார்கள். வீணாக படபடப்பதை விட்டு விட்டு சிறிது, சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் உண்மையை அவர்கள் உணர்வார்கள். இத்தனை நாட்களாக எவ்வளவோ படங்களை வெளியிட்டிருக்கிறார்களே, அவைகள் மூலம் அவர்கள் சாதித்தது என்ன? உருப்படியாக ஒன்றுமில்லை. நன்றாகத் தங்கள் பணப்பையை நிரப்பிக் கொண்டார்கள். சினிமாப் பார்த்து விட்டு வரும் சிறு பிள்ளைகள் வீட்டில் கழிகளை எடுத்துக் கொண்டு சண்டை போடுவதாகச் சொல்லிக் கொண்டு, ஜன்னல் கண்ணாடிகளை உடைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். மாணவர்களோ, தங்களைக் கதா நாயகர்களாக நினைத்துக் கொண்டு பெண்களைக் கண்டவுடன் காதலிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். கடைசியில் பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் எல்லோரும் கெட்டு சமூகம் குட்டிச் சுவராவது தான் கண்ட பலன். இந்த சினிமாக்கள் வந்த பிறகு, அவைகளினால் எவ்வளவு பேர் திருந்தி யிருக்கிறார்கள்? எவ்வளவு பாமர ஜனங்கள்

* பரிசு பெற்ற கடிதம் எழுதியவர் : கே. அலமேலு அம்மாள், பறங்கிப்பேட்டை.

சென்னை-600 008.
134138

அறிவு பெற்றிருக்கிறார்கள்! எவ்வளவு
தூரம் மக்களின் ஒழுக்கம் உயர்த்தப்
பட்டிருக்கிறது! மக்களின், தேசத்தின்
—கலாசாரம், பண்பாடு விருத்தியடைந்
திருக்கிறது! பட முதலாளிகள் நெஞ்சில்
கை வைத்துச் சொல்லட்டும். ஒன்றும்
கிடையாது. அதற்குப் பதில் களவு,
கொலைகள் நூதன முறைகளில் அபி
விருத்தி அடைந்திருக்கின்றன. சமூகம்
கெட்டுப் போனதற்கு ஓரளவு பொறு
ப்பு இன்றைய தினம் நாட்டில் வெளியா
கும் சினிமாப் படங்களே என நான் நிச்
சயமாக நம்புகிறேன். இவ்வாறு பின்
னால் ஏற்படப்போகும் தீர்ப்பை ராஜாஜி
முன் கூட்டியே கூறி விட்டதால் எல்
லோரும் அவரை எதிர்க்கிறார்கள்.
ஆனால் இது அவருக்குப் புதிதல்ல. ராஜா
ஜியோ, வேறு எவருமோ சினிமாவையே
ஒழித்துக் கட்டிவிட வேண்டுமென்று
கூறவில்லை. ஜனங்களுடைய நன்மையை
யும் சமூகத்தின் உயர்வையும் தேசத்தின்
மேன்மையையும் கருத்தில் கொண்டு
ஆபாசமற்ற உயர்தரமான படங்களைப்
பிடித்தால் ராஜாஜி அவர்களே சினிமா
பார்க்கச் சொல்லி ஜனங்களிடம் சொல்
வார்; அப்படிப்பட்ட படங்களைப்
பிடித்து மக்களை உயர்த்துவதாக அவ
ருக்கு வாக்களிப்பதை விட்டு விட்டு
அவர் மீது சீறி விழுவதால் என்ன பிர
யோசனம்!

எம். என். வெங்கட்ராமன், பி. ஏ.,
மதுரை.

தேர்தல் தேவையா ?

நாட்டுக்கு பயனளிக்கும் நல்ல படங்
களைத் தயாரிக்கும் கலைஞர்களையும்,
பட முதலாளிகளையும் பாராட்டி, அவர்க
ளுக்கு உற்சாக மளிக்க வேண்டும் என்ற
நோக்குடன் ஆண்டு தோறும் திரைப்
படத் தேர்தல் நடத்துகின்றன சில கலைக்
கழகங்கள். இது பாராட்டப் பட
வேண்டிய செயல். எனினும் சிறந்த
படங்களைத் தேர்வு செய்ய தியேட்டர்க
ளில் தேர்தல் நடத்தும் முறை சரியா
னது தானா என்பதை சற்று ஆழ்ந்து சிந்
திக்க வேண்டும். படம் பார்க்க வரு
வோர் அனைவரும் தேர்தலில் கலந்து
கொள்கின்றனர். எனவே சிறந்த முடிவு
காண்பது கடினம். ஏனெனில், சினிமா
பார்க்க வரும் மக்கள் எல்லோருமே ஆர்
வமுள்ள ரஸிகர்கள் எனக் கூற முடி
யாது. பலர் பொழுது போக்கிற்காகப்
படம் பார்க்கின்றனர். மேலும் குறிப்
பிட்ட அந்த ஆண்டில் திரையிடப்பட்ட
எல்லாப் படங்களையும் அவர்கள் பார்த்
திருப்பார்களா என்பது சந்தேகமே.
குறிப்பிட்ட சில படங்களை மட்டும் பார்
த்தவர்களால், சிறந்த படங்களை எப்படித்
தேர்ந்தெடுக்க முடியும்! படம் பார்க்க
வருவோர் தேர்தலில் வாக்களிக்கு முன்,
அந்த ஆண்டில் திரையிடப்பட்ட படங்
கள், அதன் தன்மை, சிறந்த அம்சங்கள்
இவற்றைக் கருத்தூன்றி கவனிக்கிறார்
களா என்றால், பெரும்பாலும் இல்லை
என்று தான் கூறவேண்டும். சமீபத்தில்
நடைபெற்ற இத்தகைய பல தேர்தல்
களை கவனிக்குங்கால், அதிக வாரங்கள்
வெற்றிகரமாக ஓடி, பெருத்த வசூல் தந்த
படங்கள் தாம் சிறந்தவை என முடிவு
செய்யப் பட்டிருப்பதைக் காணலாம்.

'பண வசூல்' தருவதால் மட்டும் ஒரு
படத்தின் தரம் உயர்ந்துவிட முடியாது.
படத்தின் தரத்திற்கும் வசூலுக்கும் எவ்
வித சம்பந்தமும் கிடையாது. சிறந்த
முடிவு காண வேண்டுமானால் நாட்டின்
பல பாகங்களிலுமுள்ள கலைக் கழகங்க
ளின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து, சினி
மாத் துறையிலுள்ள சில கலைஞர்களை
யும், சினிமா பத்திரிகை ஆசிரியர்களையும்
ஒருங்கே கூட்டி "சிறந்த படம் எது, எப்
படி!" என்பதை ரஸிகர்கள் விவாதிக்க
வேண்டும். விவாதத்திற்குப் பின்னர்,
சிறந்த படம் எது என்பதைப் பொது மக்
கள் அனைவரும் அறியும் வண்ணம் பத்தி
ரிகைகளில், தக்க ஆதாரங்களுடனும்,
காரணங்களுடனும் விளக்கம் தர வேண்
டும். மேற்குறிப்பிட்ட காரணங்களால்
'தியேட்டர் தேர்தல்' சரியான பலன்
அளிக்காது என்பதை சம்பந்தப் பட்ட
வர்கள் உணர வேண்டும்.

மு. புரட்சிப்பித்தன், மதுரை,

பொருந்தாத நிகழ்ச்சி

கடந்த ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி,
சுதந்திர தினத்தன்று இரவு 7-30 மணி
க்கு மதுரையில் ஒலிபரப்பப்பட்ட 'வள்
ளுவம்' என்ற இசை நிகழ்ச்சியைக் கேட்
டிருப்பீர்களென்று நினைக்கிறேன். சுதந்
தர தினத்தன்று இந்த நிகழ்ச்சியை ஏற்
பாடு செய்தது பொருத்தமா?—என்பது
சிந்திக்க வேண்டிய விஷயம். ஆரம்பத்தி
லேயே "கடவுள் இல்லை" என்று நாஸ்
திகப் பிரசாரம் செய்தார் நிகழ்ச்சியைத்
தயாரித்த என். எஸ். கிருஷ்ணன். பின்
வள்ளுவருடைய அறம், பொருள், இன்

சமீபத்தில் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் மாடர்ன் தியேட்டர்ஸின் ''வளையாபதி''யில் டி. ஏ. ஜெயலக்ஷ்மி.

பம் இவைகள் கதாபாத்திரங்களாக மாறி, நிகழ்ச்சி மேலே தொடருகிறது. குறிப்பாக இதற்கும் சுதந்திர தினத்திற்கும் என்ன சம்பந்தம் என்று புரியவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பதிலாக கட்டப்பொம்மன், சிவாஜி போன்ற வீர புருஷர்களின் சரிதைகளை அன்று நடிக்க ஏற்பாடு செய்திருக்கலாம். 'வள்ளுவம்' போன்ற நிகழ்ச்சிகள் சுதந்திரம் பெற்ற நன்னாளைக் கொண்டாடுவதற்கு பொருத்தமற்றவை என்பதே என் அபிப்பிராயம்.

எம். ஆர். திருமயம், மேடூர்.

பண்டைய பண்பாடு

இந்தியாவின் பெருமைக்கு உறைவிடமாக—போற்றுதற்குரிய பொக்கிஷமாக—உள்ள மேலை நாட்டினரும் கண்டு வியக்தும் வண்ணம் அமைந்துள்ளவை நமது பண்டைய பண்பாடுகள். அத்தகையதொரு பண்பாட்டிற்கு இழுக்கு ஏற்படும் வண்ணம் சமீபத்திய தமிழ்ப் படங்களில் வசனங்களும், பாடல்களும் உபயோகப் படுத்தப் படுகின்றன. ஹாஸ்யத்தின் பெயரால் சித்த வைத்தியத்தையும், ஜோஸியத்தையும் கிண்டல் செய்வது நம் பண்டைய பண்பாடுகளையே இகழ்வதற்கு ஒப்பாகும். சமீபத்தில் வெளிவந்த ''கல்யாணி'' தமிழ்ப்படத்தில் சித்த வைத்தியத்தைக் கிண்டல் செய்து ஒரு பாடல் இருப்பது வருந்தத் தக்கது. இதே போல ஹாஸ்யம் என்ற பெயரால் ஜோஸ்யம் போன்ற புராதன கலாசாரத்தை இகழ்வதாக உள்ள வசனங்களையும், பாடல்களையும் இனியேனும் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் படங்களில் புகுத்தாமலிருந்தால்தான் நம் பண்டைய கலாசாரத்திற்குப் பங்கம் ஏற்படாததோடு. தமிழ்ப் படக் கலை முன்னேறவும் முடியும்.

'கலைராஜன்' மதுரை.

விசித்திர அறிக்கை

சமீபத்தில், ராஜாஜி ''சினிமாப் பார்க்காதே'' என்று சொன்னபொழுது பெரும்பாலோர் அவர் கூறியதை எதிர்த்தனர். ஆனால், ஈ. வே. ராமசாமி நாயகர், ராஜாஜியின் வார்த்தைகளை ஆமோதித்து, ''ராஜாஜி சொல்வது சரியே. நான் அதை ஆமோதிக்கிறேன்'' என்று

தமிழ் நாட்டில் வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கும் "ஏழை உழவன்" தமிழ்ப் படத்தில் நடிக்கும் புதுமுகம் ஸ்ரீராமமூர்த்தியும், அஞ்சலி தேவியும்.

அறிக்கை வெளியிட்டார். எந்த விஷயத்திலும் ராஜாஜியை எதிர்க்கும் இவர் எந்தக் காரணத்தைக் கொண்டு ராஜாஜியை இவ்விஷயத்தில் மட்டும் பின்பற்றுகிறார்! தம்மிடம் மன வேற்றுமை கொண்டு பிரிந்துபோன சிலர் சினிமாவுக்குக் கதையும் வசனமும் எழுதிப் பிழைப்பது கண்டு அசிகை கொண்டும், தான் அவ்வாறு இருக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தினாலுமே, சினிமா ஒழிப்புப் பிரசாரத்தை ஆதரித்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்!

"என். எஸ். ஆர்", ஸ்ரீரங்கம்.

வாஸனுக்கு யோசனை

முன்பு (ஜனவரி) குண்டூசியில், "சந்திரலேகா"வை ஆங்கிலப் படமாகவும் தயாரித்தால் சிறப்பாயிருக்கும், என்று எழுதியிருந்தேன். அதேபோல் "சந்திரலேகா" ஆங்கிலமாகச் சுடப்பட்டு வருகிறாள், என்பதை அறிய மகிழ்கிறேன், அதற்காக வாஸனைப் பாராட்டுகிறேன்.

ஆனால் வாஸன்மேல் சில ரஸிகர்களுக்கு கொஞ்சம் மனவருத்தம் உள்ளது என்பது யாவரும் அறிந்த ரகஸியம்? அவர் வெளியிட்ட 'அபூர்வ சகோதரர்கள்' ஆங்கிலப் படத் தழுவல்; 'சம்சாரம்' தெலுங்கு மொழிபெயர்ப்பு; 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று பாராட்டிய கவி பாரதியின் கூற்றை செயலில் காட்டுகிறார் வாஸன் என்று முதலில் மகிழ்ந்தோம். ஆனால் அது அளவுக்கு மீறி, எடுக்கும் படமெல்லாம் தழுவல் மயமாகி விட்டால் 'இறவாத புகழுடைய தமிழ்ப் படங்கள் நாம் எவ்வாறு எடுக்க முடியும்?' ஜெமினி கதை இலாகாவின் வேலை என்ன? காப்பிக் கதைகளைத் தொகுப்பதா? தன் சரக்கான "காஞ்சனை"வை பக்ஷிராஜாவுக்குக் கொடுத்த வாஸன், சொந்த விஷயத்தில் தாழ்வாக இருப்பது அவ்வளவு நன்றாக இல்லை! தன் பத்திரிகை நாவல்களும் பிடிக்காவிட்டால், தமிழ் நாட்டு ஆரம்ப எழுத்தாளர்கள், 'கல்கி' போன்ற சிறந்த நாவலாசிரியர்களின் கதைகளைப் படமாகப் பிடித்து, வழிகாட்டி, தமிழ்ப் பட மதிப்பை உயர்த்தலாம் அல்லவா!

தமிழ் நாட்டிலே மறைந்து கிடக்கும், எத்தனையோ 'பார்த்திபன் கனவு'களை முயற்சியுடன் கண்டெடுத்து பல மொழிகளில் படம் பிடித்து, தமிழ்ப் பட உலகை முன்னேறச் செய்வது, வாஸனின் கடமை!

ஆர். தங்கவேலன், திருச்சி.

அவமதிப்பு

மற்றெந்த சாதனங்களையும்விட சினிமா மூலம் மக்களின் அறிவை விருத்தி செய்யலாம் என்பது ஒரு மறுக்க முடியாத உண்மை. ஆயினும் கலை வளர்ச்சிக்கு அடிகோலாமல் பிழைக்கும் வழிக்காகவே சினிமாக் கலையைக் கையாளுவது குறித்து வருத்தப்பட வேண்டியிருக்கிறது. வள்ளுவர், தொல்காப்பியர், அகஸ்தியர் முதலிய பல புலவர்களாலும் புகழ்ந்து கூறப்பட்ட தமிழுக்கு, சமீபத்தில் வெளியான விஜயா புரொடக்ஷன்ஸார் வெளியிட்ட "பாதாள பைரவி" யென்னும் தமிழ்ப் படத்தில் (ஓர் பாட்டில்) அவமதிப்பு ஏற்பட்டுள்ளது. கதாநாயகி கதாநாயகனை நோக்கி "தமிழினமுதக் க்டலிலே தனிமையாகப் படகிலே சரஸலீலை ஆடலாம்......" என்று பாடுகிறாள். இம்மாதிரி பாட்டு இயற்றப்பட்டு பாடப்பெற்றது வருந்தத் தக்கதும், கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

"எஸ். வி. வி. டி", புதுவை.

ரேடியோவில் நட்சத்திரப் பேட்டி

கடந்த சில மாதங்களாக, வடநாட்டு நட்சத்திரங்களின் பேட்டியை பிரபல லிப்டன் கம்பெனியார் ரேடியோ மூலம் ஒலிபரப்பி வருகிறார்கள். இதேமாதிரி, தமிழ்ப்பட நட்சத்திரங்களின் பேட்டியை திருச்சி, சென்னை ரேடியோ மூலம் ஏன் ஒலிபரப்பக் கூடாது! சில சமயங்களில் திருச்சி ரேடியோ நிலையத்தார், பால்காரன், தையற்காரன், சலவைத் தொழிலாளி இவர்களுடன் பேட்டி என்று ஒரு சிறு நிகழ்ச்சி ஏற்பாடு செய்கிறார்கள். அந்த வரிசையில்கூட சினிமா நட்சத்திர பேட்டி கிடையாது. உலகத்தில், சினிமா படத் தயாரிப்பில் இந்தியா இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. இங்கிலையில் சினிமாக் கலையை ஏன் நமது சர்க்கார் அபிவிருத்தி செய்யக்கூடாது?

லிபர்டி பிக்சர்ஸார் தயாரித்துக் கொண்டிருக்கும் ''மதன மோஹினி'' தமிழ்ப் படத்தில் நரசிம்ம பாரதியின் அணைப்பில் அகப்பட்டிருக்கிருர் ஸி. ஆர். ராஜகுமாரி.

நாம் நட்சத்திரங்களின் நடிப்பையும், பட வசனங்களையும்தான் சினிமாவில் ரஸிக்கிறோம். ஆனால் அவர்களின் மனப் பான்மையையும் சொந்த அபிப்பிராயங்களையும் அவர்கள் வாயிலாகக் கேட்க ரசிகர்களுக்கு சந்தர்ப்பமே கிடையாது. இந்தக் குறையைத் தீர்க்க சர்க்காரும் ரேடியோ நிலையத்தாரும் நட்சத்திரங்களும் ஒத்துழைப்பார்க ளென்று நான் நம்புகிறேன். இப்படிச் செய்வதன் மூலம் இரு தரப்பினருக்கும் பிரயோசனம் உண்டு. நட்சத்திரங்களுக்கும் பொதுஜனங்களுக்கும் இடையே நெருங்கிய உறவு ஏற்பட உதவியாயிருக்கும்.

கு. அம்பலவாணன்,
பறங்கிப்பேட்டை.

மூட்டைப் பூச்சிக்கு பயந்து...

''சினிமாப் பார்த்துக் கெட்டுப் போகாதே''—என்று ராஜாஜி பொது ஜனங்களுக்கு உபதேசம் செய்து வருவதற்கு, எடுத்துக் காட்டாக விளங்குகின்றன இன்றையப் படங்கள். ஆம்! நம் பட முதலாளிகள் பணம் சம்பாதிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிருர்களே ஒழிய, பொதுஜன நன்மை, தர்மம், நியாயம், இவைகளைப் பொருட்படுத்தாதவர்களாகவே இருக்கிருர்கள். ஆனால், இவர்களைத் திருத்தி, நல்ல வழியில் கொண்டு வரும் பொறுப்பு ''சென்ஸார் போர்டி''ன் வேலையன்றோ! இதை விடுத்து, அவர்களுடன் உடந்தையாக இருந்து கொண்டு, ஆபாசப் படங்களையும், ஆபாசக் காட்சிகளையும் அநுமதித்து வருவது இந்திய சர்க்காருக்கு இழுக்கு அல்லவா! அதில்லாமல், 'சினிமாவே கூடாது' என்று கூறுவது ''மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்துவதே''யாகும். இந்தியா சுதந்திர நாடாகி ஐந்து ஆண்டுகளாகியும் கூட, நம் சர்க்கார், இந்த முக்கிய தொழிலைக் குறை கூறிக் கொண்டிருப்பதற்குப் பதில், அதைச் செம்மைப்படுத்தி முன்னேற்றப் பாதையில் இனியாகிலும் கொண்டுவந்து நிறுத்துவார்களா!

சோ. சாமி, புதுவை.

புஸ்தகப் பொழுது

விஷப் புன்னகை

[கதாசிரியர்கள்: இளந் தென்றல்—இளந் தத்தன்; விலை: 10 அணா; கிடைக்குமிடம்: ரதி பதிப்பகம், 127, தெற்கு ஆவணி, மதுரை.]

'இனக் கவர்ச்சி'யுடன் கூடிய மேலட்டையுடன் உள்ள ஒரு மலிவுப் பிரசுரம் இது. அட்டைப் படத்திற்கும் உள்ளே உள்ள கதைப் போக்கிற்கும் சம்பந்தத்தைக் காணோம். சூட்கேஸ், மதருஸ் இப்படி யெல்லாம் ஆங்கில வார்த்தைகள் அடிபடும் போது கடியாரம் என்பதற்கு 'நேரங் காட்டி' என வார்த்தையைப் போட்டு குழப்பியிருக்க வேண்டாம். கதை உயர்வான கருத்துள்ளதாக இல்லை.

INORGANIC CHEMISTRY

[ஆசிரியர்: எஸ். லக்ஷ்மி நரசிம்ஹ சாஸ்திரி, பி.ஏ., விலை: ரூ. 2-0-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18]

உலோகங்கள் சம்பந்தமான ரஸாயனப் புத்தகம் இது. ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள இப் புத்தகம் இண்டர்மீடியட் வகுப்புகளுக்கு மிகவும் உதவியானது.

சாந்த குமார்

[ஆசிரியர்: ''சங்கர்''; விலை: 1 அணா; கிடைக்குமிடம்: சங்கர் பதிப்பகம், கட்டியாம்பந்தல் பேரஸ்ட், செங்கல்பட்டு ஜில்லா.]

இது சிறுவர்களுக்கான கதைப் புத்தகம்; ஆனால் அவர்கள் படிக்கத் தகுதியற்ற புத்தகம். இது ஒரு ஸ்டன்ட் கதை என்பதனால் மட்டுமல்ல; புத்தகத்தில் தவறு இல்லாத வரியே கிடையாது. (அருமை) அறுமை; (சொல்ப) சொல்ப்ப; இப்படி எழுத்துப் பிழைகளைக் குறிப்பிட்டு முடியாது.

தங்க நிழல்
மாடி வீடு
மலைப் பேய்

[ஆசிரியர்: ''சுக்ரீவன்''; விலை: ஒவ்வொன்றும் 1 அணா; கிடைக்குமிடம்: குழந்தைப் பிரசுரம், 100, சோலையப்பன் தெரு, சென்னை-21.]

மூன்றும் சிறுவர்களுக்கான கதைப் புத்தகங்கள் தாம். கதைப் போக்கு சுவாரஸ்யமாகவே இருக்கிறது. ஆனால், இந்த மாதிரிக் கதைகளை வருங்கால இளைஞர்களான நம் சிறுவர்கள் படிப்பதால் தீமைதான் ஏற்படக் கூடும்.

St. THAYUMANAVAR

[ஆசிரியர்: பி. அய்யாசாமி எம். ஏ.,; விலை: 4 அணா; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட்; சென்னை-18.]

தாயுமானவர் என்ற பக்திமானின் வாழ்க்கைச் சுருக்கமே இச் சிறு நூல். அவரது பிறப்பு, வளர்ப்பு, உத்தியோகம், துறவறம், சமாதி ஆகியவைகளை எளிய ஆங்கில நடையிலே சரித்திர ஆதாரங்களுடன் கூறப்பட்டுள்ளது.

அகதி

[ஆசிரியர்: பி. கணேசன்; விலை: 12 அணா; கிடைக்குமிடம்: சுமதி வெளியீடு, 78, மேல வீதி, சிதம்பரம்.]

ஆசிரியரால் எழுதப்பட்டு அவ்வப்பொழுது பல பத்திரிகைகளில் வெளி வந்த சிறு கதைகளின் தொகுப்பே இப் புத்தகம். மொத்தம் ஒன்பது கதைகள் உள்ளன. எல்லாம் நன்றாக இருக்கின்றன. 'பெயர்ப் பலகை' என்ற சிறு கதை அனைத்திலும் சிறப்பாக இருக்கிறது.

ஆடல் பாடல்

[ஆசிரியர்: கொடுமுடி ராஜகோபாலன்; விலை: ரூ. 1-4-0; கிடைக்கும் இடம்: நேஷனல் ரினேஸான்ஸ் சென்டர், சென்னை-5.]

நான்கு அங்கங்களில் எழுதப் பட்டுள்ள ஒரு நாடகம் இது. நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற நாடகம் தான். சம்பாஷணை நெடுகிலும் நல்ல கருத்துக்கள் நிறைந்திருக்கின்றன.

பஞ்சத்துக்கு ஆண்டி

[ஆசிரியர்: சங்கராராம்; விலை: ரூ. 1; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

கிராமங்களின் சூழ்நிலையையும், அங்குள்ள பல திறப்பட்ட மக்களையும் உள்ளவாறு படம் பிடித்துக் காட்டும் (எழுத்து மூலம்தான்!) ஆற்றலுள்ள எழுத்தாளர்கள் நம்மிடை மிக மிகக் குறைவு. ''சங்கரராம்'' அப்படிப்பட்ட

சக்தி உள்ளவர். அதை, இந்தப் புத்தகத்திலுள்ள சிறு கதைகள் நன்கு நிரூபிக்கின்றன.

சம்மதமா?

[ஆசிரியர்: நூர் முகம்மது; விலை: ரூ. 1; கிடைக்குமிடம்: அறிவு மலர்ப் பதிப்பகம், கோவிந்தாகுடி போஸ்ட், கும்பகோணம்.]

ஆசிரியரின் எட்டு சிறு கதைகளின் தொகுப்பே 'சம்மதமா?' என்ற இந்த நூல். கதைகள் யாவும் மிகவும் சர்வ சாதாரணமாகவே இருக்கின்றன.

வால் நட்சத்திரம்

[ஆசிரியர்: ''மாயாவி''; விலை: ரூ. 1-12-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18.]

நாவல் உலக வானில் இந்த ''வால் நட்சத்திரம்'' புத்தகத்தை ஒரு நட்சத்திரமென்றே கூறுவேன். மிகவும் சுவாரஸ்யமான கதைப் போக்கு. குஞ்சு கிருஷ்ணன் என்ற, மலையாளப் பகுதியைச் சேர்ந்த வேலைக்காரன் ரொம்பவும் அப்பாவி. அவன் வாழ்க்கையில் ஒரு வால் நட்சத்திரம் தோன்றி சிதைத்து விடுகிறது. மலையாள தேசத்தில் மாந்திரீகம், வசியம் இப்படியான துர்க்கிருத்தியங்கள் செய்யப்படுவதை நன்கு கண்டித்திருக்கிறார். படித்து ரஸிக்க வேண்டிய ஒரு நல்ல நாவல் இது.

தந்தையும் மகளும்

[ஆசிரியர்: ''சாவி''; விலை: ரூ. 1-12-0; கிடைக்குமிடம்: ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை-5.]

இந்த நாவலாசிரியர் பிரபல ஆசிரியர் ''கல்கி'' யின் ஆசியும் ஆதரவும் பெற்றவர் என்பது அவரது நாவலைப் படிக்கும் போதே நன்கு வெளிப்படுகிறது. கதாபாத்திரங்களையும் சூழ் நிலையையும் தத்ரூபமாக நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் தமது அழகிய நடையின் மூலம். நாவலைப் படிக்கும் போது ஒரு சினிமாப் படத்தைப் பார்ப்பது போலவே இருக்கிறது. அந்த முறையிலே விறுவிறுப்பாக கதையைக் கொண்டு செல்லுகிறார் ஆசிரியர். படிப்பதற்கு ஏற்ற நல்ல நாவல்களில் ''தந்தையும் மகளும்'' ஒன்று என்றே கூறலாம். 'சீக்கிரமே நாடகமாக்கவும் போகிறேன்' என்று ஆசிரியர் முகவுரையில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் அப்படிச் செய்தால் நாடக மேடைக்கு ஒரு சிறந்த நாடகம் கிடைக்கும் என்பது தீர்மானம்.

சொல்லாது செல்லாதே

[ஆசிரியர்: ''நலம் விரும்பி''; விலை: 1 அணா; கிடைக்குமிடம்: சிறுவர் முல்லைப் பதிப்பகம், 9, பி. அரசலார் ரோடு, கும்பகோணம்.]

பெற்றோர்களிடம் சொல்லிக் கொள்ளாமல் வெளியே செல்வதனாலேற்படக்கூடிய இடைஞ்சல்களை விளக்கும் புஸ்தகம். சிறுவருக்கு அறிவு புகட்டக்கூடிய புத்தகம் இது.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)

Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

[illegible] மாதமானதும் நின்றுபோன மாதவிடாய் அநுகூலமாகவும் [illegible] உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 [illegible] கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி).

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 260.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு [illegible] கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெலி) [illegible] டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. செ. தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638. (R) MADRAS 1.

கிளை: 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82. MAIN ST., கொழும்பு 11

ஜுபிடர்-லாவண்யா தயாரிப்பான "மனிதன்" தமிழ்ப் படத்தில் ஆந்திர அழகி கிருஷ்ண குமாரி முக்கிய பாத்திரத்தில் தோன்றுகிறார்.

கிருஷ்ண குமாரி



ரோஹிணி பிக்சர்ஸார் தயாரித்துவரும்
''வஞ்சம்'' தமிழ்ப் படத்தில் குடத்துடன்
காட்சி அளிக்கிருர் தெலுங்கு நடிகை கிரிஜா.

சந்திரிகாவின் காதலன்

“சாவி”

அவன் ஒரு நடிகன். நல்ல அழகன். கவர்ச்சியும் கம்பிரமும் பொருந்திய முகம். நடிப்புக் கலையில் நல்ல தேர்ச்சியும், தனக்கென்று தனி முத்திரையும், பெற்றிருந்தான். 'தேவகன்னி' என்றொரு படத்தில் அப்போது அவன் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருந்தான்.

அவனோடு கதாநாயகி தேவகன்னியாக மிஸ் சந்திரிகா நடித்துக் கொண்டிருந்தாள். மிஸ். சந்திரிகாவின் புகழ் சினிமா உலகில் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கிய சமயம் அது. வனப்புமிக்க பேரழகி. நீண்டு விரிந்த நயனங்களும், சிவந்த உதடுகளும், கதுப்புக் கன்னங்களும், கருங்குழலும் வாய்க்கப்பெற்ற எழிலரசி. அழகை அள்ளித் திட்டிய பிரமன், அவளுக்கு அறிவையும் அளிக்கத் தவறவில்லை. அவள் நடித்த படங்கள் இரண்டொன்று திரையிடப்பட்டன. திரையில் அவள் முக மண்டலத்தை 'குளோஸ் அப்'பில் காட்டியபோது அவள் கண்கள் பேசின; உதடுகள் புன்முறுவல் பூத்தன. முத்துப் பற்கள் முல்லைச் சிரிப்பை அள்ளி வீசின. கண்ணிமைகளும், புருவங்களும், உதடுகளும், கன்னங்களும் குழிந்து நெகிழ்ந்து ஏட்டாலும் பாட்டாலும் விவரிக்க இயலாத பாவங்களை எளிதில் வெளிப்படுத்தின.

'தேவகன்னி'யின் கதை அமைப்பையும், வசனப் பொறுப்பையும் ரவிதாஸன் ஏற்றிருந்தான். ரவீதாஸன் வசனம் என்றால் சொல்ல வேண்டியதில்லை. அவன் வசனம் எழுதிய படம் வாரக் கணக்கில் ஓடாது; வருஷக் கணக்கில் ஓடும். அவனுடைய வசனங்களில் கவி வாக்கு இருந்தது. காதல் கட்டங்களில் அவன் கையாளும் சொல்லமைப்புகள் கலைஞர்களும், ரஸிகர்களும் கேட்டு வியக்கும் வண்ணம் இருந்தன. அவை, சந்திரிகா, பாலகுமாரன் போன்ற அபூர்வ நடிகர்களின் வாய் மொழியாக வரும் போது பூங்குயிலின் இன்னிசையும், நீரோட்டத்தின் சலசலப்பும், மான்களின் துள்ளுகின்ற நடையும், மெல்லிய மலர்களின் துல்லிய நறுமணமும் கலந்து இழைந்து குழைந்து தேனருவியாகப் பொழியும்!

• • •

'தேவகன்னி' படப் பிடிப்பு வேலை ரூபாய்க்கு நாலணா பாகம் முடிந்திருந்தது. முக்கியமான காதல் கட்டம் ஒன்று அப்போது உருவாகிக் கொண்டிருந்தது. அந்த கட்டத்தில் சந்திரிகாவுடன் பாலகுமார் நடிக்கவில்லை. தன் உள்ள உணர்ச்சிகளை உண்மையாகவே வெளியிட்டுக் கொண்டிருந்தான். மனப்பாடம் செய்த வசனங்களை இயந்திரம்போல் ஒப்புவிக்கவில்லை. அவன் உள்ளத்தில் கரைபுரண்டு ஓடிய காதல் உணர்ச்சியுடன் கலந்த வசனமாக வெளிப்பட்டன. சந்திரிகாவின் ஸ்பரிசம் அவன் தேகத்தில் மின்சார சக்திபோல் ஊடுருவிப் பாய்ந்தது.

சந்திரிகாவும் விவாகமாகாத கன்னிப் பெண்தானே! உலகத்து இச்சைகளும் ஆசாபாசங்களும் அவளுக்குப் புறம்பல்லவே! பாலகுமாரனிடம் அந்தரங்கத்தில் அன்பு கொண்டது அவளுடைய அந்தப் பொல்லாத இதயம்! பாலகுமாரன் வாய் மொழியாக வந்த காதல் வார்த்தைகள் சந்திரிகையின் செவிகளில் இன்பத் தேனாகப் பாய்ந்தன. வண்ண மலரைக் கண்ட வண்டைப் போல் அவள் மனம் அந்த வார்த்தைகளைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது.

சந்திரிகா தடுமாறினள். தயங்கினள்; மயங்கினள். தன்னைக் கவர்ந்து, மயக்க மும் போதையும் தருவது பாலகுமாரின் காதல் மொழிகளா? அல்லது ரவிதாஸ னின் கற்பனை மிக்க, இன்பமிக்க எழுத் தின் சக்தியா?—ஒன்றும் புரியாமல் திகைத்தாள். ரவிதாஸனும பாலகுமார னும் அவள் மனத் திரையில் மாறிமாறித் தோன்றினர்கள். அவர்கள் இருவரையும் சீர் தூக்கிப் பார்த்தாள். எடைபோட்டுப் பார்த் தாள். கடைசி கடைசி யாக ரவிதாஸனின் வசனசக்தியே தன்னை இந்தப் பாடுபடுத்துகி றது என்று மயக்கத்தி லிருந்து தெளிவுற்ருள்.

ரவிதாஸன் !—ஆகா, என்ன அழகான பெயர். தமிழுக்கு அவர் சேவை செய்கிருரா ? அல்லது தமிழ்தான் அவருக்கு சேவை செய்கிறதா !

ரவிதாஸன் மூக்கு அசாதாரண மாய், அளவுக்கு மீறி நீண்டிருந்தது. அவன் அழகுக்கே அந்த மூக்கு திரு ஷ்டிப் பரிகாரமாய் அமைந்து விட் டது. சந்திரிகா அவனைக் காதலிப்ப தற்கு அந்த மூக்குதான் தடையா யிருந்தது. அத்துடன் மற்ருெரு சிறு குறையும் அவனிடம் இருந்தது. அது, அவன் எப்பொழுது பார்த்தாலும் தாம்பூலதாரியாய்க் காட்சி அளித்துக் கொண்டிருந்ததுதான். படம் 'ஷூட் டிங்' நடைபெறுகிற சமயங்களில் 'வசன டைரெக்டர்' என்ற ஹோதாவில் அவன் அடிக்கடி ஸ்டுடியோவுக்கு வரு வது உண்டு. அப்போதெல்லாம் கையில் வெற்றிலைப் பெட்டியுடன்தான் வரு வான். வாயில் வெற்றிலையைச் சுவைத் துக்கொண்டே ஸ்பஷ்டமாகச் சொல்ல வேண்டிய வசனங்களை குளறிக்கொட்டு வான். ரவிதாஸனுடைய இந்த துர்ப் பழக்கத்தை சந்திரிகா அடியோடு அரு வெருத்தாள். ஆயினும் அவனுடைய எழுத்தின் சக்தியில் அவள் கிறங்கிக் கிடந்தாள்.

ரவிதாஸனின் கவிதா உள்ளத்தில் காதல் வித்தை ஊன்றி விட்டாள் சந் திரிகா. அவன் அடிக்கடி பெருமூச்சு விட்டான். சந்திரிகாவைப் பற்றி இன் பக் கனவுகள் கண்டான். கதை, கவிதை, வசனம் இவற்றில் அவன் மனம் செல்ல வில்லை. காதல் புயலில் சிக்கித் தவித்தது. தன் மூக்கைப் பற்றிச் சிந்தித்தான். நிலைக் கண்ணுடி முன் நின்று கவ னித்தான். "அப்பப்பா, எத் தனை நீளமான மூக்கு! இயற் கையின் கொடுமை!" என்ற சொல் அவன் இதய அடிவாரத்திலிருந்து எழுந்தது.

• • •

நாட்களும் வாரங்களும் சினிமாச் சுருள்போல் ஓடிக்கொண்டிருந்தன. பாலகோபாலன் ரவிதாஸன் இருவரும் சந்திரிகாவின் அழகில் மயங்கி "சந்தி ரிகா யாருக்கு?" என்ற வினவுக்கு விடை தெரியாமல் தவித்தார்கள்.

பாலகோபாலன் சந்திரிகாவின் உள் ளத்தை ஸ்பஷ்டமாகப் புரிந்து கொண் டான். அவளுடன் சம்பாஷித்த போதெல்லாம் அவள் ரவிதாஸனைப் பற் றியே அதிகம் பேசினள். அவனுடைய கற்பனு சக்தியையும் கவித் திறமையை



யும் பற்றியே அதிகமும் வியந்து பாராட்டினாள்.

பாலகோபாலன் யோசித்தான் :

'தன் அழகை அவள் மெச்சுகிறாள். ரவிதாஸனுடைய கற்பனையை வியக்கிறாள். அவனிடம் அழகு இல்லை. தன்னிடம் கற்பனா சக்தி இல்லை. இவ்விரண்டு அம்சங்களும் பொருந்தியவனாக ஒருவனைத் தேர்ந்தெடுக்கவே அவள் உள்ளம் விரும்பும். அந்த ஒருவனாகத் தான் ஏன் ஆகிவிடக் கூடாது?'

ரவிதாஸனை நெருங்கித் தன் திட்டத்

தையும் விருப்பத்தையும் கூறினான். சந்திரிகாவின் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் நோக்கத்தைச் சொல்லி தனக்கு உதவும்படி வேண்டினான்.

"எப்படி?" என்று கேட்டான் ரவிதாஸன்.

பாலகோபாலன் கனைத்துக் கொண்டு சாமர்த்தியமாகவும், தந்திரமாகவும் பேசினான்:

"உன்னிடம் அழகு இல்லை. கற்பனை இருக்கிறது. கடவுள் உனக்கு மூக்கை நீட்டிப் படைத்து விட்டார். இயற்கையை வெல்வது அசாத்தியம். என்னிடம் அழகு இருக்கிறது. கற்பனை இல்லை. அழகை விலை கொடுத்து வாங்க முடியாது. அறிவை விலைக்கு வாங்கலாம். என்னை ஒரு கவிஞனாக மாற்று. என் அழகுடன் உன் கற்பனைத் திறமையும் சேர்ந்தால் சந்திரிகாவின் மனம் என்னிடமே திரும்பும். இல்லையானால் நம் இருவரில் ஒருவருக்கும் இல்லாமற் போய் விடுவாள்."

ரவிதாஸன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். பிறகு "இதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?" என்று கேட்டான்.

"உன்னுடைய முத்திரை பதித்த வசனங்களையும் கவிதைகளையும் எனக்கு ஆர்ஜிதமாக்கு. நான் எழுதுவதுபோல் சில காதல் கடிதங்களை எழுதிக் கொடு. சந்திரிகாவின் மனம் அவற்றைப் படித்ததும் தன்னால் என்பால் திரும்பிவிடும். நீ எனக்குச் செய்யும் இந்த உதவிக்கு உரிய பொருளை உனக்குத் தந்து விடுகிறேன்" என்று பேரம் பேசினான் பாலகோபால்.

ரவிதாஸன் சிந்தித்தான். "இதில் ஏதாவது சூழ்ச்சி இருக்குமோ!" என்று யோசித்தான். பாலகோபாலனுக்கு இந்த உதவியைச் செய்வதால் தனக்கு என்ன நஷ்டம் என்று எண்ணிப் பார்த்தான். பேரழகி சந்திரிகாவை தான் எப்படியும் அடைய முடியாதென்பது முடிவான விஷயம். தன் மூக்குள்ளவரை அது நடக்கப் போவதில்லை. யாரோ முன்பின் அறியாத ஒருவன் அவளை அடைவதைக் காட்டிலும், தன் நண்பன் பாலகோபாலனுக்குத்தான் அவள் உரியவளாகட்டுமே! தான் எழுதிக் கொடுக்கப்போகும் காதல் கடிதங்களுக்கு எப்படியும் பணம் கிடைக்கிறது. வசனம்

எழுதி சினிமா முதலாளிகளிடம் பணம் வாங்குவதைப் போல் இதுவும் ஒரு பேரம்தானே!"—என்றெல்லாம் அலசி அலசி ஆராய்ந்தான். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தான். அவன் உள்ளத்தில் ஊறிக்கிடந்த சந்திரிகாவைப் பற்றிய நினைப்பை அறவே களைந்து விட்டான். இனி அவள் யாரோ? தான் யாரோ?

பாலகோபாலின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒத்தாசை புரிவதாக ஒப்புக்கொண்டான் ரவிதாஸன். ரவிதாஸன் பேனுவிலிருந்து கவிதை வெள்ளம் புரண்டு ஓடியது. உலக மகா இலக்கியங்களிலுள்ள காதல் ரஸத்தையெல்லாம் ஒன்று திரட்டிச் சில கடிதங்கள் எழுதினன்;—அவ்வளவும் தன் பெயரில் அல்ல—பால கோபாலனின் பெயரில். பால கோபாலன் அவற்றை ரவிதாஸனிடமிருந்து பெற்று வந்து தன் கைப்படத் திரும்ப எழுதி, ஒவ்வொன்ருகச் சந்திரிகாவுக்கு அனுப்பினன்.

மேற்கண்ட காதல் கடிதங்களைக் கண்ட சந்திரிகாவின் உள்ளம் பூரித்தது. அக் கடிதங்களில் தேங்கி யிருந்த காதல் வெள்ளத்தையும், கவிதா ரஸத்தையும் அள்ளி அள்ளிப் பருகினள். எல்லாம் பாலகோபாலன் எழுதியவை என்பதை நினைக்கும்போது அவள் ஆச்சரியம் அளவு கடந்ததாயிற்று.

சந்திரிகாவின் முடிவான, சாதகமான பதிலை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருந்தான் பால கோபாலன்.

'தேவகன்னி' பட 'ஷூட்டிங்' வேலைகள் ரூபாய்க்குப் பதினறு அணு பாகமும் முடிந்து விட்டது. இனி சந்திரிகாவை முன்போல் அடிக்கடி சந்திக்க முடியாது.

சந்திரிகாவிடமிருந்து பாலகோபால் எதிர்பார்த்துக் கொண்டிருந்த முடிவான கடிதமும் ஒருநாள் வந்தது. அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"பாலகோபால்!

"தங்கள் கடிதங்கள், அமர இலக்கியம் என்று போற்றத்தக்க காதல் லிகிதங்கள். என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. வெகு நாட்களாக என் மனதில் குழம்பிக் கொண்டிருந்த, தெளிவாகாமல் கிடந்த, ஒரு பிரச்னையைத் தங்கள் கடிதங்கள் தீர்த்து விட்டன. தமிழ் இலக்கியத்தில் தாங்கள் அடைந்துவிட்ட புலமையும் திறமையும் அதிசயிக்கத் தக்கது. எடுத்த எடுப்பில் இலக்கியத்தில் இத்தகைய தேர்ச்சியை ஒருவர் நினைத்ததும் பெற்றுவிட முடியாது. பதினைந்து வருஷ கால அனுபவத்தில் பெற வேண்டிய திறனைத் தாங்கள் ஒரே நாளில் பெற்றுவிட முடியுமா! காளிதாஸனைப் போன்ற வரப்பிரசாதம் பெற்ற கவிகளாலேயே அது சாத்தியம்.

"தங்கள் கடிதங்களில், ஒவ்வொரு வரியிலும் ரவிதாஸனின் முத்திரை பதிந்து கிடப்பது எனக்கு எளிதில் புரிகிறது. தங்களுக்காக ரவிதாஸன் செய்துள்ள தியாகத்தைப் போற்றுகிறேன். அத்தகைய அதிசயமான தன்னலமற்ற ஓர் அற்புதக் கவிஞனையே மணப்பதென்று தீர்மானித்து விட்டேன். பிரமனின் சிருஷ்டிக்கு அவர் என்ன செய்ய முடியும்! அவர் மூக்கை நான் பொருட்படுத்தவில்லை. என்னை அவர் மணம் செய்து கொள்வதற்காக அவர் தாம்பூல தாரணத்தையும் தியாகம் செய்து விடுவார் என்பதிலும் எனக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

இப்படிக்கு,
சந்திரிகா."

ரூ. 3 க்கு 15 ஜ்வெல் கைக்கடிகாரம்

ரூ. 3-க்கு ஒரு பவுன்டன் பேனவும், 15 ஜ்வெல் கைக்கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம்.

AMERICAN SWISS WATCH SUPPLIER
Putli Ghar (G. M) Amritsar

ரூ. 5க்கு ஒரு ரேடியோ!

மின்சாரமோ, பாட்டரியோ இல்லாமல், ஸ்பஷ்டமான, இனிய நாதத்தைக் கொடுக்கும். எமது புதிய திட்டத்தை பிரபலப்படுத்தவே இவ்விதம் கொடுக்கிறோம். குறைந்த அளவே ஸ்டாக் உள்ளது. ஏமாற்றமடைவதைத் தவிர்க்க உடனே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

AMERICAN CORPORATION
P. B. No. 86, (G.M) Amritsar.

வாழ்க்கை வர்ணனை

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டியம் ஆடிவந்தவர். பாட்டி முத்துலக்ஷ்மி அம்மாளோ அந்தக் காலத்தில் கதா காலக்ஷேபம் செய்வதில் பிரசித்தி பெற்றிருந்தார். ஆகவே, எஸ். டி. எஸ். ஐந்து வயது நிரம்புவதற் குள்ளாகவே வீட்டிலேயே ஆடவும், பாடவும், நடிக்கவும் தொடங்கி விட்டது ஆச்சரியமா என்ன!

தகப்பனார் துரைசாமிப் பிள்ளை பொன்னுசாமி பிள்ளையின் "தந்தி முகானந்த சபா"வில் ஒரு காமெடியனாக விளங்கி வந்தார். எஸ். டி. எஸ். இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபோது அவர் நாடகத்தில் சேர்ந்தார். அவர் அதன் பின் குடும்பத்தைப் பற்றி அதிக கவலை கொள்ளாமல் இருந்து வந்ததனால் எஸ். டி. எஸ். தாயாரின் மேற்பார்வையிலேயே வளர்ந்து வந்தார். எஸ். டி. எஸ். ஏகபுத்திரியாதலால் மிக செல்லமாக வளர்ந்து வந்தார் என்று சொல்ல வேண்டுமா! அவருக்கு ஐந்து வயதானதும் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பிறகு எட்டு வயதானபோது அவரது தாயார் அவருக்கு சங்கீதம், நடனம், இவைகளில் பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்தார். ஆனால், அவர் நடிப்புக் கலையில் ஈடுபடுவதை அவரது தாயார் விரும்பவேயில்லை. பெண் நிறையப் படித்து ஏதேனும் உத்தியோகத்தில் அமர வேண்டும் என்பதே விருப்பம். ஆனால், அதுதான் ஈடேறவில்லை.

எஸ். டி. எஸ். சங்கீதத்தையும், பரத நாட்டியத்தையும் இஷ்டத்தோடு கற்க முற்பட்டதால் மளமள வென்று முன்னேறி வந்தார். அவருடைய தாயாருக்கு பரத நாட்டியத்தை போதித்த எஸ். டி. எஸ். சுவாமிநாத நட்டுவனாரே இவருக்கும் குருவாய் அமைந்தார்.

இப்படி சிக்ஷை நடந்து வருகையில், பிரபல கன்னையா கம்பெனி திருநெல்வேலியில் முகாமிட்டிருந்தது. சுற்றுப்புற ஊர்களில் இக் கம்பெனியைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. அதனால் எஸ். டி. எஸ்.ஸும் அவரது தாயாரும் நாடகம் பார்ப்பதற்காக திருநெல்வேலிக்குச் சென்றனர்.

கன்னையாவின் நாடகங்கள் அல்ப சொல்பமானவையா! எஸ். டி. எஸ். அவற்றைப் பார்த்ததும் பிரமித்துப் போனார், இது போன்ற நாடகங்களில் உன்னதமாய் நடித்துப் புகழ் பெற வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார். தவிர்க்க முடியாத இந்த அவாவின் விளைவாக, தாயாருக்குக் கூடத் தெரியாமல், அந்த எட்டு வயதுச் சிறுமி கன்னையாவிடம் தனியாகவே சென்று, தன்னைக் கம்பெனியில் சேர்த்துக் கொள்ளும்படி கெஞ்சினார்.

நல்ல தேஜஸுடன் விளங்கிய அந்தப் பாலகியின் முகத்தைக் கண்டதும் கன்னையா தம் மனதைப் பறிகொடுத்து விட்டார். நீண்டதோர் பெருமூச்சு விட்டு விட்டு, பின் வருமாறு கூறினார்:

"கண்ணே! இங்கே வா. நீ ஏன் இந்த வயதிலேயே நாடகத்தில் சேர விரும்புகிறாய்! எங்கள் கம்பெனியிலோ பெண்களைச் சேர்த்துக்கொள்ளுவதில்லை. அதற்காக நீ வருந்த வேண்டாம். எனக்கு உன் மாதிரி ஒரு பெண் இல்லையே என்று குறையாயிருக்கிறது. நீ என்னுடனேயே—என் பெண்ணாகவே இருந்துவிடு. நாடகம் வேண்டாம்."

மேற்சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் எஸ். டி. எஸ். மிக ஏமாற்றம் அடைந்தார். கன்னையாவின் வளர்ப்புப் புத்திரியாகும் பாக்கியம் ஒருவருக்கு கிடைத்தற்கரியதே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதைப்பற்றியெல்லாம் எஸ். டி. எஸ். சிந்திக்கவில்லை. தம் லக்ஷியத்திற்கு முட்டுக்கட்டை விழவே, அவர் கன்னையாவின் யோசனையை நிராகரித்து விட்டு, வருத்தத்துடன் வீடு திரும்பினார்.

வீடு திரும்பிய பின்னரும் கூட நாடகத்தில் சேர்ந்து நடிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவர் மனதை விட்டு அகலவில்லை. 'எப்படியாவது ஒரு நாள், வேறு எந்தக் கம்பெனியிலாவது சேர்ந்து, உணர்ச்சி ததும்ப நடிக்க வேண்டும்' என்று அவரது மனம் துடித்துக் கொண்டிருந்தது.

தம் விருப்பத்தை அவர் அடிக்கடி தாயாரிடம் சொல்லி, அவரை நச்சரித்து வந்தார். முதலில் தாயார் இந்த யோசனையை பலமாக எதிர்த்து வந்தாரென்

னாலும், நாளடைவில் மனம் இளகி, முடிவில் பெண்ணின் விருப்பத்துக்கு இசைந்து விட்டார். எஸ். டி. எஸ்.ஸின் தகப்பனார் நடித்து வந்த பொன்னுசாமிப் பிள்ளை கம்பெனியிலேயே அவர் (ஒன்பதாவது வயதில்) ஒரு பால பார்ட்டாக சேர்க்கப் பட்டார். பொன்னுசாமிப் பிள்ளைதான் முதன் முதலாக அவர் முகத்தில் பவுடர் போட்டு விட்டவர்.

அந்தக் கம்பெனியில் எஸ். டி. எஸ். நடித்த முதல் நாடகம் கோவலன் ஆகும், அதில் அவர் பால கண்ணகியாகத் தோன்றினார். பொன்னுசாமிப் பிள்ளையின் புத்திரியான எஸ். ஆர். ஜானகி அவருடன் கோவலனாக நடித்தார். எஸ். டி. எஸ். தம் பேச்சு மூலம் சபையோரின் கவனத்தை முதல் நாடகத்திலேயே கவர்ந்து விட்டார். இதன் பிறகு அந்தக் கம்பெனியில் அவர் பல வேஷங்களை ஏற்று, துரிதமாய் பிரபலமடையத் தொடங்கினார். ஆனால் ஆறு மாத காலத்திற்குள் அவர் தகப்பனாருடன் கூட இந்தக் கம்பெனியிலிருந்து விலகி விட வேண்டியதாயிற்று.

''சேவாஸதனம்'' படம் தயாரான காலத்தில் எடுக்கப்பட்ட படம் இது, (எம். எஸ். சுப்புலஷ்மி, எஸ், டி, சுப்புலக்ஷ்மி, கே. சுப்ரமண்யம், அவரது மூத்த மனைவியின் புத்திரி லலிதா)

எஸ். டி. எஸ். கம்பெனியிலிருந்து விலகியதும், ஸ்ரீ வைகுண்டத்தில் இருந்த ஜாகையை பெற்றோர்கள் மதுரைக்கு மாற்றினர். எஸ். டி. எஸ். வேறு கம்பெனிகளில் சேர விரும்பவில்லையாதலால் ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். அவர் அப்பொழுது ஏற்று நடித்த வேஷங்கள் நாரதர், இடைச்சி, பரதன், இரண்டாவது ஸ்திரீ பார்ட், முதலியவை ஆகும்.

இரண்டு மூன்று வருஷ காலத்திற்குள் அவரது பெயர் நாடக உலகில் நன்கு பிரசித்தமாகி விட்டது. மேடை ஏறிய நாள் முதல் அவருக்குப் பக்கபலமாய் இருந்து புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது பேச்சு வன்மை தான். ''மேடை வாதத்தில் எஸ். டி. எஸ்.ஸுக்கு எதிர் யாருமே நிற்க முடியாது'' என்று பொது மக்கள் சவால் கூறி வந்தனர். அதோடு நில்லாமல் அவருக்கு 12வது வயதில் (மதுரையில்) ''ஸ்ரீவை நர்த்டன்'' என்ற பட்டத்தையும், ஒரு பதக்கத்தையும் அவர்கள் பரிசளித்தார்கள்.

தம் பதினோராவது வயதில் எஸ். டி. எஸ். இலங்கைக்குச் சென்று, நாடகங்களில் நடித்து விட்டு வந்ததால், அவரது புகழ் இந்தியாவோடு நில்லாமல் இலங்கையிலும் பரவியது. நாளடைவில் அவர் பிரபல நடிக நடிகைகளுடன் சமதையாக நடிக்க முற்பட்டார். வேலு நாயர், எஸ். வி. சுப்பய்யா பாகவதர், எம். கே. தியாகராஜ பாகவதர், கே. பி. சுந்தராம்பாள் இவர்களுடனெல்லாம் அவர் ஸ்திரீ பார்ட்டாக நடித்திருக்கிறார். டி. பி. ராஜலக்ஷ்மி, எம். எஸ். விஜயாள், எஸ். எஸ். அனந்த நாராயணய்யர் முதலியவர்கள்

இவருடன் ஸ்திரீ பார்ட்டாக நடிப்பது வழக்கம்.

எஸ். டி. எஸ்.ஸின் தகப்பனாருக்கு ஹார்மோன்யம் வாசிக்கவும் தெரியும். அவர் மூலமே எஸ். டி. எஸ்.ஸும் ஹார்மோன்யத்தில் தேர்ச்சி பெற்றார். தாம் கற்ற புது வித்தையை அவர் வீட்டோடு நிறுத்திக் கொள்ளவில்லை; மேடைக்கும் கொண்டு வந்தார். நாடகங்களில் நடிக்காத போது அவர் நாடகங்களில் ஹார்மோன்யம் வாசித்து வரலானார்.

அவருக்கு 13 வயது நடந்து வந்த போது, நீங்கள் ஆச்சரியப் படக்கூடிய இன்னொரு காரியத்தையும் அவர் செய்திருக்கிறார். அதாவது, அவருடைய பாட்டி முத்து லக்ஷ்மி அம்மாளுக்கு கதாகால க்ஷேப வகைகளைப் போதித்தவரான ராமநாதபுரம் ராமநாத சாஸ்திரிகளிடமே எஸ். டி. எஸ்.ஸும் கதா காலக்ஷேப முறைகளைப் பயின்றார். பிறகு, அவர் இந்தியாவில் சில இடங்களிலும், இலங்கையி(யாழ்ப்பாணத்தி)லும் கதா காலக்ஷேபங்கள் செய்திருக்கிறார். இவையெல்லாவற்றிலும் முக்கியமாக, 1932ம் வருஷத்தில்—"பவளக்கொடி" படத்தில் நடிப்பதற்கு முன்பாக—திருச்சியில் நடந்த எம். கே. டி. பாகவதரின் திருமணத்தின் போது எஸ். டி. எஸ். கதாகாலக்ஷேபம் செய்தது குறிப்பிடத் தக்கது.

எஸ். டி. எஸ். பதினேழு வயது வரையில் ஸ்பெஷல் நாடகங்களிலேயே நடித்து வந்தார். சுமார் எட்டு வருஷ காலத்திற்குள் அவர் அமோஹமான புகழைச் சம்பாதித்துக் கொண்டார். 'மேடையில் மற்றெல்லா நடிகர்களையும்விட எம். கே. டி. பாகவதரே எஸ். டி. எஸ்.ஸுக்கு தக்க ஜோடி' என்று நாடக ரஸிகர்கள் அபிப்பிராயம் கொண்டனர். அதற்கேற்ப அவர்களும் ஜோடியாகவே நடித்து வந்தனர்.

அந்தக் காலத்தில் பாகவதர்—எஸ். டி. எஸ். ஜோடியின் திறமைக்குப் பூரண எடுத்துக்காட்டாக இருந்த நாடகம் "பவளக்கொடி." இதே நாடகம்தான் இவர்களைச் சினிமா நக்ஷத்திரங்களாக ஆக்கி வைக்கவும் காரணமாய் இருந்தது. காரைக்குடியில் இந்த நாடகம் நடந்த போது அதைப் பார்ப்பதற்கு மானகிரி லேனா, டைரெக்டர் கே. சுப்ரமண்யம் இருவரும் விஜயம் செய்தனர். ஸ்ரீ. லேனா மற்றும் சில கூட்டாளிகளோடு அப்போதுதான் "மீனாக்ஷி ஸினிடோன்" என்ற ஸ்டுடியோவை ஆரம்பித்திருந்தார். நாடகம் முடிந்ததும் ஸ்ரீ.லேனா, பாகவதர் சுப்புலக்ஷ்மி இருவரையும் சினிமாவில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டு பவளக்கொடி கதையையே படமாகத் தயாரித்தார்.

நடனமாடுகிறார் எஸ்.டி.எஸ்.

"பவளக்கொடி" படத்தில் நடிப்பதற்கு எஸ். டி. எஸ்.ஸுக்கு ரூ. 2000மும், பாகவதருக்கு ரூ. 4000மும், டைரெக்ஷனுக்காக கே. சுப்ரமண்யத்திற்கு ரூ. 800ம் கொடுக்கப் பட்டதாம். ஆனால் இந்தப் படம் அதன் தயாரிப்பாளர்களுக்கு ஏராளமான வசூலைக் கொடுத்தது. படம் நல்ல வெற்றி பெறத் தொடங்கியதும், பாகவதரும் எஸ். டி. எஸ்.ஸும் மாகாணம் பூராவிலும் சுற்றி, இந்த நாடகத்தை அநேக ஊர்களில் நடித்துப் புகழை அதிகரித்துக் கொண்டனர்.

இதன் பிறகு முருகன் டாக்கீஸார் இவர்களைத் தங்கள் "நவீன சாரங்கதரா"வுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இப் படம் கல்கத்தாவில் மூன்றே மாத காலத்திற்குள் தயாரிக்கப்பட்டது. என்றாலும், படம் நன்கு அமைந்திருந்தது. அதோடு கூட அந்தக் காலத்தில் நிகரற்ற வசூல் படமாகவும் இது ஆகிவிட்டது.

பாகவதருக்கும் எஸ். டி. எஸ்.ஸுக்கும் இப் படம் சினிமா உலகில் நிரந்தரமான கிராக்கியை ஏற்படுத்தி வைத்தது. இந்த ஜோடி ஜோடியாகவே நடிக்க வேண்டுமென்று நாடக ரஸிகர்களைப் போலவே சினிமா ரஸிகர்களும் பெரிதும் விரும்பினர். ஆனால், அவர்கள்

ஏமாற வேண்டியதாகிவிட்டது. அன்று பிரிந்த ஜோடி இன்று வரை படங்களில் ஒன்று சேரவில்லை.

“சாரங்கதரா”வுக்குப் பிறகு எஸ். டி. எஸ். “உஷா கல்யாண”த்தில் நடிப்பதற்காக கல்கத்தாவுககுச் சென்றார். இந்தப் படம் முடிவதற்குள்ளாக எஸ். டி. எஸ். ஸுக்கும் அவரது படங்களின் டைரெக்டராய் இருந்த கே. சுப்ரமண்யத்திற்கும் இடையே நெருங்கிய உறவு ஏற்பட ஆரம்பித்தது. 1935ம் வருஷம் செப்டம்பர் மாதம் 13ந் தேதியன்று கல்கத்தாவிலேயே பதிவுத் திருமணமும் செய்து கொண்டனர். அன்றைய தினமே அவர்கள் **மதராஸ் யுனைட்டெட் ஆர்ட்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன்** என்ற சொந்தப் படத் தயாரிப்புக் கம்பெனியையும் ஆரம்பித்து வைத்தனர்.

நாடகமேடையில் ‘ஸ்ரீ வைநார்ட்டன்’

எஸ். டி. எஸ்.ஸின் ஒரு பட சம்பளம் ரூ. 5000மும், கே. சுப்ரமண்யத்தின் ஒரு பட சம்பளம் ரூ. 4000மும் — ஆக ரூ. 9000 மூலதனத்துடனேயே இந்தக் கம்பெனி ஆரம்பிக்கப் பட்டது. ஆனால், ஈஸ்ட் இந்தியா பிலிம் கம்பெனியைச் சேர்ந்த பி. எல். கெம்கா இவர்களுக்கு மிக உதவியதின் விளைவாக இவர்கள் “நவீன சதாரம்” என்ற படத்தை இருபத்தி ஒன்பதே நாட்களில் தயாரித்து முடித்தனர். இப் படம் பிரமாதமான வெற்றி பெறவில்லை யென்றாலும் சுமாரான லாபத்தை அளித்தது.

எம். யூ. ஏ. ஸி. தயாரித்த இரண்டாவது படம் “பக்த குசேலா”. இப் படம் கம்பெனிக்கு பொற் குவியலையும், எஸ். டி. எஸ்., கே. சுப்ரமண்யம் இவர்களுக்கு அழியாப் புகழையும் அளித்தது. இதில் எஸ். டி. எஸ். சுசீலை, கிருஷ்ணன் ஆகிய இரு பாத்திரங்களையும் ஏற்றுக் கொண்டு நடித்திருக்கிறார். சாகித்ய கர்த்தா பாபநாசம் சிவன் (முதன் முதலாக) குசேலராய் நடித்திருப்பது இப் படத்தில் தான்.

இப்படத்தில் எஸ். டி. எஸ். கிருஷ்ணன் வேஷம் ஏற்றுக்கொண்டது பற்றி பிரத்தியேகமாகக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். அந்தக் காலத்தில் ஸ்திரீகள் ஆண் வேஷங்களில் நடிப்பதற்கு பலத்த எதிர்ப்பு இருந்து வந்தது. ஆதலால் படம் வெளி வரும் வரையில் “கிருஷ்ணனாக நடிப்பது யார்!” என்ற விஷயம் மர்மமாக வைக்கப்பட்டிருந்தது! ஆனால், படம் வெளி வந்ததும் எதிர்ப்பெல்லாம் எங்கோ மறைந்துவிட்டது. “கிருஷ்ண பரமாத்மாவே அவதாரம் செய்திருக்கிறார்” என்று பொதுஜனங்கள் வானளாவப் புகழ்ந்தனர். “கிருஷ்ண வேஷத்தை இனி யாராலும் இதுபோல நடிக்கவே முடியாது” என்று ரஸிகர்கள் சவால் கூறினர். இதற்கெல்லாம் திறமையில்லாத சாதாரண ரஸிகர்களோ, கிருஷ்ணன் வேஷத்திலுள்ள எஸ். டி. எஸ். ஸின் படத்தை வைத்து தினமும் பூஜை செய்யவே தொடங்கி விட்டனர்! தோற்றமும், நடிப்பும் அவ்வளவு தத்ரூபமாய் பொருந்தியிருந்தன. இன்றுகூட, எஸ். டி. எஸ். என்றதும் அவர் நடித்த அக் கிருஷ்ணன் வேஷம்தானே நம் கண்முன் நிற்கிறது?

“குசேலா”வுக்குப் பிறகு எம். யூ. ஏ. ஸி. “பாலயோகினி”யைத் தயாரித்தது. ஆனால், அதில் எஸ். டி. எஸ். நடிக்கவில்லை. ஆனால் இதற்கடுத்த படமான மிஸ்டர் “அம்மாஞ்சி”யில் அவர் நடித்திருக்கிறார். தமிழில் முதன் முதலாக வெளிவந்த முழு நீள ஹாஸ்யப் படம் இதுதான் என்பதோடு, “பிளே பாக்” முறை முதன் முதலில் கையாளப்பட்டதும் இப்படத்தில்தானாம். இதில் எஸ். டி. எஸ். பாடியுள்ள “பூவை நானே” என்ற பாட்டு “பிளேபாக்” முறையில் பதிவு செய்யப் பட்டதாம்.

"அம்மாஞ்சி" முடிந்ததும் எம். யூ. ஏ. ஸி. கோஷ்டியினர் சென்னை திரும்பினர். எம். யூ. ஏ. ஸி. சென்னைத் தயாரிப்புகளாக எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடித்த "சேவாசதனம்", தெலுங்குப் படங்களான "பாலயோகினி", "பாரிஸ்டர்பார்வதீஸம்" ஆகிய படங்கள் வெளிவந்தன. ஆனால், இவைகளில் எஸ். டி. எஸ். நடிக்கவில்லை.

எஸ். டி. எஸ். நடித்த அடுத்த படம் "தியாக பூமி" ஆகும். இது தமிழ் நாட்டையே ஒரு கலக்கு கலக்கியது. இதில் தேசிய விஷயங்கள் அதிகமாய் இருந்த காரணத்திற்காக பிரிட்டிஷ் சர்க்காரால் தடை விதிக்கப்பட்ட பெருமையையும் பெற்றது.

"கிருஷ்ண சுதாமா" கன்னடப் படத்தில் கிருஷ்ணன்.

"தியாகபூமி"யில் எஸ். டி. எஸ். சாதாரண குடும்ப ஸ்திரீயாகவும், பிற்பகுதியில் உமாராணியாகவும் நடித்து ரஸிகர்களின் மனதைக் கவர்ந்தார். அதன் விளைவாக கொஞ்ச காலம் 'உமாராணி புடவைகள்' மார்க்கெட்டில் ஏராளமாய் விற்பனையாயின.

"தியாக பூமி"க்குப் பிறகு எஸ். டி. எஸ். நடித்த படம் "அனந்த சயனம்". அதில் கே. சுப்ரமண்யமே இவருடன் பிரதம பாகத்தில் நடித்திருக்கிறார். இந்தப் படம் தோல்வியாகவே முடிந்தது. பிறகு "கிருஷ்ண சுதாமா" கன்னடப் படத்தில் 'குசேலா' போலவே கிருஷ்ணன் வேஷத்தில் நடித்திருக்கிறார். கடைசியாக அவர் நடித்த சொந்தப் படம் "மான சம்ரக்ஷணம்" ஆகும். அந்தப் படத்தில் அவரது நடிப்பு சுமாராக இருந்தது.

இந்தப் படம் முடிந்த பின்னர் எஸ். டி. எஸ், படங்களில் நடிப்பதை நிறுத்திக் கொண்டு, நடன விஷயங்களில் கவனத்தைச் செலுத்தலானார். "நடனகலா சேவா" என்ற நடன கோஷ்டியைக் கூட்டி, அதோடு தமிழ் நாட்டின் பல நகரங்களுக்குச் சென்று நடன விருந்து அளித்துவிட்டு வந்தார். இந்தக் கோஷ்டியினர் தாம் முதன் முதலாக "நாட்டிய நாடகங்களை" சதஸிற்குக் கொண்டு வந்தவர்களாம். இக்கோஷ்டியில் லலிதா, பத்மினி, வி. என். ஜானகி போன்றவர்கள் நடனம் ஆடியிருப்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர எஸ். டி. எஸ். "நிருத்யோதயா" என்ற இலவச நடனப் பள்ளி ஒன்றையும் இரண்டு வருஷ காலம் நடத்தி வந்தார்.

அந்த சமயத்தில், எஸ். டி. எஸ். (1948-ஏப்ரலில்) ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாக ஆனார். இதைத் தொடர்ந்து சுமார் ஐந்து வருஷ காலத்திற்கு அவர் படங்களில் நடிக்கவேண்டுமென்ற உத்ஸாகமே இல்லாமல் வீட்டோடு இருந்துவிட்டார்.

1950-ம் வருஷ ஆரம்பத்தில் என். எஸ். கிருஷ்ணன் தம் "பணம்" படத்தில் நடிப்பதற்காக அவரை ஒப்பந்தம் செய்து கொண்டார். சினிமாவில் நடிக்க முற்பட்டது முதல். எஸ். டி. எஸ். தம் கணவரின் டைரெக்ஷனில்லாத வேறு ஒருவரின் டைரெக்ஷனில் நடிக்க ஒப்புக் கொண்டது இப்படத்தில் தான்.

"பண"த்திற்குப் பிறகே எஸ். டி. எஸ். "அந்தமான் கைதி"க்கு ஒப்பந்தம் ஆனார் என்றாலும் பிந்திய படம் முன்னதாகவே வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கிறது. "பணம்" சீக்கிரமே வெளிவரவிருக்கிறது. இது தவிர அவர் தற்போது "மருமகள்" தமிழ் தெலுங்குப் படங்களில் (பத்மினியின் தாயாராக) நடித்துக் கொண்டிருக்கிறார்.

எஸ். டி. எஸ். ஒரு உன்னத நடிகை என்பதில் அபிப்பிராயபேதம் இருக்கவே முடியாது. வசீகரமான முகத் தோற்றத்தோடு, அந்த முகத்தில் பளிச்பளிச்சென பாவங்களைக் காட்டும் தேர்ச்சியும், சம்பாஷணைகளை வெகு சுத்தமாகப் பேசும் வன்மையும் கொண்டிருந்ததால்தான் நாடக உலகிலும் சரி; சினிமா உலகிலும் சரி; அவர் வெகு எளிதில் புகழ் பெற்று விட்டார். ஆனால், அவரது புகழ் உச்ச நிலைக்கு வந்தபோது, அவர் இடைவிடாமல் படங்களில் நடிக்காம

லும், பிறகு சுமார் 7 வருஷ காலம் சினிமாவில் நடிக்காமலேயும் இருந்தது அவர் செய்த பெரிய தவறாகும். அதனால் அவருக்குரிய உன்னத ஸ்தானத்தை அடைய முடியாமற் போய்விட்டது. என்னவானாலும், அவர் மீண்டும் படங்களில் நடிக்க வந்திருப்பதற்காக சினிமா ரஸிகர்கள் மிகவும் சந்தோஷிக்கின்றனர்.

சினிமா ரஸிகர்களைப் போலவே சமீப காலமாக நாடக ரஸிகர்களையும் சந்தோஷத்திலாழ்த்தி வருகிறார் எஸ். டி. எஸ். பதினேழு வருஷ காலமாய் பிரிந்திருந்த எம். கே. டி. பாகவதரும், எஸ். டி. எஸ். ஸும் மீண்டும் ஜோடி சேர்ந்து, நாடகங்களில் நடித்து வருவது விசேஷமாகக் குறிப்பிட வேண்டிய சம்பவமாகும். சமீபத்தில் இவ்விருவரும் நாகப்பட்டினம், முக்கூடல், சென்னை, ஆகிய இடங்களில் "பவளக்கொடி" நாடகத்தில் சேர்ந்து நடித்ததுள்ளனர்.

எஸ். டி. எஸ். சாதாரணமாய் சங்கீத கச்சேரிகள் செய்வதில்லை யென்றாலும். டில்லிக்குச் சென்றிருந்தபோது அங்கு கச்சேரி செய்து விட்டு வந்திருக்கிறார். அவர் ரேடியோவில்—டில்லி, சென்னை, திருச்சி நிலையங்களில் பல தடவை பாடியிருக்கிறார். கல்கத்தாவில் ஒரு முறை கதா காலக்ஷேபமும் செய்திருக்கிறார்.

எஸ். டி. எஸ். ஸுக்கு தமிழ்தான் தாய் பாஷை. இதுதவிர ஹிந்தி பாஷையும், ஓரளவு ஆங்கில, மலையாள பாஷைகளும் பேசத் தெரியும். மோட்டாரைத் தாமே ஓட்டிச் செல்லுவதில் அவருக்கு மிக இஷ்டம். மற்றும் சைக்கிள் விடவும் தெரியும். துணியில் பூ வேலை செய்வது, ரிங் – டென்னிஸ், கேரம்ஸ், சீட்டாட்டம் இவைகள் ஆடுவது, புத்திரன் கேட்கும் சரமாரியான கேள்விகளுக்கு சலிக்காமல் பதில் சொல்லுவது, இவை மூலம் அவர் பொழுது போக்குகிறார். ஆனால் அவருக்கு சமையல் வேலை மட்டும் துளிக்கூடத் தெரியாதாம்!


'படுசுட்டிப் பையன்'
"ராம்ஜி"

எஸ். டி. எஸ். ஸின் புத்திரன் (ராமச்சந்திரன்) ராம்ஜியைப் பற்றி எழுதாமற் போனால் அவன் என்னைச் சும்மா விடமாட்டான்! பாவம், எனக்காக அவன், தன் அப்பா அமெரிக்காவிலிருந்து வாங்கி வந்திருக்கும்-இந்தியாவில் இல்லாத-மிக நூதனமான பல விளையாட்டுச் சாமான்களை கண்காட்சி போல் பரப்பி வைத்து அவை ஒவ்வொன்றையும் பொறுமையோடு எனக்கு இயக்கிக் காட்டினான். அவன் அதோடு விடவில்லை: "என் போட்டோவைப் போட்டு—'ராம்ஜி படுசுட்டிப் பையன்' என்று எழுத வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறான். ஏதோ அவன் சொன்னான் என்று அலக்ஷியமாக நினைக்க வேண்டாம். அவன் உண்மையிலேயே ஒரு படுசுட்டிப் பையன்தான். இப்பொழுது அவன் கான்வென்ட் பள்ளியில் முதல் வகுப்பில் படித்து வருகிறான்.

எஸ். டி. எஸ். தெய்வ பக்தியும் தர்ம சிந்தனையும் உடையவர். அவர் சென்னையிலே தான் குடியேறி யுள்ளார் என்றாலும், ஸ்ரீவைகுண்டத்தில் 'சென்னை மாடலில்' ஒரு பெரிய பங்களாவை கட்டிக் கொண்டிருக்கிறார். அவர் தாயார், தகப்பனார் இருவரும் திடகாத்திரமுடன் அவரோடு வசித்து வருகின்றனர்.

சுமார் ஐந்தடி உயரமும், கனிசமான தேகக் கட்டும், கவர்ச்சிகரமான கண்களும், சிவந்த நிறமும் உடையவரான எஸ். டி. எஸ். ஸுக்கு தற்போது 35 வயதாகிறது. அவர் 1917ம் வருஷம் டிஸம்பர் மாதம் 5ந் தேதி பிறந்தவர்.

எஸ். டி. எஸ்.ஸைப் பார்ப்பவர்கள், அவரிடம் "சாதாரணமாய் சினிமா நக்ஷத்திரங்களிடம் காணப்படும் நடையுடை பாவனைகளுக்குப் பதில், ஒரு உயர் குடும்ப ஸ்திரீக்குரிய லக்ஷணங்கள் காணப்படுகின்றன" என்று சொல்லுவார்கள். தன் கண்யத்தைப் பக்குவமாகக் காப்பாற்றிக்கொண்டு, நன்மதிப்புடன் விளங்கி வருகிறாரல்லவா?

லதா மங்கேஷ்கர்

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

மறக்க முடியாது. நினைத்தால் 'இறக்கை முளைத்து பாகிஸ்தானுக்கு பறந்து போய் நூர்ஜஹானை சந்திக்க மாட்டோமா?' என்று தோன்றுகிறது.

ராதா:—சமீபத்தில் நீங்களும் அவரும் டெலிபோன் மூலம்கூட......?

லதா:—ஆம். டிரங் டெலிபோன் மூலம் பேசினோம். நான் போனிலேயே பாடிக் காட்டினேன். அவரும் எனக்கு ஒரு பாட்டுப் பாடினார்.

ராதா—குடும்பப் பெண்கள் சினிமாவில் சேர்வது பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

லதா:—அவர்களாக விரும்பினால் அவர்கள் வரலாம்; ஆனால் அவர்களை வரும்படி தூண்டக் கூடாது.

ராதா:—டைரெக்டர் எம். வி. ராமனைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

லதா:—அவர் அசகாய சூரர். ஒரு சிறந்த டைரெக்டர். தங்கமான குணம் படைத்தவர்.

ராதா:—கர்நாடக சங்கிதத்தில் உங்களுக்குப் பரிச்சயம் உண்டா?

[இந்த சந்தர்ப்பத்தில் எம். வி. ராமன் குறுக்கிட்டார். தமது அடுத்த படத்தில் லதா மங்கேஷ்கர் கர்நாடக மெட்டுகளில் பாடப் போவதாகக் கூறினார். தவிர, லதாவை ஒரு பாட்டுப் பாடும்படியும் செய்து விட்டார் எம். வி. ராமன்.

லதாவும் மிகவும் லஜ்ஜையுடன், "பக்த மீரா" படத்தில் எம். எஸ். எஸ். பாடிய 'மேரே கிரிதர கோபாலா' என்ற பாட்டைப் பாடினார். பின்னணி வாத்தியங்கள் எதுவுமின்றிப் பாடப்பட்ட போதிலும் அவரது பாட்டு வெகு இனிமையாக இருந்தது.

இதற்குள், வேலைக்காரன் காப்பி கொண்டு வந்து வைத்தான். நாங்கள் வியக்கும் வண்ணம், லதா எழுந்திருந்து அனைவருக்கும் காப்பியைத் தாமே 'கப்'களில் ஊற்றிக் கொடுத்தார்.]

ராதா:—நீங்கள் ஏன் வீணாக சிரமப்படுகிறீர்கள்?

லதா:—சிரமமா? நான் என்ன பெண் பிள்ளை யில்லையா? தவிர, இது என் கடமையல்லவா!

ராதா:—உங்களுக்குப் பிராணிகளை வளர்ப்பதில் பிரியம் உண்டா?

லதா:—ஓ! எனக்கு நாய்களை வளர்த்து ஒழிந்த வேளைகளில் அவைகளுடன் விளையாடுவதில் அலாதிப் பிரியம் உண்டு. சவகாசம் கிடைக்கும் போது நண்பர்களுடனும், உறவினர்களுடனும் உல்லாஸப் பிரயாணம் போவதில் விருப்பம் உண்டு.

ராதா:—நீங்கள் ஏன் மேனுடுகளுக்குப் போய் உங்கள் திறமையைக் காட்டக் கூடாது?

லதா:—போகப் போகிறேனே. அடுத்த வருஷம் மே மாதம் நான் இங்கிலாந்து போகப் போகிறேன். அங்கிருந்து, இந்தியன் ஹை கமிஷனர் ஸ்ரீ. பி. ஜி. கேர், என்னை வரும்படி அழைத்திருக்கிறார். நான் இந்திய சாஸ்திரிய சங்கீத இசைத் தட்டுகளை என்னுடன் நிறையக் கொண்டு போகப் போகிறேன். அவைகளின் பெருமையை அந்த நாட்டவர்கள் உணரச் செய்ய வேண்டும் என்பது என் விருப்பம். தவிர, பி. பி. ஸி.யில் பாட சந்தர்ப்பம் கிடைக்கும். கிடைத்தால், நான் மேனாட்டு சங்கீதத்தை இந்தியப் பாணியில் பாடப் போகிறேன்.

ராதா:—உங்கள் அபிலாஷை நிச்சயம் பூர்த்தி அடையும். நான் விடை பெற்றுக் கொள்கிறேன். நமஸ்தே.

லதா:—நமஸ்தேஜி!

சங்கீத நிகழ்ச்சிகள்

சென்ற மாதம் 9-ம் தேதி, தாம்பரம் சங்கீத ஸபாவின் ஆதரவில், சாத்தூர் ஏ. ஜி. சுப்ரமண்யத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

23-ம் தேதி, திருவல்லிக்கேணி, ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸபாவின் ஆதரவில், களக்காடு - எஸ். ராமநாராயண அய்யரின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

கச்சா பிலிம் உற்பத்தி

மைசூரில், 25 லக்ஷ ரூபாய்கள் மூலதனத்துடன் கச்சா பிலிம் உற்பத்திசாலை ஒன்றை ஆரம்பிக்க, மைசூர் சர்க்கார் தீர்மானித்துள்ளனர். இந்த முயற்சியில் தனிப்பட்ட நபர்களும், ராஜ்ய சர்க்காரும் பங்குபோட்டு நடத்துவார்களாம்.

வாழ்த்துகிறோம்

"காதல்" பத்திரிகையின் சைத்ரீகர் சிரஞ்சீவி எம். முத்து, சௌ. செல்வம் மாளை சென்ற மாதம் 28-ம் தேதி, சங்கரன் கோயிலில் மணந்தார்.

பிரம்மலோகம்

பெற்ற தாய்

பிரகாஷ் புரொடக்ஷன்ஸின் "பெற்ற தாய்" அவர்களது சொந்த ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது. குழந்தைக்கு தொட்டில் போடும் காட்சியொன்று சமீபத்தில் படமாகியது. ஜி. வரலக்ஷ்மி, நாகேஸ்வர ராவ், எம். என். நம்பியார் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். "கன்ன தல்லி" என்ற பெயரில் இதுவே தெலுங்கிலும் ஒரே சமயத்தில் படமாகி வருகிறது. இரு படங்களையும் பிரகாஷ் ராவ் டைரெக்ட் செய்து வருகிறார்.

நாம்

ஜுபிடர் – மேகலாவின் கூட்டுத் தயாரிப்பான "நாம்" படப் பிடிப்பு நடந்து வரும் வேகத்தைப் பார்த்தால் படம் ஜனவரியில் திரைக்கு வந்து விடலாம் என்றே தெரிகிறது. 'மாத்திரை முன்னேற்ற வைத்தியசாலை' சம்பந்தப்பட்ட காட்சிகள் சென்ற மாதம் இந்தப் படத்திற்கென நெப்டியூனில் தயாரிக்கப் பட்டன. அந்தக் காட்சியில் மாத்திரையாக எம். என். நம்பியாரும், தைலமாக எம். எஸ். எஸ். பாக்கியமும் நடித்தார்கள். எம். ஜி. ராமச்சந்திரன், பி. கே. சரஸ்வதி, வி. என். ஜானகி முக்கிய பாகங்களில் நடிக்கும் இப் படத்தை காசிலிங்கம் டைரெக்ட் செய்து வருகிறார்.

சொர்க்க வாசல்

நெப்டியூனில் மற்றொரு பக்கம் பரிமளாவின் "சொர்க்க வாசல்" வளர்ந்து வருகிறது. இப் படத்தையும் காசிலிங்கமே டைரெக்ட் செய்து வருகிறார். இப் படத்தின் கதை–வசனங்கள் ஸி. என். அண்ணாத்துரையால் எழுதப் பட்டுள்ளன. அஞ்சலி தேவி, கே. ஆர். ராமசாமி பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

பணக்காரி

பிரபல நாவலான ஆனா கெரீனினாவைத் தழுவித் தயாரிக்கப் பட்டு வரும் உமா-ஓம் கூட்டுத் தயாரிப்பான "பணக்காரி" இன்னும் இரண்டு மாதங்களில் திரைக்கு வந்து விடுமாம். சமீபத்தில் டி. ஆர். ராஜகுமாரி, எம்.ஜி. ராமச்சந்திரன், இந்திரா ஆசார்யா என்ற புது முகம் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாகியது. வி.நாகய்யா, டி. எஸ். துரைராஜ், ஜாவர் சீதாராமன் ஆகியவர்களும் நடித்து வரும் இப் படம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரெக்ஷனில் நியூடோனில் தயாராகி வருகிறது.

வேலைக்காரி மகள்

"சம்சாரம்" தெலுங்குப் படத்தைத் தயாரித்து வெற்றி கண்ட ராஜ்யம் பிக்சர்ஸாரது தயாரிப்பான "தாஸி" தமிழிலும் தயாரிக்கப் பட்டு வருகிறது. "வேலைக்காரி மகள்" என்ற இப் படத்தின் பூரண உரிமையை, பிரபல பட விநியோகஸ்தர்களான பெல் பிக்சர்ஸார் பெற்றிருக்கிறார்கள். என். டி. ராமராவ், லக்ஷ்மி ராஜ்யம், ரங்க ராவ், ரேலங்கி, சூர்யகாந்தம் ஆகிய பலர் நடித்து வரும் படம் இது. டைரெக்டர் பிரஸாத் மேற்பார்வையில், ரங்கநாத தாஸ் என்பவர் டைரெக்ஷனில் இப்பொழுது படத்தின் இறுதிவேலைகள் நடைபெற்று வருகின்றன.

தேவதாஸ்

விநோதா பிக்சர்ஸின் "தேவதாஸ்" தமிழ்–தெலுங்குப் படங்களின் வேலை அநேகமாக முடிவடைந்து விட்டதாம். தமிழ்ப் படத்தின் வசனங்களை "உதய குமார்" எழுதியிருக்கிறார். நாகேஸ்வர ராவ், சாவித்திரி, எஸ். வி. ரங்க ராவ் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். இரு பாஷைப் படங்களும் ஜனவரியில் திரைக்கு வந்து விடக் கூடும்.

வஞ்சம்

ரோஹிணி பிக்சர்ஸின் "வஞ்சம்" தமிழ்-தெலுங்குப் படங்கள் ரோஹிணி ஸ்டுடியோவில் சுறுசுறுப்பாக ஒய். ஆர். ஸ்வாமி டைரெக்ஷனில் படமாகி வருகின்றன. ராஜனலா, காந்த ராவ், கே. சாரங்கபாணி, சாவித்திரி, மது, சீதா–ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். இப் படத்தின் கதை 'ஜாவர்' சீதாராமனால் எழுதப் பட்டது. பெரும் பகுதி வசனங்கள் கூட அவரால் எழுதப்பட்டவை யாகும்.

பூங்கோதை

நேஷனல்புரொடக்ஷன்ஸின் வெளியீடாக "பூங்கோதை" தமிழ் நாட்டில் ஜனவரி மாதம் திரையிட்டு விடப்படும். அஞ்சலி பிக்சர்ஸாரின் தயாரிப்பு இப் படம். படத்தை எல். வி. பிரஸாத் டைரெ

யும் பாரதியாரின் "கண்ணன் என் சேவகன்"—என்ற பாடலுக்கு பதாபிநயம் மிக்க ரஸனையுடன் இருந்தது. "தாயே யசோதா", "மதுரா நகரிலோ", "தீராத விளையாட்டுப் பிள்ளை" முதலிய பதங்களுக்கும் அபிநயம் கச்சிதமாக அமைந்திருந்தன. "காற்றுடி நடனம்" என்ற நிகழ்ச்சியில் விசேஷமாக எதையும் சொல்வதற்கில்லை. "உழவன் நடனம்" என்ற கடைசி நிகழ்ச்சி கிராம்மிய நடனப் பாணியை எடுத்துக்காட்ட போதுமானதாக இருந்தது.

அன்றையக் கச்சேரியில் டி. எஸ், ஷண்முகசுந்தரம் பிள்ளையின் நட்டுவாங்கமும், வி. சதாசிவத்தின் ரஸானந்தமான பாட்டும், லக்ஷ்மணய்யரின் குழலோசையும் குறிப்பிடத்தக்கவை.

நந்தி"

13 4138

அரங்கேற்றங்கள்

சென்ற மாதம் 12-ம் தேதி, குமாரி ரமணியின் பரத நாட்டிய அரங்கேற்றம், மயிலை ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் நடைபெற்றது. அன்றைய அரங்கேற்றத்துக்கு மந்திரி கனம் யூ. கிருஷ்ணராவ் தலைமை வகித்தார். வழுவூராரின் சிஷ்யையான சரஸ்வதியின் சிஷ்யையாம் இந்த குமாரி ரமணி.

கொச்சி சகோதரிகளின் (குமாரிகள் என். சரோஜா, என். சகுந்தலா) பரத நாட்டிய அரங்கேற்றம் சென்ற மாதம் 14-ம் தேதி, மயிலை ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் நடைபெற்றது. இந்த சகோதரிகள் வழுவூராரின் சிஷ்யரான எம். எஸ். ராமஸ்வாமியின் சிஷ்யைகள் ஆவர். அன்றைய அரங்கேற்றத்திற்கு நீதிபதி கனம் ஏ. எஸ். பி. அய்யர் தலைமை வகித்தார்.

இது * செய்தி

(11ம் பக்கத் தொடர்ச்சி)

எம். வி. ராமனுக்கு வரவேற்பு

ஜம்பு ப்ரொடக்ஷன்ஸ் "ஸ்வாகன்" ஹிந்திப் பட விஷயமாக பம்பாய் போயிருந்த டைரெக்டர் எம். வி. ராமனுக்கு அங்கு ஒரு வரவேற்பும், விருந்தும் அளிக்கப் பட்டது. "பில்ம் ஏஜ்" என்ற சினிமாப் பத்திரிகை ஆசிரியர் கே. எம். முல்டானி அளித்த இந்த வரவேற்பில் பம்பாய் பத்திரிகாசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நக்ஷத்திரங்களுக்கு அபராதம்

"பி. கே. சரோஜா என்ற நடிகை குடி போதையில் இருந்ததாக அவர்மீது கோவை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு வழக்கு இருந்தது. இந்த பி.கே.சரோஜா என்பவர் கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோவில் தயாராகிவரும் "பொன்னி" படத்தில் நடித்து வருகிறார். வழக்கை விசாரித்த மாஜிஸ்டிரேட் நடிகைக்கு நூறு ரூபாய் அபராதம் விதித்தார்.

"பராசக்தி" படத்தில் பூசாரியாக நடித்தவரும், பல படங்களுக்கு பாட்டுகள் எழுதியுள்ளவருமான கே. பி. காமாட்சி மீது காவேரிப்பாக்கம் போலீஸார் "அவர் குடிபோதையில் இருந்ததாக ஒரு வழக்கைத் தொடர்ந்திருந்தனர். வழக்கு விசாரிக்கப்பட்டு, அவருக்கு முப்பது ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

கலை அன்பர்கள் கழகம்

சென்ற மாதம் 16ம் தேதி மதுரை, கலை அன்பர்கள் கழகத்தினர், "பராசக்தி"யில் நடித்த சிவாஜி கணேசனைப் பாராட்ட ஒரு விழாவை நடத்தினர்கள். கழகத்தின் சார்பில் அவருக்கு ஒரு வாழ்த்து மடல் வாசித்து அளிக்கப்பட்டது. தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு வந்தனம் தெரிவித்தபோது, நடிகர் கணேசன் நகைச்சுவை ததும்பப் பேசினர். நாடகக் கலைமீது தமக்கு உள்ள பற்றுதலையும், நன்றியையும் வெளியிட்டு, "நடிகன் கட்சி சார்பற்றவன். படத்திற்காக ஏதேதோ வசனங்களை நான் பேச வேண்டி வரலாம். அதனல் நான் அந்தக் கொள்கையுடையவன் அல்ல" என்று தெரிவித்தார்.

வாழ்த்துகிறோம்

கே. பி. காஸ்டர் ஆயில் வொர்க்ஸ் முதலாளி கே. பி. பாலசுந்தரம் அவர்களின் சகொதரன் சிரஞ்சீவி கே. பி. பாலஷண்முகம், சௌ. பார்வதியம்மாளைத் தமது வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார். சென்ற மாதம் 20-ம் தேதி மண்ணார்காடுவில் நடைபெற்ற இவ்விவாகத்தையொட்டி. கோவையில் சிறப்பாக 22-ம் தேதி ஒரு வரவேற்பு நடைபெற்றது.

Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1.

தமிழ் நாடெங்கும் வெற்றிகரமாக
இப்போது நடை பெற்று வருகின்றது

M.S. திரௌபதி
திக்குரிசி
தங்கம்
பிரேம்நசீர்
நடித்தது

உடன் பிறந்தோரின் உயர்வைக்-
காட்டும் கே & கேயின்

பசியின் கொடுமை

(தமிழ்)

சென்னையில் **காஸினோ - ஸ்ரீ கிருஷ்ணா**

ஆகிய தியேட்டர்களில் நடைபெறுகிறது


அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்கள்!
P.A.R.
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
தந்தி "ராஜா"
போன்: 268